யாழ்ப்பாணம்.

இரண்டாம் பதிப்பு

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 149 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 11 திங்கட்கிழமை 24.04.2017

ஜி.எஸ்.பி. பிளஸ் இலங்கைக்கு இந்த ஆண்டில் கிடைக்காது!

இராஜதந்திரிகள் கணிப்பு

கொழும்பு, ஏப். 24

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் இலங்கை அரசு இழுத்தடிப்புக்கள் செய்வதால் இந்த ஆண்டு >> 24

பதறுகிறார் மகிந்த

போரை நடத்திய தலைவர்களை பன்னாட்டு நீதிமன்றில் நிறுத்த சிறப்புச் சட்டம் தயாரிக்கிறதாம் அரசு

கொழும்பு, ஏப். 24

"போரை முடிவுக்கு கொண்டுவந்த தலைவர்களை போர்க்குற்றச்சாட்டின் கீழ் தண்டனை வழங்குவதற்காக, அவர்களை பன்னாட்டு போர்க்குற்ற நீதிமன்றத்துக்கு அனுப்புவதற்காக சிறப்புச் சட்டவரைவை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்துள்ளது"

இவ்வாறு குற்றஞ்சாட்டுகிறார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச. >> 24

மே நடுப்பகுதிவரை கடும் வெப்பநிலை

கொழும்பு, ஏப். 24

வெப்பமான காலநிலை அடுத்த மாதம் இரண்டாம் வாரம் வரை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் அதிகபட்ச வெப்பநிலையாக, திருகோணமலையில் 37.7 பாகை வெப்ப நிலை பதிவாகியுள்ளது.

நாட்டுக்கு மேலாக உலர் காற்று வீசுவதால் >> 24

பலாலி வானூர்தித் தள விரிவாக்கத்துக்கு

மேலும் காணிகளை சுவீகரிக்கக்கூடாது

வட மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றும்

யாழ்ப்பாணம், ஏப். 24

பலாலி வானூர்தித் தளத்தை விரிவாக்கும்போது மேலும் காணிகள் சுவீகரிக்கப்படக் கூடாது என்று வலியுறுத்தி வடக்கு மாகாண சபையில் பிரேரணை நிறைவேற்றப்படவுள்ளது. வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணையாக இதனை முன்மொழியவுள்ளார்.

"முதலாவது வடக்கு >> 24

வாக்குறுதிகளை நிறைவேற்ற இலங்கைக்கு இதுவே தருணம்

ஜேர்மனி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 24

ஜெனிவாவில் 2015ஆம் ஆண்டு இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசர நடவடிக்கைகளெடுக்க வேண்டிய தருணம் இது என்று ஜேர்மனி தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான >> 24

அரசு பாராமுகமாக இருப்பதால்

வடக்கு - கிழக்கில் வியாழனன்று கடையடைப்பு

கிளிநொச்சியில் போராட்டம் நடத்தும் காணாமற்போனோரின் உறவினர்கள் அழைப்பு

கிளிநொச்சி, ஏப்ரல் 24

கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் மாத்திரம் அல்லாது வடக்கு - கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் எதிர்வரும் வியாழக்கிழமை கடையடைப்புப் போராட்டத்தை நடத்த அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கங்களின் இணைப்பாளர் வலியுறுத்தினார். கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவுகளின் தொடர் போராட்டம் 63ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. அரசு தொடர்ந்தும் >> 24

முச்சக்கர முரளி

அவற்றை அரசியலுக்கு இடையிடையே இப்படித்தான் பீலா விடுவார்...

வடக்கிலிருந்து கால்நடைகள் கொண்டு செல்லத் தடை

மாகாண சபையில் வருகிறது பிரேரணை

யாழ்ப்பாணம், ஏப். 24

வடக்கு மாகாணத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு கால்நடைகளைக் கொண்டுசெல்வதற்கு நடைமுறையில் உள்ள அனுமதியை உடனடியாகநீக்க வலியுறுத்தி வடக்கு மாகாண சபையில் எதிர்வரும் 27ஆம் திகதி தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனால் இந்தப் பிரேரணை முன்மொழியப்படவுள்ளது.

"வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தில் பெரும் பங்கை வழங்குகின்ற >> 24

ஐ.நா. அமைதிப் படையில் கடமையாற்றி

பாலியல் குற்றச்சாட்டுக்குள்ளான படை அதிகாரிகள் பணி நீக்கமாம்

கொழும்பு, ஏப். 24

பாலியல்துர்நடத்தை குற்றச்சாட்டுக்குள்ளான, ஐ.நா. அமைதிப் படையில் இடம் பெற்றிருந்த இலங்கை இராணுவத்தின் தளபதி மற்றும் சிப்பாய்கள் சில ஆண்டுகளுக்கு முன்னரே பணியிலிருந்து நீக்கப்பட்டு விட்டனர் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

"ஹெய்ட்டியில் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இலங்கை வீரர்கள் 2008ஆம் ஆண்டு >> 24

இளம் பெண்ணை பலாத்காரம் செய்ய முயன்றவர் மக்களிடம் சிக்கினார்

தீவகத்தில் நேற்றுமுன்தினம் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 24

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட, ஆள்நடமாட்டம் குறைந்த பிரதேசத்தில் வீட்டில் தனிந்திருந்த இளம்பெண்ணை, மயக்க மருந்து விசிறி பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்த முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"இளம் பெண் கூச்சலிடவே, அருகிலிருந்து வந்த மக்கள் சந்தேகநபரைப் பிடித்து முறையாகக் கவனித்து பொலிஸில் ஒப்படைத்தனர். அவரை >> 24

எரிபொருள் விநியோகத்தில் வடக்கில் பாதிப்பு ஏற்படாது

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 24

பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்க ஊழியர்கள் நேற்று நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர். இந்தப் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை காரணமாக வடக்கில் எரிபொருள் விநியோகத்தில் எதுவித பாதிப்பும் ஏற்படாதுஎன்று வடக்குமாகாண பெற்றோலியக் கூட்டுத் தாபன விநியோகப் பிரிவு தெரிவித்தது.

'திருகோணமலை துறைமுகத்திலுள்ள எண்ணெய்த் >> 04

குடாநாட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்றிரவு பெரும் கியூ

யாழ்ப்பாணம், ஏப். 24

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்று தகவல் நேற்றுமாலை தீயாகப் பரவியதால் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் வரிசையில் நின்றே எரிபொருள் நிரப்ப வேண்டிய நிலமை ஏற்பட்டது.

மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகளுக்கு பெற்றோல் நிரப்புதல் மற்றும் வாகனங்களுக்கு டீசல் நிரப்புவதற்காக நேற்று முன்னிரவு வரை பலர் வரிசையில் நின்றனர்.

(வ-5)

கொக்கிளாய் வாடி அமைக்கும் விவகாரம்

குழப்பங்களின் பின்னர் இன்று நீதிமன்றில் வழக்கு விசாரணை

முல்லைத்தீவு, ஏப். 24

முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரைப் பகுதியில் உள்ளூர், தென்னிலங்கை மீனவர்கள் வாடி அமைப்பது தொடர்பாக கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற நில அளவீட்டுப் பணிகளின் போது ஏற்பட்ட குழப்பங்களின் பின்னர் அது தொடர்பான வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் இன்று விசாரணைக்கு வருகிறது.

முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரையில் கரை >> 24

இலங்கைப் பணக் கட்டுகள் தமிழகக் கரையில் சிக்கின

சென்னை, ஏப். 24

தமிழகத்தில் பெசன்ட் நகர் கடற்கரையில் இருந்து இலங்கைப் பணம் கட்டுக்கட்டாக மீட்கப்பட்டுள்ளது. இந்திய மதிப்பில் இதன் மொத்த மதிப்பு 2 லட்சம் ரூபாய் என்று >> 24

வடக்கு கூட்டுறவு ஆணையாளரின் நியமனம் திடீர் நீக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 24

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக திருமதி அ.சாந்தசீலன் நியமிக்கப்பட்டு, அவர் பதவியேற்பதற்கு முன்னதாக அவரது நியமனம் நீக்கப்படுவதாக திடீரென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திடீர் நீக்கத்துக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

வடக்கு மாகாண ஆளுநரால், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக திருமதி அ.சாந்தசீலன் நியமிக்கப்பட்டிருந்தார். இன்றைய தினம் பதவியேற்குமாறு அவருக்குத் தெரிவிக்கப் >> 24

அமெரிக்காவுக்கு வடகொரியா மீண்டும் மிரட்டல்

பியாங்யாங், ஏப். 24

கொரியத் தீபகற்பத்தில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்காவின் மிகப்பெரிய போர்க் கப்பலான வின்சனை மூழ்கடிக்கத் தயார் என்று வடகொரியா நேற்று அறிவித்தது.

வடகொரியாவுக்கு எதிராக சீனாவும் அமெரிக்காவும் இணைந்து கூட்டுப் >> 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

பாதிக்கப்பட்ட சமூகம் சாராத சிவில் அமைப்புக்கள் புற்றீசலாக வடக்கு, கிழக்கை நோக்கி வருகின்றன

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 24

"போர்க்காலத்திலும், அதற்கு முன்னரும் மக்களுடன் இணைந்து பணியாற்றிய, மக்களின் குரலாக ஒலித்த சிவில் அமைப்புக்களினது தன்னார்வத் தொண்டு பணிகள் ஆட்சி மாற்றத்தின் பின்பும் கருத்திற்கொள்ளப்படவில்லை. பாதிக்கப்பட்ட சமூகம் சாராத நீண்ட போரின் அனுபவங்களோடு தொடர்பில்லாத வெறுமனே வளங்களை தமதாக்கிக் கொள்வதற்காக புற்றீசலாக வடக்கு, கிழக்கை நோக்கி பறந்து வருபவர்கள் தொடர்பாக எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்"

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் தே.தேவானந்த் தெரிவித்தார்.

அந்த அமைப்பு சார்பாக அவரால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இயங்கிவருகின்ற ஒரு கூட்டமைப்பாகும். 28 தன்னார்வத் தொண்டுப் பணி நிறுவனங்களின் ஒன்றிணைந்த அமைப்பாக, கட்சி அரசியல் சாரா அமைப்பாக அது இயங்கி வருகின்றது. இடப்பெயர்வு, சுனாமி, போர்க் காலங்களில் மக்களின் நலனுக்காக அயராது இணையம் உழைத்திருக்கிறது. இதனால் கடந்த அரசால் பல நெருக்கடிகளுக்கும் இணையம் ஆளாகியிருந்தது. இந்தக் காலகட்டத்தில் சிவில் சமூகங்களின் தன்னார்வத் தொண்டுப் பணிகளை முடக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட பல வகையான கட்டுப்பாடுகள் மற்றும் மறைமுகமான அழுத்தங்கள் காரணமாக தன்னார்வத் தொண்டுப் பணிகளை பல சிவில் சமூக அமைப்புக்கள் இடை நிறுத்திக் கொண்டன. இருந்தாலும் உள்ளூர் நிறுவனங்கள் தமது தன்னார்வத் தொண்டுப்

பணிகளை தமது இயலாற்றலுக்கு ஏற்ப அவர்கள் செயற்படுத்தி வந்தார்கள்.

இந்த நிலையில் 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் நடைபெற்று, புதிய அரசு பொறுப்பேற்றுக் கொண்டது. அதன் வழி சுதந்திரமான சூழல் உருவாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அந்தச் சூழலில் சிவில் அமைப்புக்களும் தமது மக்களுக்கான தன்னார்வத் தொண்டுப் பணிகளை வழங்கும் சூழல் உருவாகும் என்று எதிர்பார்த்தார்கள். புதிய அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின்னரும் அதற்கான முன்னேற்றம் ஏற்படுத்தவில்லை எனலாம்.

கடந்த அரசால் நிர்மூலமாக்கப்பட்ட சிவில் அமைப்புக்களினது தன்னார்வத் தொண்டுப் பணிகள் கருத்திற் கொள்ளப்படவில்லை. அது பற்றி பன்னாட்டு நீதிக் கொடையாளர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்கள், பன்னாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கை அரசு மற்றும் வடக்கு மாகாண சபை போன்றவை கவனம் செலுத்தவில்லை எனலாம். ஆனால் இதே காலகட்டத்தில் சிவில் சமூக அமைப்புக்களின் முக்கியத்துவம் பற்றி அதிக எவில் பேசப்பட்டிருக்கிறது. சிவில் சமூக அமைப்புக்களின் குரல்கள் ஐ.நா. சபையின் மனித உரிமை சபையில் முக்கியம் பெற்றிருக்கின்றன.

போரினாலும் கடந்த அரசின் செயற்பாடுகளாலும் பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலித்த சிவில் அமைப்புக்களின் மீள் கட்டுமானத்துக்கு போதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் புதிய சிவில் அமைப்புக்கள் புற்றீசல் போல உருவாக்கப்பட்டன. அவ்வாறான புதிய சிவில் அமைப்புக்களை நோக்கி வளங்கள் திசை முகப்படுத்தப்பட்டன. இந்த நுட்பமான செயலாக்கத்தால் வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்டவர்களின் பெயர்களால் கொழும்பை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட சிவில் அமைப்புக்கள் வளங்களைத் தமதாக்கிக் கொண்டன.

நிர்வாகச்செலவுகளுக்காக அதிகளவு வளங்கள் ஒதுக்கப்பட்டன. புதிது புதிதாக பல காரியாலயங்கள் உருவாக்கப்பட்டு குறுங்காலத்தில் மூடப்பட்டன. இதனை பல்வேறு நாடுகளின் தூதுவர்கள், பன்னாட்டு நீதிக் கொடை நிறுவனங்கள், ஐ.நா. சபையின் அமைப்புக்கள் ஏன் புரிந்து கொள்ளவில்லை? என்ற கேள்வி உண்டு. வடக்குக் கிழக்கில் சிவில் சமூக அமைப்புக்களை வலுப்படுத்தவதற்கு வடக்குக் கிழக்கில் தொடர்பில்லாத அமைப்புக்களுக்கு வளங்களை அள்ளி வழங்குவதன் நோக்கம் என்ன? யாழ்ப்பாண மாவட்டத்தின் 28 அமைப்புக்கள் சார்பாக வெளிநாடுகளின் தூதுவர்களுக்கும் ஐ.நா. சபையின் அமைப்புக்களுக்கும் பன்னாட்டு நீதிக்கொடையாளர் கள், இலங்கை அரசு மற்றும் வடக்கு மாகாண சபை போன்றோருக்கும் வினயமாக கேட்டுக் கொள்வது.

கடந்த ஆட்சியாளர்களால் நிர்மூலமாக்கப்பட்ட வடக்குக் கிழக்கின் சிவில் சமூகங்களை மீள்நிர்மாணம் செய்வதற்கு அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த மீள் நிர்மாணம் என்பது பாதிக்கப்பட்ட பகுதிகளின் சிவில் அமைப்புக்களின் பங்குபற்றுதலுடன் திட்டங்களை வடிவமைத்தல், அவர்களிடமே பொறுப்புக்களை ஒப்படைத்தல், அவர்களே செயற்பாடுகளுக்கு சொந்தம் கொண்டாடுதல் என்ற அடிப்படையில் அமைதல் வேண்டும். பாதிக்கப்பட்ட சமூகம் சாராத அல்லது நீண்ட போரின் அனுபவங்களோடு தொடர்பில்லாத வெறுமனே வளங்களை தமதாக்கிக் கொள்வதற்காக புற்றீசலாக வடக்கு, கிழக்கை நோக்கி பறந்து வருபவர்கள் தொடர்பாக எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். அவர்களின் செயற்பாடுள் திட்டங்கள் தொடர்பான வெளிப்படைத் தன்மையை பேணுவதற்கு உதவவேண்டும். புற்றீசலாக முளைக்கின்ற சிவில் சமூக அமைப்புக்களுக்கு பின்னால் ஒரு திட்டமிடப்பட்ட வலையமைப்பும் அரசியலும் உள்ளன என்பதை புரிந்து கொண்டு பாதிக்கப்பட்டோரின் நலன்சார்ந்து செயற்படுவதற்கான வழிப்படுத்தும் ஆற்றலைப் பெறுதல் வேண்டும்.

ஆங்கிலத்தில் பேசுதல் ஆங்கிலத்தில் நன்றாக அறிக்கையிடுதல் என்ற தகுதிகளைக் கொண்டிருக்கின்ற பாதிக்கப்பட்ட சமூகம் சாராதோர் வளங்களைச் சுருட்டிக் கொள்வதற்கான வாய்ப்புக்களைத் தடுத்து பாதிக்கப்பட்ட சமூகத்தின் மீள் நிர்மாணத் துக்கு உதவுவதற்கான வழிகளைக் கண்டு கொண்டு பாதிக்கப்பட்டவர்கள் வலுவடைவதற்கான வாய்ப்புக்களுக்கான உறுதிப்பாட்டை நிலை நிறுத்த வேண்டும். பாதிக்கப்பட்டசமூகத்தின் மீள்கட்டுமானமே நிலையான அமைதிக்கும், மீள் நல்லிணக்கத்துக்கும், நிலைமாறுகால நீதிக்கும் வித்திடும். மாறாக கண்துடைப்பாக அவை மேற்கொள்ளப்படாமல் இருக்க அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட யாழ்ப்பாண மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அழைப்புவிடுக்கின்றது என்றுள்ளது.

(வ-21)

தந்தை செல்வா நினைவுப் பேருரை யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும்

யாழ்ப்பாணம், ஏப். 24

தந்தை செல்வா நினைவுப் பேருரை நாளை மறுதினம் புதன் கிழமை யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் நடைபெறவுள்ளது.

அத்துடன் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் ஊடாக முதன் முறையாக நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டது.

தந்தை செல்வாவின் 40ஆவது நினைவு தினம் நாளை மறுதினம் புதன்கிழமை கடைப்பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தந்தை செல்வா நினைவாக நிறுவப்பட்ட செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை தற்போது பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. அதன் ஒரு பகுதியாக, இன்றைய மாணவர்களுக்கு தந்தை செல்வாவின் செயற்பாடு மற்றும் பணிகள் பற்றிய விளக்கங்களையும், அதன் மூலம் தமிழினம் விடுதலை பெறுவதற்கான விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் நோக்குடன் இந்த ஆண்டு தொடக்கம் மாணவர்களிடையே பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

ஜி.சீ.ஈ. உயர் தரத்தைச் சேர்ந்த மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஒவ்வோர் போட்டியிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள், கேடயம், நினைவுநூல் என்பன வழங்கும் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் புதன் கிழமை காலை 11.45 மணிக்கு, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு தந்தை செல்வாவின் இளைய புதல்வரும், ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் நிறுவுனருமாகிய மூத்த சட்டத்தரணி சந்திரகாசன் தலைமை தாங்குவார். தகைசார் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் சிறப் புரையாற்றுவார்.

தந்தை செல்வா நினைவுப் பேருரை, தந்தை செல்வா நினைவுத் திடலில், புதன் கிழமை காலை 9.30 மணிக்கு, தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழுத் தலைவர் சு.ஜெபநேசன் தலைமையில் நடைபெறும். நினைவுப் பேருரையை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ண நிகழ்த்துவார்.

கொழும்பில், புதிய கதிரேசன் மண்டபத்தில் அன்று மாலை 5 மணிக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் நினைவுப் பேருரை நடைபெறும். நினைவுப் பேருரையை, அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன நிகழ்த்துவார். இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-6)

லசந்த படுகொலைச் சந்தேகநபருக்கு மகிந்த ஆட்சியில் இராஜதந்திரப் பதவி

ஆதாரங்கள் சிக்கியுள்ளனவாம்

கொழும்பு, ஏப். 24

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலையுடன் தொடர்புடைய முதன்மைச் சந்தேகநபரான இராணுவப் புலனாய்வு அதிகாரிக்கு, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச வெளிநாட்டில் இராஜதந்திரப் பதவியை வழங்கினார் என்று புதிய ஆதாரம் வெளியாகியுள்ளதாக, ஆங்கில இணைய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

"லசந்த விக்கிரமதுங்க கொலையுடனோ ஏனைய ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலுடனோ தனக்குத் தொடர்பில்லை என்று கோத்தபாய ராஜபக்ச மறுத்து வரும் நிலையில், இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபரான இராணுவப் புலனாய்வு அதிகாரிக்கு அவர் தாய்லாந்தில் உள்ள தூதரகத்தில் இராஜதந்திரப் பதவியைப் பெற்றுக்கொடுத்தமைக்கான புதிய ஆதாரங்கள் சிக்கியுள்ளன.

மேஜர் பண்டார புலத்வத்த என்ற இராணுவப் புலனாய்வு அதிகாரியை, பாங்கொக்கில் உள்ள தூதரகத்தில் இரண்டாவது செயலராக நியமிக்க கோத்தபாய பரிந்துரைத்திருந்தமைக்கான ஆதாரம் கிடைத்துள்ளது. 2010ஆம் ஆண்டு அரச தலைவருக்கான தேர்தலுக்கு ஒரு வாரம் முன்னதாக இந்த நியமனம் வழங்கப்பட்டதாகவும் அவசரமாகத் தயாரிக்கப்பட்ட கடிதத்தில், பாங்கொக்கில் உள்ள தூதரகத்தில் இரண்டாவது செயலராக இருந்த அதிகாரியை திருப்பி அழைத்து விட்டு, அந்தப் பதவிக்கு புலனாய்வு அதிகாரியான மேஜர் புலத்வத்தவை நியமிக்குமாறு கோத்தபாய ராஜபக்ச, அயலுறவுத் துறைச் செயலரிடம் கோரியிருந்தார்.

அந்தக் கடிதத்துடன் மேஜர் புலத்வத்தவின் சுய விவரக்கோவையும் இணைக்கப்படவில்லை. அயலுறவுத்துறை அமைச்சின் நியமன ஒழுங்கு முறைப்படியும், நுழைவிசைவு பெறுவதற்கும் சுயவிவரக் கோவை முக்கியமான போதிலும், அது இணைக்கப்படாமல் அவசரமாக அந்தக் கடிதம் அனுப்பப்பட்டது.

இந்தக் கடிதம் 2010ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதி கோத்தபாய ராஜபக்சவால் வழங்கப்பட்டது. இது உண்மையானது என்று பாதுகாப்பு அமைச்சின் அப்போதைய மேலதிக செயலர் ரவி அருந்தவநாதன் உறுதி செய்திருந்தார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், தேர்தல் ஆணையாளருடன் கலந்தாலோசிக்காமல், பொதுச்சேவை அதிகாரிகளை இடமாற்றம் செய்ய முடியாது. தேர்தலுக்கு ஒரு வாரம் முன்னதாக, மேஜர் புலத்வத்தவுக்கு வழங்கப்பட்ட நியமனத்தில், அவ்வாறான ஒழுங்குமுறை கையாளப்பட்டிருக்கவில்லை.

மகிந்த ராஜபக்ச அரச தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டு, சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டதையடுத்து, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தனது முடிவை மாற்றிக் கொண்டார். தேசிய பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு மேஜர் புலத்வத்தவின் நியமனத்தை நிறுத்துமாறு அயலுறவுத்துறைச் செயலரை அவர் கேட்டுக் கொண்டார்.

தேசிய பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக, மேஜர் புலத்வத்த கொழும்பில் இருக்க வேண்டியது அவசியம் என்பதால், அடுத்த அறிவிப்பு வரும் வரையில், அவர் புறப்பட்டுச் செல்வதை பிற்போடுமாறு, அப்போதைய தேசிய புலனாய்வு தலைவர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண அயலுறவுத்துறைச் செயலரிடம் கடிதம் மூலம் கோரியிருந்தார்.

லசந்த கொலை நடந்த இடத்திலும், ஏனைய ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களின் போதும், மேஜர் புலத்வத்த இருந்தமைக்கான தொழில்நுட்ப சான்றுகள் மற்றும் தொலைபேசிப் பதிவுகள் கிடைத்துள்ளன. அவரும், ஏனைய ஆறு புலனாய்வு அதிகாரிகளும் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்" என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பன்னங்கண்டி, மருதநகரில் கஞ்சா பாவனை அதிகரிப்பு

குற்றஞ்சாட்டுகின்றனர் பிரதேச மக்கள்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மருதநகர் மற்றும் பன்னங்கண்டி கிராமங்களில் கஞ்சா போதைப்பொருள் அதிகமாகப் பாவனையிலுள்ளது என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

இளைஞர்களும், பதின்மவயதுடைய ஆண்பிள்ளைகளும் இலகுவாக போதைப்பழக்கத்துக்கு அடிமையாகி வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் படிப்படியாக தமது வாழ்வை மீளக் கட்டியெழுப்பிவரும் நிலையில் இவ்வாறான போதைப் பொருள்களின் புழக்கம் சமூகத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

"திட்டமிட்ட வகையில் குறிப்பிட்ட ஒருசிலர் தமது சுகபோக வாழ்வுக்காக மிகவும் சூட்சுமமான முறையில் இதுபோன்ற சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

பன்னங்கண்டி மற்றும் மருதநகர் விளையாட்டு மைதானங்களில் மாலை ஆறுமணிக்குப் பின்னர் கூடும் இளைஞர்களுக்கு பகிரங்கமாக கஞ்சா விற்பனை செய்யப்படுவதை அவதானிக்க முடியும்.

கடந்த இருதினங்கள் மருதநகர் விளையாட்டு மைதானத்தில் உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற்ற வேளையில் குறிப்பிட்ட நபர்கள் சிலர் பகிரங்கமாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டதைக் காணமுடிந்தது.

கஞ்சா விற்பனையில் ஈடுபடும் நபர்கள் பொலிஸாரின் வருகையை உளவுபார்ப்பதற்காக இரகசியமாக ஆள்களை வைத்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

பொலிஸார் விசேட ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதுதொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்து சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும்." என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"கிளிநொச்சி மாவட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் நாம் விசேட தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். குறிப்பாக பாரதிபுரம் பிரதேசத்தில் பலரைக் கைதுசெய்து சட்டநடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

மேற்குறிப்பிட்ட கிராமங்களில் எதிர்வரும் நாள்களில் விசேட தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். இதுதொடர்பில் பொதுமக்கள் எமக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும்." என்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ற-ய)

கொழும்பு அரசில் குறைகளை வைத்துக்கொண்டு

மாகாண சபையின் அதிகாரங்களை பறிக்க முயல்வது சரியான செயலா?

கிழக்கு முதலமைச்சர் கேள்வி

கொலன்னாவ மீதொட்டுமுல்ல குப்பை மேட்டு சரிவு தொடர்பில் கொழும்பு அரசின் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் மாகாண சபையின் அதிகாரங்களை பறிக்க முயல்வது எந்த வகையில் நியாயம்.? இவ்வாறு கேள்வியெழுப்பினார் கிழக்கு மாகாண முதலமைச்சர் காபிஸ் நசீர் அகமட்.

ஏறாவூரில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

தேசிய ரீதியில் கழிவகற்றல் முகாமைத்துவம் தொடர்பில் உரிய திட்டங்கள் இன்மையாலேயே கடந்த ஆட்சிக் காலத்திலும், இந்த ஆட்சிக் காலத்திலும் குப்பைகளைக் கொட்டுகின்ற இடங்கள் தொடர்பில் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அரசுகள் மாறி மாறி வந்த போதிலும், குப்பைகளைக் கொட்டுவது தொடர்பான பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை வழங்க முடியாதுள்ளது. கொலன்னாவையிலுள்ள குப்பைகளை புத்தளத்துக்குக் கொண்டு செல்ல முயற்சிக்கப்படுகின்றது என்றும், அந்தக் குப்பைகளை தமது பகுதிக்கு கொண்டு வர வேண்டாம் எனக் கூறி புத்தளம் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கின்றனர். குப்பைகளை இடம்மாற்றுவது நாட்டின் கழிவு முகாமைத்துவத் திட்டமாக அமையாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்-என்றார். (ற-10)

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்த வலியுறுத்தி

2 மாதங்கள் கடந்து தொடர்கின்றன போராட்டங்கள்

கிளிநொச்சி, ஏப்.24

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி நடத்தப்பட்டுவரும் தொடர் போராட்டங்கள் இரு மாதங்களைக் கடந்து தொடர்கின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் கோரிக்கைகள் தொடர்பில் இதுவரை சாதகமான எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை.

வடக்கு மாகாணத்தில் 4 மாவட்டங்களிலும், கிழக்கிலும் தொடர் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும், கிழக்கில் திருகோணமலையிலும் பகல், இரவு என்று பாராது தொடர்ச்சியாகப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. தமது உறவுகளை மீட்கும் வரை தாம் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் உறுதியுடன் உள்ளனர். தமது கோரிக்கைகள் தொடர்பில் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் தொடர்ந்தும் மௌனம் காப்பார்களேயானால் தமது போராட்ட வடிவத்தை மாற்றுவோம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

"எங்கள் போராட்டத்தை கேலிக்கூத்தாக்கி மழுங்கடிக்கச்செய்யமுயற்சிக்கக்கூடாது." என்று முல்லைத் தீவு மாவட்டச் செயலகம் முன்பாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

"உலகில் மிகக் கொடுமையான விடயம், பெற்றவர்கள் உயிருடன் இருக்கும்போது பிள்ளைகளை எமனிடம் பறிகொடுப்பது. அதற்கு ஒரு படி மேலாகவே நாங்கள் தினமும் நரகவேதனையை அனுபவிக்கின்றோம். எங்கள் பிள்ளைகளுக்கு என்ன நடந்ததோ என்று ஒவ்வொரு நொடியும் பரிதவித்துக் கொண்டிருக்கின்றோம். எம்முடன் இணைந்து எமக்கு ஆதரவு தராவிட்டாலும்பரவாயில்லை. எங்கள் மனதை நோகடிக்காது இருங்கள். எங்களைச் சூழ நடக்கும் விடயங்களைப் பார்க்கும்போது வேதனையாக இருக்கின்றது. எங்களின் கோரிக்கைகளின் நியாயத்தைப் புரிந்து கொண்டு எமக்கு விரைவாகத் தீர்வு கிடைக்க அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்"என்றுஅவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

கிளிநொச்சியில் 63 ஆவது நாளாகவும், வவுனியாவில் 59 ஆவது நாளாகவும், யாழ்ப்பாணம் மருதங்கேணியில் 40 ஆவது நாளாகவும், திருகோணமலையில் 50 ஆவது நாளாகவும் நேற்றுப் போராட்டங்கள் தொடர்ந்தன. (ற-21-7-35)

அரச மருத்துவ அதிகாரிகளுக்கு அதிகாரம் இல்லை!

கொழும்பு, ஏப். 24

நாட்டின் மருத்துவ கல்வி விடயத்தில் தலையிட அரச மருத்துவ அதிகாரிகளுக்கு அதிகாரம் இல்லை என்று தெரிவித்தார் உயர் கல்வி மற்றும் பெரும் தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கண்டியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

சைட்டம் தனியார் மருத்துவ பல்கலைக் கழகம் குறித்து அண்மையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வழங்கிய தீர்மானங்களில் மாற்றம் எதுவும் இல்லை.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கமானது, அரசியல் தேவைகளுக்காக அரசு முன்னெடுக்கும் திட்டங்களுக்கு எதிர்ப்பு வெளியிடுகின்றது என்றார். (ற-10)

கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகம் நாளை திறக்கப்படும்

மட்டக்களப்பு, ஏப்.24

தமிழ் சிங்களப் புத்தாண்டு மற்றும் நாட்டில் பல பாகங்களிலும் பரவிவந்த வைரஸ் காய்ச்சல் காரணமாக விடுமுறை வழங்கப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகம் மீண்டும் கல்வி நடவடிக்கைகளுக்காக நாளை 25ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மீண்டும் ஆரம்பமாகும் என்று உபவேந்தர் கலாநிதி தங்கமுத்து ஜயசிங்கம் தெரிவித்தார்.

வளாகத்தின் சகல பீடங்களினதும் கல்வி நடவடிக்கைள் மீள ஆரம்பமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிற்போடப்பட்டுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 21ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா புதிய வேந்தர் நியமிக்கப்பட்டதும் அவரது பிரசன்னத்துடன் தாமதமின்றி இடம் பெறுமென்றும் அவர் கூறினார். (ற-ய-46)

வைத்தியசாலை அபிவிருத்திக்காக ரூபா 2,895 மில்லியன் நிதி தேவை

கொழும்பு சுகாதார அமைச்சரிடம் வடக்கு சுகாதார அமைச்சு கோரியது

யாழ்ப்பாணம், ஏப்.24

வடமாகாண சுகாதாரத்திணைக்களத்தின் கீழ் 5 மாவட்டத்திலும் உள்ள வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்காக 2 ஆயிரத்து 895 மில்லியன் ரூபா நிதி கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்தனவிடம் கோரப்பட்டுள்ளது. இந்த நிதி மூலம் 28 திட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடமாகாண சுகாதாரத்திணைக்களத்தின் கீழ் 5 மாவட்டத்திலும் உள்ள பல் வைத்தியசாலைகளில் பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது. இனங் காணப்பட்ட தேவைகள் தொடர்பில் அண்மையில் வடக்குக்கு வந்த சுகாதார அமைச்சருக்குத் தெளிவுபடுத்தினோம். அவற்றில் அவசியம் என்று கருதப்பட்ட 28 திட்டங்களுக்கான செலவு மதிப்பீட்டுடன் அவற்றின் விவரங்களைச் சமர்ப்பித்தோம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ள எண்ணிய 9 திட்டங்களுக்காக 235 மில்லியன் ரூபாவும், வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ள எண்ணியுள்ள 8 திட்டங்களுக்காக 2 ஆயிரத்து 173 மில்லியன் ரூபாவும், மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளத்திட்டமிடப்பட்ட 6 திட்டங்களுக்காக 190 மில்லியன் ரூபாவும் கோரியுள்ளோம். கிளிநொச்சியில் ஒரு திட்டத்திற்காக 70 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 திட்டங்களுக்காக 227மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 2 ஆயிரத்து 895 மில்லியன் ரூபா தேவை எனக் கண்டறியப்பட்டு அதற்கான திட்ட அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்டங்களில் மத்திய சுகாதார அமைச்சால் உடனடியாக அனுமதிக்கப்படக் கூடிய திட்டங்கள் தொடர்பில் ஆய்வின் பின்னர் சுகாதார அமைச்சரால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். இவை விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. என்றார். (ற-101)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். குடாநாட்டு விவசாயிகளுக்கு

உள்ளூர் மரக்கறி விதைகள் அடுத்த வாரம் விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாண மாவட்ட விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தின் சிக்கோ பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி விதைகள் யாவும் அடுத்த வாரத்தில் இருந்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் என்று சிக்கோ பொது முகாமையாளர் ரி.ரவி மயூரன் தெரிவித்தார்.

"கத்தரி, பயிற்றை, பாகல், கீரை போன்ற மரக்கறி விதைகளை விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியும். சிக்கோ விதை உற்பத்தி பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட இந்த மரக்கறி விதைகள் விவசாயிகளுக்கு தாராளமாக விநியோகிக்கப் படும்.

உள்ளூர்மரக்கறிவிதைகளுக்கு குடாநாட்டில் பற்றாக்குறை நிலவி வந்தன. வெளிமாவட்டங்களில் இருந்து தருவிக்கப்படும் மரக்கறி விதைகள் கூடுதலாக முளை திறன் அற்றே காணப்பட்டன.

இந்த நிலையில் சிக்கோவால் உற்பத்தி செய்யப்பட்ட உள்ளூர் மரக்கறி விதைகளை யாழ்ப் பாணமாவட்டத்தில்உள்ளகமநல சேவை நிலையங்களில் அடுத்த வாரத்திலிருந்து விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியும்" என்று சிக்கோ பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (வ-17)

தராசுகளுக்கு சீலிடும் பணிகள் காவலூரில் இன்றும் நாளையும்

ஊர்காவற்றுறை, ஏப். 22

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் எல் லைக்குட்பட்ட சகல வர்த்தகர்களினதும் நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவி களுக்கு முத்திரையிடல் நடவடிக்கை இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க் கிழமையும் முன்னெடுக்கப்படும் என்று ஊர் காவற்றுறைப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறைபிரதேசசபையின்தலைமை அலுவலகத்தில் இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் காலை 9 மணி முதல் பி.ப. 3 மணிவரை முத்திரையி டும் பணிகள் நடைபெறும்.

வர்த்தகர்கள் நிறுவைகள், அளவைகள் மற் றும் நிறுக்கும் கருவிகளுடன் குறித்த தினத் தில் சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள் ளார். (வ)

யாழ்ப்பாண நகர் ஏ-9 முதன்மைச் சாலையில் நேற் றுப் பதிவாகிய ஒளிப்படம். முகநூலிலிருந்து பெறப் பட்டது. (வ-37)

வடக்கு அதிகாரிகள் குழு ஆஸ்திரேலியா பயணம்

கடல் நீரை குடிதண்ணீராக்கும் திட்டம் குறித்து நேரில் ஆராயும்

கொழும்பு, ஏப். 24

கடல்நீரை குடிதண்ணீ ராக் கும்திட்டம்தொடர்பில்நேரில் பார்வையிட்டு அதுதொடர் பில் ஆய்வை மேற்கொள் ளும் நோக்கில் வடக்கு மாகாண அதிகாரிகள் 15 பேர் அடங்கிய குழுவினர் ஆஸ்தி ரேலியாவுக்கு நேற்று அதி காலை பயணமாகினர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலத்தடி நீர் மாசடைவதைய டுத்து குடிதண் ணீருக்குப் பற்றாக்குறை ஏற்படும் என்று அறியப்பட்டது. குடாநாட்டின் குடிதண்ணீர் தேவையை நிறைவு செய்ய கிளிநொச்சி இரணைமடுக் குளத்திலி ருந்து நீரைப் பெறுவது என்று திட்டமிடப்பட்டது. இர ணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நீர் விநி யோகம் இடம்பெற்றால் கிளி நொச்சி மாவட்டத்தின் 30 ஆயிரம் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனச்சுட்டிக்காட்டப்பட்டது. அந்தத் திட்டம் மாற்றி யமைக்கப்பட்டது. கடல் நீரை குடிதண்ணீராக்கும் திட்டத்தை முன்னெடுக்க தீர் மானிக்கப்பட்டது. வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் பணிகள் முன்னெடுக் கப்பட் டன. மருதங்கேணியில் இருந்து கடல்நீரை குடிதண் ணீராக்கும் திட்டம் முன்னெ டுக்கப்பட்டால், அதன் மூலம் தமது வாழ்வாதாரம் பாதிக் கப்படும் என்ற குற்றச்சாட்டு தற்போது எழுந்துள்ளது.

கடல் நீரை குடிதண்ணீ ராக் கு ம் தி ட் ட த் தை முன்னெடுக்கும் நாடுகளில் ஒன்றாக ஆஸ்திரேலியா உள்ளது. அங்கு ஓர் மாநிலத் தில் மட்டும் 5.6 மில்லியன் மக்களின் குடிதண் ணீர் தேவைக்காக கடல்நீரே பயன்படுத்தப்படுகிறது. கடல் நீரை குடிதண்ணீ ராக்கும் திட்டம் முன்னெடுக்கப் படுவ தன் காரணமாக கடலில் ஏற்படும் மாற்றம், கடலிருந்து நீ ர ை எ டு த் து உ ப் பு ச் செறிவை பிரிப்பதனால் உயி ரினங்களுக்கு ஆபத்து ஏற்ப டுமா? உள்ளிட்டவை தொடர் பில் நேரில் ஆராய்வதற்கு வடக்கு மாகாண அதிகாரிகள் 15 பேர் அடங்கிய குழுவினர் ஆஸ்திரேலியாவுக்கு பயண மாகினர்.

தேசிய நீர்வழங்கல் வடிகால மைப்பு அதிகார சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பயணத்தில்வடக்குமாகாண தலைமைச் செயலாளர் அ.பத்திநாதன், யாழப்பாண மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண நீர் வழங்கல் வடி காலப்புச் சபையின் பணிப்பா ளர் ஆகியோரும் அடங்கு கின்றனர். இந்தக் குழுவினர் எதிர்வரும் முதலாம் திகதி வரை அங்கு தங்கியிருந்து ஆய்வில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-101)

காணி விடுவிப்பை விரைவுபடுத்த வேண்டி தேங்காய் உடைத்து சிறப்பு வழிபாடு

முல்லைத்தீவு, ஏப். 24

கடற்படையினரின் கட்டுப்பாட் டில் உள்ள தமது பூர்வீகக் காணிகள் விரைவாக விடு விக்கப் படவேண்டும் என்று வேண்டி கேப்பாப்பிலவு மக் கள் இன்று வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத் தில் தேங்காய் உடைத்து வழி பாடு செய்யவுள்ளனர்.

கேப்பாபிலவு மக்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் கா ணி க ளை வி டு வி க் க வேண்டும்என்று வலியுறுத்தி மக்கள் தொடர் அறவழிப் போராட்டம் நடத்தி வருகின்ற னர். அவர்களின் போராட்டம் நேற்று 54 ஆவது நாளாகத் தொடர்ந் தது.

"கேப்பாபிலவில் உள்ள 67 குடும்பங் களின் 111 ஏக்கர் காணியும் வற்றாப் பளை புதுக்குடியிருப்பு வீதியும் விடு விக்கப்படும் என தெரிவிக்கப்பட்ட அது தொடர்பாக உறுதியான காலவரைய றைகள் இதுவரை வழங்கப்பட வில்லை. தலைமுறை தலைமுறை யாக வாழ்ந்து வந்த எங்கள் பூர்வீக நிலத்தில் எங்களை விரைவாக குடிய மர்த்த வேண்டும் அதுவரைக்கும் எங்கள் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர மாட்டோம்" என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் உறுதியுடன் தெரிவித்தனர்.

காணிகளுக்குள் கால்பதிக்கும் வரைக்

கும் தொடர் அமைதிவழிப் போராட் டத்தை உறுதியாக முன்னெடுத்துச் செல்வதற்கான மன உறுதி வேண்டி யும், விரைவாக காணிகளுக்குச் செல் வதற்கு அருள்பாலிக்க வேண்டியும் கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் அமைந்துள்ள பிள்ளையார் கோவி லில் நேற்று சிறப்பு வழிபாடுகள் நடத் தப்பட்டன. பிள்ளையார் கோவிலில் வைத்து சிறப்பு வழிபாடு செய்த தேங் காயை இன்று வற்றாப்பளைக் கண் ணகி அம்மன் ஆலயத்தில் உடைத்து வழிபாடு செய்யவுள்ளனர்.

"காணிகளை விடுவிப்பதற்கு தெய்வத் தின் அருளும் எமக்கு கிடைக்க வேண் டும் என்பதற்காக சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டோம்" என்று கேப்பாபிலவு மக் கள் தெரிவித்தனர். (ற-7)

பொலிஸ் சீருடையை நிறம் மாற்றத் திட்டம்

கொழும்பு, ஏப். 24

இலங்கைப் பொலிஸாரின் சீருடை யில் நிறமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக பொலிஸ்மா அதி பர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

இலங்கையின் 478ஆவது பொலிஸ் நிலையமாக அமைக்கப்பட்டுள்ள பண் டாரவளை ஹல்துமுல்லை பொலிஸ் நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ் வில் பங்குபற்றிய போது இலங்கைப் பொலிஸாரின் சீருடை நிறத்தை நீல நிறமாக மாற்றுவதற்கு எதிர்பார்த்துள் ளதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித் தார். (வ-5)

வெங்காயவெடி வைத்திருந்த குற்றச்சாட்டுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஏப். 24

வெங்காயவெடி இரண்டை தனது உ டை மையில் வை த் தி ரு ந் த குற்றச்சாட்டில் கட்டுவனைச் சேர்ந்த நபர் ஒருவர், காங்கேசன்துறைப் பொலிஸாரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

"தையிட்டிப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற் கொள்ளப்பட்ட விசாரணைகளில், பன் றிக்கு வைப்பதற்காக வெங்காயவெடி யைக் கொண்டு சென்றதாக அவர் கூறினார். சந்தேக நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லா கம் நீதிவான் உத்தரவிட்டார்" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-5-26)

முதலாம் பக்கத்தொடர்ச்சி...

எரிபொருள்...

தாங்கிகளை இந்திய நிறுவனத்துக்கு (ஐ.ஓ.எல்.) வழங்க அரசு எடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின் றோம். அரசின் மேற்படி முடிவுகள் எமது தொழிற்சங்கங்களை பாதிக்கும் விதத்தில் அமைந்துள்ளன.

பணிப் புறக்கணிப்பு காரணமாக நாடு முழுவ தும் எரிபொருள் பற்றாக்குறை நிலவும் அபா யம் காணப்படலாம்' என்று பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்கங்களின் ஒன்றிய ஏற்பாட்டாளர் டீ.ஜே.ராஜகருணா தெரிவித் தார்.

(வ-5,17)

நாடாளுமன்றச் செயலாளர்களிடம் சில விவரங்களைக் கேட்கிறார் கரு

கொழும்பு, ஏப். 24

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நாடாளுமன்றச் செயலாளர்கள் தொடர்பான சில விடயங்களை வெளிப்படுத்தும் அறிக்கை வெளியிடப்படவேண்டும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய கேட்டுக் கொண்டுள்ளார் என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றத்தின் தலைமைச் செயலாள ரும், பிரதிச் செயலாளரும் 2012ஆம் ஆண்டு தொடக்கம் இந்த ஆண்டு வரையிலான ஐந்து வருடங்களில் மேற்கொண்ட உத்தி யோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்கள், அவர்கள் பாவித்த உத்தியோகபூர்வ வாக னங்கள் போன்ற விவரங்கள் வெளியிடப்பட வேண்டுமென்றே சபாநாயகர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வெளிநாட்டுப் பயணங்களுக்கு எடுத்த காலம், செலவு செய்த தொகை, வானூர்தி பயணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற் குப் பின்பற்றிய வழிமுறைகள், அந்தப் பய ணச் சீட்டுக்களின் பெறுமதி போன்ற விவரங் கள் தனித்தனியாக தரப்படவேண்டுமென வும் அவர் கோரியுள்ளார்.

களின் நாடாளுமன்றச் செயலாளர்கள் உச்ச பட்சமாக வருடத்துக்கு ஒரேயொரு வெளிநாட் டுப் பயணத்தையே மேற்கொள்கின்றனர். எமது நாட்டில் தங்கள் எண்ணத்துக்கு இவ் வாறான பயணங்களை மேற்கொள்வது முறையற்றது. கடந்த ஐந்து வருடங்களில் எமது நாடாளுமன்ற செயலாளரும், பிரதிச் செயலாளரும் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்கள் பற்றிய சகல விவரங்களும் இந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்" என்று சபாநாயகர் பணித்துள் ளார். (வ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

50 வருட காலமாக யாழ் குடாநாட்டு மக்களின் நன்மதிப்பைபெற்ற உங்கள் அபிமான

மைதிலி நகைமாடம் இன்

தங்கத்திருநாளாம் அக்ஷய திருதியை கொண்டாட்டம்

இம்மாதம் (29.04.2017) 29 ஆம் திகதி வரை எம்மிடம் நகை வாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களின் சிட்டைகளும், குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு விசேட பரிசுகள் காத்திருக்கின்றன.

முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகள்
தங்க நாணயங்கள், மேலும் 10 ஆறுதல் பரிசுகள்

அன்றைய தினத்துக்கான (28,29 ஆம் திகதி) விசேட சலுகைகள்

- அதி நவீன டிசைனுக்கேற்ப நம்ப முடியாத விலைக் கழிவுகள் வழங்கப்படும்.
- பழைய நகைகளைக் கொடுத்து நகை வாங்குவோருக்கு அன்றைய பவுண் விலைக்கே எடுக்கப்படும்.
- குறிப்பிட்ட நகைகள் தங்க விலைக்கே சேதாரம் இல்லாமல் வழங்கப்படும்.
- நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் அதி விசேட பரிசு காத்திருக்கின்றது.
- 02 பவுணுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு பவுண் காசு அன்பளிப்பாக வழங்கப்படும்.

காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை கடை திறந்திருக்கும்

அக்ஷய திருதியை

அர்த்தமுள்ள அக்ஷய திருதியில் பொன், பொருள் வாங்கினால் செல்வம் பெருகும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

செல்வத்துக்கு அதிபதியான குபேரன் நான் இழந்த சங்க நிதி. பதும நிதி களை பெற்றது அக்ஷய திருதியை நாளில்தான். பாண்டவர்கள் வன வாசத் தின்போது சூரியனிடம் இருந்து அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரம் பெற்றது இந்த நாளில்தான். அதேபோல் மணிமேகலையும் இந்த நாளில் தான் அக்ஷய பாத்திரம் பெற்றுள்ளார். ஆம் உங்கள் சௌபாக்கியம் குறை யாத வாழ்வின் அதிர்ஸ்டம் பெருகிட தூய தங்க ஆபரணாங்களை உங்கள் ஒவ்வொருவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லத் தவறாதீர்கள்.

யாழ் மைதிலி ஜூவலர்ஸ்

89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 7902 | 79 Z, Sea Street, Colombo-11. Tel: 2396239.

நியூ

வீ.எம்.கே ஜுவல்லர்ஸ்



80/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 720 1117 / 021 222 2515

தங்கத்திருநாளாம்
அக்ஷய திருதியை
தினமான 28,29 / 04/ 2017 ஆம்
திகதிகளில் எம்மிடம்

வீ.எம்.கே

ஜுவல்லர்ஸ் இல்

நகைகள் வாங்கும் அனைவருக்கும்
விசேட அன்பளிப்புப் பொருள்கள்
வழங்கப்படும். அழகிய
டிசைன்களில் அசல் 22 கரட் தங்க
நகைகளை கொள்வனவு செய்து
ஜஸ்வரியத்தை அள்ளி செல்லுங்கள்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே! அன்றைய தினம் கால தாமதத்தை குறைக்கும் பொருட்டு முன்கூட்டியே நகைகளை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கண்டி வீதி, சாவகச்சேரி ☎ 021 227 1616 / 077 7849369

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிகளில் பொருத்தப்பட்டிருந்த சோலர்களைத் திருடியவர் கைது

கிளிநொச்சி, ஏப்.24

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளில் பிரதேச சபையால் பொருத்தப்பட்டிருந்த மூன்று சோலர்களைத் திருடிய நபரைக் கைது செய்ததுடன், சோலர்களும் மீட்டுள்ளன என்று பளைப் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையால் கிராமங்களுக்குச் செல்லும் வீதிகளில் சோலர் விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. தர்மக்கேணி, சோரன்பற்று, சின்னத்தளையடி செல்லும் வீதிகளில் பொருத்தப்பட்டிருந்த சோலர்கள் பற்றிகளுடன் கடந்த மாதம் காணமல் போயிருந்தன. இது தொடர்பாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலாளர் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். பளை நகர்பகுதியில் உள்ள பண்ணை ஒன்றில் ஆடுகளைத் திருடி, இறைச்சியாக்கி விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் பளை பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். இத்தாவில் பகுதியில் உள்ள அவரது உறவினர் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, மூன்று சோலர்கள் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபரை கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போது, சந்தேகநபரை 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்கமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஜ-6)

மாயக்கல்லிமலையில் விகாரை அமைப்பதை நிறுத்தாவிடில்

அம்பாறை முழுவதும் போராட்டம் வெடிக்கும்

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எச்சரிக்கை

அம்பாறை,ஏப்.24

"அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாணிக்கமடு மாயக்கல்லிமலையை அண்டிய பகுதியில் முஸ்லிம்களின் காணிகளை அபகரித்து பௌத்த விகாரையை அமைப்பதற்கு எடுக்கப்படும் அடாவடி நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தவறினால் அம்பாறை மாவட்டம் முழுவதும் போராட்டம் வெடிக்கும்"

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான மூத்த சட்டத்தரணி ஆரிப்சம் சுஜன் எச்சரித்தார். அரசசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் நிந்தவூர் பிரதேச செயலகச் சங்கத்தின் 16 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

அம்பாறை மாவட்டத்தில் பௌத்த பேரினவாத நடவடிக்கைகளால் சிறுபான்மை சமுகங்கள், குறிப்பாக முஸ்லிம்கள் பெரும் இக்கட்டான நிலமைகளுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த அநீதிகளையும் பேரினவாத அடக்குமுறைகளையும் அனுமதித்து நாம் வாழமுடியாது.

மாயக்கல்லிமலை

அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் பிரதேச செயகப் பிரிவிலுள்ள தமிழ் மக்கள் வாழும் மாணிக்க மடுவிலுள்ள மாயக்கல்லி மலையில் திடீரென பௌத்த பிக்குகளும் சிங்களக் குழுவினரும் புத்தர் சிலை ஒன்றை வைத்து அண்மையில் பிரச்சினையைத் தோற்றவித்தனர்.

அது போதாதென்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் பௌத்த பிக்குகளான பௌத்த பேரினவாதிகள் சிலர் மாயக்கல்லிமலையை அண்டிய பகுதியிலுள்ள முஸ்லிம்களின் காணிகளில் அத்துமீறி பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கு முற்பட்டனர். இறக்காமம் பிரதேசமக்கள் அதற்கு நேரடியாகத் திரண்டு ஆட்சேபித்துள்ளதுடன் நீதி நடவடிக்கையிலும் இறங்கியுள்ளனர்.

முந்நூறு, நானூறு வருடங்களாக நாமறியாத சரித்திரங்களைப் பொய்யுரைத்துக் கொண்டும் வனபரிபாலனத் திணைக்களம், தொல்பொருள் பாதுகாப்பு என்ற போர்வையில் முஸ்லிம்களின் பூர்வீகக் காணிகளைத் திட்டமிட்டு அபகரிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கப் படுகின்றனர்.

தியாகம்

இந்தச் சூழ்ச்சிகர நடவடிக்கைகளைத் தூண்டித்துணை போகும் சில அம்பாறை நகர அரசியல் தலைமைகள் தீகவாப்பி புனித பிரதேசத் திட்டத்தை முழுமைப்படுத்துவதற்கு மேலும் 17 பௌத்த உபவிகாரைகளை அமைக்கப்போவதாகவும் சூளுரைத்துள்ளனர்.

அன்றேல் தமது அரசியல் பதவிகளையே விட்டெறி யப் போவதாகக் கூறுகின்றனர்.

ஆனால் இந்தத் தோரணையில் இனவெறிக்கும்பலின் செயற்பாடுகள் இந்த மாவட்டத்தில் மேலும் தொடருமானால் நாம் பதவிகளை மட்டுமல்ல உயிரையும் எம் உரிமைகளுக்காகத் தியாகம் செய்வதற்குத் தயங்கமாட்டோம். நாங்கள் பனங்காட்டு நரிகள். இந்தச் சலசலப்புகளுக்கெல்லாம் அஞ்சி ஒடுங்கவோ, சோரம் போகவோ மாட்டோம்.

நியாயம்

இன்றுமாயக்கல்லிமலைவிவகாரம்பூதாகரமாகியுள்ளது. எம்மக்களுக்கு அநீதி இழைக்கப்படத்துளியும் இடமளிக்க முடியாது. நியாயம் கிடைக்க வேண்டும்.

நீதி வேண்டிய எமது நடவடிக்கைகளுக்கு பயனளிக்காவிட்டால் அம்பாறை மாவட்டம் முழுவதும் மக்கள் போராட்டம் வெடிக்கும்.

இந்த விடயம் இறக்காமம் மாணிக்கமடு பிரதேச மக்களுக்கு மட்டும் உரியதென்று ஏனைய பிரதேச மக்கள் அக்கறையற்று இருக்க இந்த மாவட்ட முஸ்லிம் மக்களனைவரும். இங்கு பௌத்த பேரினவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களும் இணைந்து இதற்காகப் போராடத்தயாராக வேண்டும்.

காணிகள் எமது வாழ்வியல் உரிமையாகும். ஒருபோதும் நாம் விட்டுக் கொடுக்க முடியாது" - என்றார். (ஜ-30)

அரச நிறுவனங்களின் செயற்திறன் வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 24

அரச நிறுவனங்களின் செயற்திறன் 74 வீதமாகக் குறைவடைந்துள்ளது என்று அரச தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் அஜித்.கே.திலகரட்ன தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது.

அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செயற்திறன் தொடர்பில் அரச தொழிற்சங்க சம்மேளனம் நடத்திய ஆய்வின் மூலம், இவற்றின் செயற்றிறன் வீழ்ச்சியடைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

21 வீதமான அரச நிறுவனங்களது செயற்பாடேதிருப்தியடையக் கூடிய வகையில் உள்ளது.

அரச தொழிற்சங்க சம்மேளனத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு அறிக்கை, அரச தலைவர் மைத்திரி பாலசிறிசேனவிடம் கையளிக்கப்படும். - என்றார். (ஜ-10)

பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.
இடம் (மானிப்பாய்)
076 697 2287 (CS/3457)

ஆள் தேவை
உரும்பிராயில் உள்ள உணவகத்துக்கு ரொட்டி, கொத்து வேலைக்கு ஆள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(CS29452)
தொடர்பு :- 076 534 7035

Beacon Tutory
மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
BIOLOGY மாணவர்களுக்கு
25.04.2017 செவ்வாய் ஆரம்பம்
1.30 PM தாழ்வகை தாவரங்கள்
உயிரியல் தொழில்நுட்பம் மாணவர்களுக்கு
4.30 PM மாமூலக்கூறுகள்
NB: BIO CENTRE இல் 3 PM
G.C.E. (A/L) 2019
தொடர்பு : 077 665 5290
மூத்த ஆசான் நரேந்திரன்

சேவை நலன் பாராட்டு வாழ்த்து
சின்னத்துரை இராசேந்திரன்
(ஆய்வுகூட உதவியாளர் -
யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்)

சேவை விவரம்
யா/ மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்
05.08.1998 - 11.07.2000
யாழ் / டிறிபேக்கல்லூரி
12.07.2000 - 15.04.2002
யாழ் / வரணி மகாவித்தியாலயம்
16.04.2002 - 07.07.2004
யாழ் / நாவற்குழி மகா வித்தியாலயம்
08.07.2004 - 24.04.2017
எமது பாடசாலையில் ஆய்வுகூட உதவியாளராகத் தடம்பதித்து விஞ்ஞான பாடத்துக்கு வியத்தகு உதவிகள் புரிந்து சேவையில் சிகரமாய், குணத்தில் குன்றாய், கடமையில் வீரனாய் செயலாற்றி ஓய்வுபெறும் இந் நாளில் அவர் தம் குடும்பத்துடன் சீரும் சிறப்புமாக வாழ பாராட்டி வாழ்த்தி நிற்கிறோம்.
பாடசாலைச் சமூகம்
(சி.எஸ்.3461) (13.17)
யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்

ஓம் ஸ்ரீ துர்க்கா ஜோதிடம்
பண்டித் ராமராயு
077 835 7307, 077 839 5119

காதல், கணவன், மனைவி, பிள்ளைகள் பிரச்சினை, பொலீஸ் முறைப்பாடுகள், வசீகரம், உத்தியோகப் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினைகள், குழந்தைகள் இல்லாதவர்களுக்கு குழந்தைப் பாக்கியம், பில்லி சூனியம் போன்ற பல பிரச்சினைகளைத்தீர்த்து வைப்பார்.
25 நாள்களுக்குள் முழுவு கிடைக்கும்
எந்த மதமும் வரலாம் நேரம்:- 8.00am-6.00pm
இல: 129, மேல்மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(மாநகரசபை கட்டடம் முன்பாக மாங்கல்யா கடை அருகில்)

சிவன் ஜோதிடம்
இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்
076 585 9977 , 077 835 7307
துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்
மெய்யன்பர்களே !
இந்தியாவின் புகழ் பெற்ற மாந்தீரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது, வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.
இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,
(வெடிகுமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)
யாழ்ப்பாணம்.
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வைத்தீசுவரக்குருக்களின் சிரார்த்த தின நிகழ்வு இன்று

காரைநகர், ஏப். 24

காரைநகர் மணிவாசகர் சபையின் நிறுவுனர் அமரர் கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீசுவரக்குருக்களின் இரண்டாவது சிரார்த்த தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் அமைந்துள்ள மணிவாசகர் மண்டபத்தில் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

மணிவாசகர் சபையின் தலைவரும் காரை நகர் யாழ்ற்றன் கல்லூரி அதிபருமான வே.முருகமூர்த்தி தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் நினைவுப் பேருரை, கூட்டுப் பிரார்த்தனை, ஆராதனை மற்றும் வழிபாடுகள் என்பன நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-250)

சாலை விபத்தில் முதியவர் காயம்

தென்மராட்சி, ஏப். 23

முச்சக்கர வண்டியை முந்திச் செல்ல முயன்ற கார், முச்சக்கர வண்டியில் ஏற முற்பட்ட முதியவரை மோதித் தள்ளி விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் சாலையில் தூக்கி வீசப்பட்ட முதியவர் படுகாயங்களுக்குள்ளானார் என்று தெரிவிக்கப்பட்டது

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கொடிகாமத்தில் இடம்பெற்றது.

கொடிகாமம், மீசாலை வடக்கைச் சேர்ந்த நடுவிலான் திருவடி (வயது 71) என்ற முதியவரே படுகாயமடைந்தார். கொடிகாமம் சென்றுவிட்டு வீடு திரும்புவதற்காக சாலையோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டியில் ஏறியபோதேமுச்சக்கரவண்டியைமுந்தமுயன்ற கார் மோதியது எனத் தெரிவிக்கப்பட்டது.

தலை மற்றும் கை ஆகியவற்றில் காயங்களுக்கு உள்ளான முதியவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (வ-9)

ட்ராக்டர் - மோ.சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, கச்சாய் சந்தியில் உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் ப்காயமடைந்தனர். அவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டனர்.

இந்தச்சம்பவம்நேற்று மு.ப. இடம்பெற்றது.

படுகாயமடைந்தவர்களில் மீசாலை தெற்கைச் சேர்ந்த பாலச்சந்திரன் நந்தீஸ்வரன் (வயது-20) என்ற இளைஞன் காலில் பாதிப்புஎற்பட்டநிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப் பாண போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அல்லாரை தெற்கைச் சேர்ந்த திரவியநாயகம் சத்தியராஜ்(வயது -22) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

கும்பாபிசேகம்

யாழ்ப்பாணம், ஏப்.24

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் பாலஸ்தாபன கும்பாபிசேகம் இன்று திங்கட்கிழமை காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

மரண அறிவித்தல்

சிவகுமார் மாய்யறீய் (குளோறிட்)

கனடாவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல தொழிலதிபருமான (SS.M.தொழிலதிபர் கனடா - றொறன்டோ) சிவகுமார் மாய்யறீய் (குளோறிட்), 28.03.2017 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் சிவகுமாரின் மனைவியும், காலஞ்சென்றவர்களான வில்லியம் மாக்கிறேட் அன் குளோறிட் தம்பதியரின் செல்வப்புதல்வியும், காலஞ்சென்றவர்களான, செல்லப்பா - சிந்தாமணி தம்பதியரின் மருமகளும், மரிய அனோல்ட்ட, மரிய அனேட்ஸ் ஆகியோரின் பாசமிகு தாயும், மாய்ய குளோறின் (கனடா), மாய்ய குளோசிற் (கனடா), மாய்ய குளோனின் (சுவிஸ்), மாய்ய அன்னிலேட்டா (கனடா), மாய்ய ஆனோல்குளின் (சுவிஸ்), மாய்ய அக்குறோவிட்டர் (கனடா), மாய்ய சிசிலாட்டீன் (கனடா) மாய்ய சீக்காட்டீன் (கனடா), மாய்ய அலிறோடா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவகுமாரன் (கனடா) கிருஸ்ணவேணி (யாழ்ப்பாணம்), சிவபாலன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனை இன்று (24.04.2017) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

(அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (24.04.2017) திங்கட்கிழமை பதுளையில் உள்ள அவரது மாமனாரின் இல்லத்தீல் நடைபெறும்). இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பசறை மேல் பிரிவு
இல. 31/4, பதுளை. (ஏ.கே.என்) (106) (13.17)

தகவல்:
S.தங்கராசா

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் பொன்னையா பரமசாமி

மண்ணில்
06.10.1935

விண்ணில்
25.03.2017

கடந்த 25.03.2017 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் பொன்னையா பரமசாமி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 22.04.2017 சனிக்கிழமை கீரிமலை புனிததீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (24.04.2017) திங்கட்கிழமை அன்னா ரின் இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையி லும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்புள்ளங்களிற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவட்ட செயலகவிடுதி
A9 வீதி, டிப்போச் சந்தி அருகில்,
கிளிநொச்சி.
077 739 6174 / 077 667 7208

குடும்பத்தினர்.

(A.K.N. 102) (13.17)

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
05 . 05 . 1931

விண்ணில்
19 . 04 . 2012

அமரர் சேதுகாவலர் சங்கரப்பிள்ளை

(முன்னாள் உரிமையாளர் - ஸ்ரீ காந்தாஸ் ஸ்ரோர்ஸ்)

அன்பாலும் பணிவாலும் எல்லோரையும் அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே அப்பா!
ஆண்டுகள் ஆறு போனாலும் அப்பா ஆறவில்லை எம் துயரம்
காலங்கள் ஓடிக்கடந்தாலும் அப்பா!
உங்களை எம் உள்ளத்தில் வைத்துப் பூசிப்போம்
எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் அப்பா
எமக்குத் தந்தையாக நீங்கள் தான் வரவேண்டும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி கிழக்கு, கைதடி.

குடும்பத்தினர்

(aja/3436)

நினைவஞ்சலி

மறைவு
01 . 01 . 1985

மறைவு
24 . 04 . 1987

திரு. திருமதி ஏபிரகாம் மாணிக்கம்

(6/1 மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்)

(முன்னை நாள் சிறைச்சாலைகள் மேற்பார்வையாளர் - வெலிக்கடை/ போஹம்பரை / யாழ்ப்பாணம்)

தெய்வங்களே உங்கள் பாதம் பணிந்து ஆசி வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

பதினான்காம் ஆண்டில் இதயம் சுமக்கும் நினைவுகள்

அன்னை மடியில்
20 . 05 . 1927

ஆண்டவன் அடியில்
24 . 04 . 2003

அமரர் தொம்மை பிலிப்பு

அன்போடு எமை வளர்த்து
அவனியில் நாம் மேலோராய்
வாழ வழி செய்த அன்பு நிறை பப்பாவே
உம் நெஞ்சத்தில் நிலைத்து நிற்கின்றன
நன்றியுடனே நினைக்கின்றோம் இந்நாளில்
நின் ஆன்மா இறைவனில் அமைதி பெற
இறையருள் வேண்டுகின்றோம்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

தந்தை செல்வா

அவர்களின் 40 ஆவது நினைவு நாள்

நிகழ்ச்சிகளும் நினைவுப் பேருரையும்

காலம் :- 26.04.2017 புதன்கிழமை முற்பகல் 9.30 மணி

இடம் :- தந்தை செல்வா நினைவிடம், யாழ்ப்பாணம்.

தலைமை :- மேதகு ஆயர் கலாநிதி சு.ஜெபநேசன் அவர்கள்
(தலைவர், தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு)

நிகழ்ச்சி நிரல்

தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்தலும் மலர் அஞ்சலியும்

☑ வரவேற்புரை

☑ அஞ்சலியுரை :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
மௌலவி மகழூத் அவர்கள்
அருட்தந்தை S.V.B. மங்களராசா அடிகள்.

☑ தலைமையுரை

☑ அறிமுகவுரை

☑ நினைவுப் பேருரை :- கௌரவ. கலாநிதி ஜெயம்பதி விக்ரமரட்ன P.C, M.P (அரசியலமைப்பு நிபுணர்)

☑ தலைப்பு :- " எஸ்.ஜே.வியும் அதிகாரப் பகிர்வுக்கான கோரிக்கையும்"

☑ நன்றியுரை :- திரு.வி.ஜி.தங்கவேல்

மேற்படி நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு.

(c 29450)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு இன்று அவசர கலந்துரையாடல்

2012/2014ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் கல்வி கற்று வெளியேறிய பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

"இதில் 3 வருடங்களுக்கு மேல் வெளிமாவட்டத்தில் சேவையை நிறைவு செய்தவர்களின் விவரம் சேகரித்தல், 2009ஆம் ஆண்டு தரம் 3-2ற்கு உள்ளீர்ப்புச் செய்வது தொடர்பான பெயர் பட்டியல் போன்றன தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சு அனுப்பி வைக்கவுள்ளதால் அனைத்து ஆசிரியர்களும் தமது நியமனக் கடிதத்துடன் வருகை தர வேண்டும்" என்று 2009ஆம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரிய சங்கச் செயலாளர் துஸ்யந்தன் அறிவித்தார். வருகை தராத ஆசிரியர்களின் விவரங்கள் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்தார். (வ-422)

மரண அறிவித்தல்கள்

ஐயம்பிள்ளை பேரம்பலம்



சரவணை மேற்கு, 2ஆம்வட்டாரம் காளி கோயிலடியைச் சேர்ந்த ஐயம்பிள்ளை பேரம்பலம் 22.04.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சேனாதிராசா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, கோபாலபிள்ளை, சுப்பிரமணியம், பூரணம், தம்பையா, குணமணி மற்றும் தருமலிங்கம், சரஸ்வதி, மகாதேவி செல்லத்துரை, சுந்தரம்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரனும், சிவராசாவின் அன்பு மைத்துனரும், பேரின்பராணி, காலஞ்சென்ற ஜெகன் மற்றும் ஜெயகாந்தன், ஜெயானந்தன், ஜெயரூபன், சுகிர்தா, ஜெயசீலன், ஜெயவேந்தன், சஜிதா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், நகுலேஸ்வரி, இந்திரகுமார், விமலன், கண்ணபிரியா, மயூரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரவிண்ராஜ், பிரியங்கா, பிருந்தா, விஷ்ணுஜன், ரஜீவன் அஸ்வின், ஆகாஸ், டிசானா, துர்ஷிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2017) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாங்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(ea 3464)

2ஆம் வட்டாரம்,
சரவணை மேற்கு,
காளிகோயிலடி, வேலணை.

தகவல்:
குடும்பத்தினர்.

077 550 8043, 077 975 9522

கமலேஸ்வரன் கிரிஷாந்தகுமார்

(விற்பனை ஆலோசகர்-செலிங்கோ காப்புறுதி நிறுவனம்)

வட்டக்கச்சி கட்சன் வீதி, இல.791 ஐப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கமலேஸ்வரன் கிரிஷாந்தகுமார் (கிரிஷாந்) கடந்த 22.04.2017 சனிக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான குடும்பி சின்னத்தம்பி என செல்லமாக அழைக்கப்படும் சின்னத்தம்பி-பொன்னாச்சி தம்பதியர் மற்றும் காலஞ்சென்றவர்களான கந்தையா பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் பேரனும் கமலேஸ்வரன் (உதயன்)-தனலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் சுதாகரன் (கமக்கார அமைப்பு தலைவர் D2) உதயகாந், சஞ்சீவன், இந்துஜன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் குகராஜினி (கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சி) கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் அபிஷேக், அஸ்மிதா, மேனவி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2017) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 791, கட்சன் வீதி,
வட்டக்கச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 218 4907

துன்னாலையில் மோதிக் கொண்ட

அடாவடிக் கும்பல்களில் இருவர் மட்டுமே சிக்கினர்

யாழ்ப்பாணம், ஏப். 24

வடமராட்சி, துன்னாலையில் 2 கும்பல்களுக்கு இடையே இடம்பெற்ற மோதலில் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இதுவரை இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"துன்னாலைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இரு கும்பல்களுக்கு இடையே பெரும் மோதல் வெடித்தது. இரு தரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் கடுமையாக தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 20 பேரை கைது செய்வதற்கு பொலிஸாருக்கு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் பொலிஸார் இருவரை மாத்திரமே கைது செய்துள்ளனர். மருத்துவமனையில் காயமடைந்துள்ள ஒருவரைக் கைது செய்வதற்கு பொலிஸார் சென்ற போது, அவர் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. ஏனையோரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். (வ-5-26)

இலங்கைப் பொருளாதார முன்னேற்றம் குறித்து உலக வங்கி, ஐ.எம்.எவ் பாராட்டு

நிதி அமைச்சர் மகிழ்ச்சி

கொழும்பு, ஏப். 24

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பில் உலக வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியம் ஆகியன பாராட்டு தெரிவித்துள்ளன"

இவ்வாறு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் நடைபெற்ற உலக வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் வருடாந்த மாநாட்டில் இவ்வாறு பாராட்டு தெரிவிக்கப்பட்டதாக நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ள நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, உலக வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் பிரதானிகளுடன் கலந்துரையாடினார்.

ஜி24 நிதி அமைச்சர்களின் சந்திப்பில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பங்கேற்றுள்ளதுடன், ஜி 24 நிதி அமைச்சர்கள் சபையின் முதலாவது இணைத் தலைவராக ரவி கருணாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

பன்னாட்டு நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் மிடிசு ஹிரோ புர்சாவா மற்றும் உலக வங்கியின் உப தலைவர் அன்டி டிக்சன் ஆகியோருடன் அமைச்சர் ரவி கருணாநாயக்க கலந்துரையாடினார்" என்று நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், அமெரிக்க மத்திய வங்கி ஆளுநர் ஜெனட் யெலனுடனும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கலந்துரையாடினார். (வ-5)

சுதேசிய உணவு, உள்ளூர் உற்பத்தி பொருள்களுக்கான சந்தை நாளை

யாழ்ப்பாணம், ஏப். 24

சுதேசிய உணவு மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான சந்தையும் பாரம்பரிய விளையாட்டு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணிக்கு யாழ்ப்பாணம் அடைக்கல அன்னை ஆலய வளாகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பிரதேச கலாசார அதிகார சபை, யாழ்ப்பாண கிராம மாதர்அபிவிருத்தி சங்கங்களின் சமாசத்துடன் இணைந்து இந்த நிகழ்வை நடத்துகின்றன.

யாழ்ப்பாண பிரதேச செயலரும் கலாசார அதிகார சபைத்தலைவருமான பொ.தயானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாண கயன் உள்ளூர் உற்பத்திப்பொருள்கள் தயாரிப்பாளரான இ.ராயுவும், யாழ்ப்பாண பாரம்பரிய உணவு உற்பத்தியாளர் திருமதி ரகுபதியம்மா நரசிம்மனும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

புதுக்குடியிருப்பில் இன்று கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, ஏப். 24

முல்லைத்தீவு மாவட்ட சிவில் பாதுகாப்பு பிரிவினர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக இன்று காலை 8 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவர் என்று அறிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம், விசுவமடு போன்ற இடங்களில் சிவில் பாதுகாப்பு படையினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் விவசாயப் பண்ணைக் காணிகளை நிரந்தரமாக சிவில் பாதுகாப்புத்திணைக்களத்திடம் வழங்கக் கோரியே அவர்கள் இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட உள்ளனர். (வ-7)

மிருசுவில் சந்தி தரிப்பிடத்தில் அரச பஸ்கள் நிறுத்துவதில்லை

மக்கள் விசனம்

தென்மராட்சி, ஏப். 24

மிருசுவில் சந்தியில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகள் நிறுத்தாமல் செல்வதால் தனியார் பேருந்து சேவைகளை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய நிலையில் உள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

"மிருசுவில் வடக்கு, குடமியன், தவசிகுளம், மிருசுவில் தெற்கு போன்ற பகுதிகளைச் சேர்ந்த பிரிவுகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களுக்கு முக்கிய பேருந்து தரிப்பிடமாக மிருசுவில் சந்தி தரிப்பிடம் உள்ளது. இந்தப் பகுதியில் தேவாலயம், பாடசாலைகள், தொடருந்து நிலையம் போன்றவையும் உள்ளன. இந்தப் பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், அரச திணைக்கள அலுவலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் மிருசுவில் சந்தியிலிருந்து தினமும் பயணங்களை மேற்கொள்கின்றனர்.

மிருசுவில் சந்தியில் இ.போ.ச.பேருந்து நிறுத்தப்படுவதில்லை. யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற பேருந்து நிலையங்களில் நிற்கும் மிருசுவில் பயணிகளை இ.போ.ச.பேருந்துகள் ஏற்றுவதில்லை. இதனால் ஏ9 முதன்மைச் சாலை வழியாக வரும் தனியார் பேருந்துகளில் பயணிக்க வேண்டியுள்ளது" என பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

"யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த நான் மிருசுவிலில் உள்ள அரச பாடசாலையொன்றில் பணிபுரிகின்றேன். பாடசாலை நாள்களில் இ.போ.ச. பேருந்து எம்மை ஏற்றிச் செல்ல மறுப்பதால் தனியார் பேருந்தை நாட வேண்டியுள்ளது. இதனால் பருவகாலப் பயணச்சீட்டுப் பெற்று பயணிக்க முடியாத நிலை இந்தப் பகுதியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஏற்படுகிறது" என ஆசிரியை ஒருவர் தெரிவித்தார்.

"மிருசுவிலில் வதியும் நான் இ.போ.ச. பேருந்தில் மிருசுவிலுக்கு நேரடியாகப் பயணிக்க பேருந்து நடத்துநர்கள் அனுமதிப்பதில்லை அதனால் யாழ்ப்பாண சாலையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் வரை பருவகாலப் பயணச் சீட்டுப் பெற்று தினமும் கொடிகாமத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்து அங்கிருந்து இ.போ.ச. பேருந்தில் தினமும் பயணிக்கின்றேன். இது தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கு முறையிட்டபோதிலும் பயன் கிடைக்கவில்லை" என அரச பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

"கொடிகாமம் பேருந்து நிலையத்திலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட பயணிகள் மிருசுவில் சந்தி வரை பயணச்சீட்டுப் பெற்று கொடிகாமத்துக்கு பயணிக்கின்றனர். இடையில் உள்ள பேருந்து தரிப்பிடங்களில் நிறுத்தி இறங்குகின்றனர். ஏ 9 சாலையில் பயணிக்கும் பெரும எவு இ.போ.ச.பேருந்துகள் தூர இடங்களுக்குச் செல்வதால் கொடிகாமத்திலிருந்து மிருசுவில் வரை பத்து ரூபா கட்டணச் சீட்டைப் பெற்று நூற்றுக்கு மேற்பட்ட பயணிகள் ஏறி அடுத்தடுத்த தரிப்பிடங்களில் இறங்குவதால் எமது நேரம் வீணாகும் என்பதால், மிருசுவில் பயணிகளை கொடிகாமத்தில் ஏற்றவதில்லை. கொடிகாமத்துக்கு அப்பால் உள்ள பேருந்து நிலையங்களிலிருந்தும் தரிப்பிடங்களிலிருந்தும் பயணிகளை ஏற்றுகின்றோம்" என இ.போ.ச. வின் நடத்துநர்கள் சிலர் தெரிவித்தனர்.

"பொதுமக்களுக்கு சேவை செய்யவே இ.போ.சபை உள்ளது. அந்த வகையில் யாழ்ப்பாண சாலைக்கு சொந்தமான எந்தப் பேருந்தும் பயணிகளை ஏற்றாமல் வருவதில்லை. வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பேருந்துகள் சில வேளைகளில் மக்களை ஏற்றாமல் வரலாம். பயணிகளை பேருந்து ஏற்றாமல் வரும்போது எந்த சாலைக்கு சொந்தமான பேருந்து, அதன் இலக்கம் என்பவற்றை பொதுமக்கள் எமக்கு முறைப்பாடாகக் கொடுக்கும்பட்சத்தில், உரிய பேருந்து சாலையுடன் தொடர்பு கொண்டு நாம் கதைத்து பயணிகளை ஏற்றுவதற்குரிய வழிவகைகளைச் செய்வோம்" என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையில் யாழ்ப்பாணச் சாலை முகாமையாளர் தெரிவித்தார். (வ-10-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

57 ஏக்கர் தனியார் காணிகள் மட்டக்களப்பில் படையினர் வசம்

யோகேஸ்வரன் எம்.பி. சுட்டிக்காட்டு

செங்கலடி, ஏப்.24

"மட்டக்களப்பு மாவட்டத்தில் 77 குடும்பங்களுக்குச் சொந்தமான 57.331 ஏக்கர் காணிகள் முப்படையினரால் இதுவரை விடுவிக்கப்படவில்லை. இந்தக் காணிகளை விடுப்பது தொடர்பாக இன்று பாதுகாப்பு அமைச்சில் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெறும்"

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித் தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கிரான் பிரதேச மக்களுடனான சந்திப்பு நேற்றுநாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

அதில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, வாழைச்சேனை, கிரான், ஏறாவூர், ஆரையம்பதி, வவுணதீவு, போரதீவு, பட்டிப்பளை, களுவாஞ்சிக்குடி மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் பொதுமக்களுக்குச் சொந்தமான பல காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளில் இராணுவத்தினரால் 25.58 ஏக்கர் காணிகளும், கடற்படையினரால் 2.546 ஏக்கர் காணிகளும் பொலிஸாரால் 29.205 ஏக்கர் காணிகளும் கையகப்படுத்தப் பட்டுள்ளன.

முறக்கொட்டாஞ்சேனையில் பாடசாலை கட்டடத்துடன் உள்ளடங்கியதாக 40 குடும்பங்களுக்குச் சொந்தமான 18 ஏக்கர் காணியில் இராணுவமுகாம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த இராணுவமுகாமை அகற்றுவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்துள்ளோம். முகாமை அகற்றுவதில் பாதுகாப்புத் தரப்பினர் இழுத்தடிப்புச் செய்துவருகின்றனர்.

> பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளில் இராணுவத்தினரால் 25.58 ஏக்கர் காணிகளும், கடற்படையினரால் 2:546 ஏக்கர் காணிகளும் பொலிஸாரால் 29.205 ஏக்கர் காணிகளும் கையகப்படுத்தப் பட்டுள்ளன.

பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பாக அமைச்சில் சிறப்புக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் முறக்கொட்டாஞ்சேனை இராணுவமுகாம் அகற்றுவது தொடர்பான அழுத்தங்களைக் கொடுக்கவுள்ளோம்.

மாவட்டச் செயலரின் கீழ் உள்ள விடுதிகளைப் பாதுகாப்புத் தரப்பினர் தம்வசம் வைத்துள்ளனர். அந்த விடுதிகளை ஒப்படைக்க வேண்டும்.

அரச கட்டடங்களில் உள்ள படை முகாம்கள் அகற்றப்பட்டு அரச நிர்வாகத்துக்குப் பாதுகாப்புத் தரப்பினர் வழிவிடவேண்டும் .என்றார்.

(ஜ-ய-47)

குப்பை மேடு இடரால் ரூபா 116 மில். நட்டம்

சுற்றாடல் பிரிவின் தலைமை அதிகாரி தகவல்

கொழும்பு. ஏப். 24

கொலன்னாவ மீதொட்டமுல்லகுப்பை மேடு இடரால் இலங்கைக்கு 1116 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று சுற்றாடல் பிரிவின் தலைமை அதிகாரி பிரசாந்தி குணவர்த்தன தெரிவித்தார்.

சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சுற்றாடல் பிரிவால் முன்னெடுக்கப்பட்ட ஆய்விலிருந்தே இந்தத் தகவல் பெறப்பட்டது.

அவர் தெரிவித்ததாவது,

கொலன்னாவ மீதொட்டமுல்ல குப்பை மேட்டில் கொட்டப்படுகின்ற குப்பைகளால் நாளொன்றுக்கு 31 லட்சத்து 36 ஆயிரத்து 500 ரூபா நட்டம் ஏற்படுகின்றது. அந்தப் பிரதேசத்தில் நாளொன்றுக்கு 850 மெற்றிக் தொன் குப்பைகள் கொட்டப்பட்டுள்ளன. அவ்வாறு கொட்டப்படுகின்ற ஒவ்வொரு மெற்றிக் தொன் குப்பையாலும் நாட்டுக்கு 3.690 ரூபா நட்டம் ஏற்படுகிறது என்று கணிப்பிடப்பட்டுள்ளது. அதன் மூலம் நாட்டுக்கு வருடம் ஒன்றுக்கு 1116 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகின்றது-என்றார். (ஜ-10)

தந்தை செல்வா நினைவு தினம் மட்டக்களப்பில்

களுவாஞ்சிக்குடி, ஏப்.24

தந்தை செவ்வாவின் 40 ஆவது நினைவுதின நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மட்டக்களப்பு களுதாவளை கலாசார மண்டபத்தில் நடைபெறும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதிக்கிளை அறிவித்தது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பட்டிருப்புத் தொகுதிக் கிளையின் தலைவருமான பா.அரியநேத்திரன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும்.

நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமாக கி.துரைராசசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன் உட்பட பலர் கலந்துகொள்வர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஜ-ய)

மைத்திரி ஆட்சியிலும் தமிழர்களுக்கு இன்னல்கள்

மாகாணசபை உறுப்பினர் தெரிவிப்பு

எருவில், ஏப்.24

"தமிழ் மக்கள் கூட்டு அரசின் ஆட்சியிலும் பல இன்னல்களை எதிர் கொண்டுள்ளனர். தமது தேவைகளுக்காக வீதிகளில் இறங்கிப் போராட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் தள்ளப்பட்டுள்ளனர் தமிழ் மக்கள்.

இவ்வாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.

எருவில் கண்ணகி வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சித்திரை புத்தாண்டு கலாசார விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் தமிழ் மக்களுடைய கலை, கலாசாரம், பண்பாடு, பாராம்பரியம் என்பன பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தன.

எதிர்காலத்தில் இளைஞர்கள் அந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

தமிழர்களும் சிங்களவர்களும் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடுகின்றார்கள். என்றாலும் அது வாய்ப்பேச்சில் மாத்திரம்தான் இருந்து வருகின்றது.

தமிழ் இனம் தற்போதைய கூட்டு அரசில் கூட பல இன்னல்களை அனுபவித்துக் கொண்டு வருகின்றது.

குறிப்பாக மக்கள் வீதிகளில் போராடி வருவதை நாம் கண்கூடாகவே பார்க்க வேண்டியிருக்கின்றது.

இவ்வாறு இருக்கும்போது எவ்வாறு சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாட முடியும். ஆகவே தமிழ் சித்திரைப் புத்தாண்டு தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் வேதனை தரும் ஆண்டாகவே இருக்கின்றது.

நாட்டில் உள்ள இனவாத அரசு, தமிழர்களும், சிங்களவர்களும் ஒற்றுமை என்று பன்னாட்டுக்குக் காட்டுகின்றதே தவிர, தமிழர்களது சமத்துவம், சுயநிர்ணய உரிமை, நிரந்தரத்தீர்வு என்பவற்றைக் கொடுப்பதற்கு அரசு தயங்குகின்றது - என்றார்.

(ஜ-ய)

பொருளாதார முகாமைத்துவத்தை அரச தலைவரும் இனி கவனிப்பார்

கொழும்பு, ஏப். 24

நாட்டின் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் அமைச்சரவை உபகுழுவின் கூட்டங்களில் தலைவராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் பொருளாதார முகாமைத்துவ உப குழுவின் அடுத்தகூட்டம்அரசதலைவர்தலைமையில் நடைபெறவுள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவே பொருளாதார முகாமைத்துவ உபகுழுவின் தலைவராகச் செயற்பட்டு வந்தார். தற்போதுள்ள பொருளாதார நிலமைகளைச் சரியான வழிமுறைக்கு கொண்டு வரும் நோக்கில் அரச தலைவரும், தலைமை அமைச்சருடன் இணைந்து கூட்டத்தில் கலந்து கொள்வார்.

அதற்கு முன்னர் இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு அரச தலைவர் முயற்சித்த போதிலும், அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அடுத்தகூட்டத்தில்இருந்து அரச தலைவர் தொடர்ந்து கலந்து கொள்வார் எனக் கூறப்படுகிறது.

(ஜ-10)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் திருகோணமலையில் நேற்று நடைபவனி

திருமலை, ஏப்.24

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் திருகோணமலையில் முன்னெடுத்து வரும் போராட்டம் நேற்று 50 ஆவதுநாளாகவும்தொடர்ந்தது. அவர்கள் நேற்றுநடைபவனி ஒன்றையும் முன்னெடுத்தனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்குமுன்னால் ஆரம்பிக்கப்பட்ட நடைபவனி திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்துக்கு முன்னாலுள்ள சுற்றுவட்டத்துக்குச் சென்று மீண்டும் ஆளுநர் அலுவலகத்தைச் சென்றடைந்தது.

இலங்கை அரசால் சிறந்த தீர்வுகள் இதுவரை காலமும் வழங்கப்படாத நிலையில் அமெரிக்க அரசாவது எமக்குச் சிறந்த தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என்று நடைபவனியில் ஈடுபட்டவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். (ஜ-ய-45-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 நெடுஞ்சாலைகள் விரைவில் அபிவிருத்தி

கொழும்பு, ஏப். 24

நாடு முழுவதும் 20 நெடுஞ்சாலைகள் அபிவிருத்திசெய்யப்படவுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் 3 வருடங்களில் 20 நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி செய்யப்படும். ஏ, பி தரங்களிலான வீதிகள் அபிவிருத்தி செய்யப்படும். அதற்கென 88 பில்லியன் ரூபாநிதிஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. உள்நாட்டு ஒப்பந்தக்காரர்கள் மூலம் இவற்றை டைமுறைப்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. 565 கிலோ மீற்றர் நீள மான 20 நெடுஞ்சாலைகளே அபிவிருத்தி செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

வாகனங்களில் வேகத்துக்கேற்ப இனித் தண்டம்

வாகனங்களில் வேகத்துக்கு ஏற்பதண்டத்தொகை விதிக்கும் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்படவுள்ளது.

அதிவேகமாக வாகனத்தைச் செலுத்தும்போது விதிக்கப்படும் தண்டம் வேகத்துக்கு ஏற்ப கூடிக் குறையும் என்று வீதிப் பாதுகாப்பு தேசிய சபையின் தலைவர் மருத்துவர் சிசிர கோதாகொட தெரிவித்தார்.

''சாதாரண வாகனமொன்று மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்க முடியும். அதைவிடவும் வேகமாகப் பயணிக்கும்போது தண்டம் விதிக்கப்படும்.

மணிக்கு 80 தொடக்கம் 90 கிலோ மீற்றர் வேகத்தில்சென்றால் ஒருதொகைத் தண்டமும், மணிக்கு 90 தொடக்கம் 100 கிலோ மீற்றர் வேகத்தில் சென்றால் அதற்கு ஒரு தொகை தண்டமும் விதிக்கப்படும்.

நாள்தோறும் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை உயர்வடைந்து செல்கின்றன. வாகன விபத்துக்களைத் தவிர்க்க கூடுதல் தண்டம் விதிக்க வேண்டியுள்ளது. முச்சக்கர வண்டி உள்ளிட்ட வாகனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வேகக் கட்டுப்பாட்டை மீறி, வாகனங்கள் செலுத்தப்பட்டால் அவற்றின் வேகத்துக்கு ஏற்ப தண்டம் விதிக்கப்படும். இந்த நடைமுறை விரைவில் அறிமுகம் செய்யப்படும். அதிவேக நெடுஞ்சாலைகளிலும் இதேவிதமாக தண்டம் விதிக்கப்படும்''- என்று வீதிப் பாதுகாப்பு தேசிய சபையின் தலைவர் தெரிவித்தார். (ஐ-10)

மைத்திரி அரசை கவிழ்ப்பதற்கு பலர் முயற்சி!

புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 24

கூட்டரசின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகப் பலர் முயற்சித்து வருகின்றனர் என்று புலனாய்வுப் பிரிவு எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று ஆங்கில வெளியிட்டுள்ளசெய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொழும்பில் தற்போது தலைதூக்கியுள்ள குப்பைப் பிரச்சினை தொடர்பில் அரசுக்கு எதிரான பரப்புரைகள் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படுகின்றன. அரசுக்கு எதிராகக் கடையடைப்புப் போராட்டங்களையும் முன்னெடுக்க சிலதரப்புக்கள் திட்டமிடப்பட்டுள்ளன. அவற்றின் ஊடாக அரசைக் கவிழ்ப்பதே அவற்றின் நோக்கமாகும்.

இது தொடர்பான அறிக்கையை புலனாய்வுப்பிரிவினர் அரசின் பிரதானிகளிடம்ஒப்படைத்துள்ளனர்என்று தகவல்வெளியாகியுள்ளது.

குப்பைப் பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு 53 கடையடைப்புப் போராட்டங்களை நடத்துவதற்கான ஆயத்தங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நாடு முழுவதும் குப்பை கொட்டிய இடங்களைச் சுற்றி வளைப்பதற்கும், கொழும்புஉட்படநகரப் பிரதேசங்களில் குப்பைகளை கொட்டும் நடவடிக்கைகள் வலுவிழக்கச்செய்யவும்திட்டமிடப்பட்டுள்ளன. நாட்டில் ஒரு சில இடங்களில் குப்பைகள் கொட்டுவதைத்தடுப்பதற்கு, நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாகவும் அரசுக்கு எதிராக மக்கள் எதிர்ப்பை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

அந்த நடவடிக்கைகளுக்கு முன்னிலை சோஷலிச கட்சி நேரடியாகத் தலையிடுகின்றது. அரசின் ஆலோசகர்கள் குப்பைப் பிரச்சினையை விரைவில் தீர்த்துக் கொள்வதற்கு தவறினால், அது அரசை முன்னெடுத்துச் செல்வதற்கு அழுத்தத்தை ஏற்படுத்தும். அதன் காரணமாக முக்கிய பகுதிகளில் தேர்தல் வாக்குகளை ஐக்கிய தேசிய கட்சி இழக்க நேரிடும் வாய்ப்பு உள்ளது. மகிந்த அணி உறுப்பினர்கள் அந்த இடங்களைப் பிடித்துக் கொள்வதற்கும் வாய்ப்புகள் உள்ளன- என்று புலனாய்வுப் பிரிவு அறிக்கையிட்டுள்ளது- என்றுள்ளது. (ஐ-10)

தகுதியானவர்களுக்கே பதவிகளை வழங்கவும்

தலைமை அமைச்சர் ஆலோசனை

கொழும்பு, ஏப். 24

திறமையான மற்றும் தகுதியானவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவிகளை வழங்க வேண்டும் என்று கட்சியின் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் அமைப்புச் சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்எனத்தெரிவிக்கப்பட்டது.

"கட்சியை வலுப்படுத்தி, கட்சிக்கும் மக்களுக்கும் கூடிய சேவைகளைச் செய்து, அடுத்த தேர்தலில் கட்சியை வெற்றிப்பெற செய்யும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதே பதவிகளை ஏற்பவரின் நோக்கமாக இருக்க வேண்டும். எனக்கு எதிராகச் செயற்பட்டவர்கள், சஜித் பிரேமதாசவுக்கு உதவியவர்கள் என்று எந்த பேதங்களையும் ஏற்படுத்திக்கொள்ளாது செயற்பட வேண்டும். கட்சியின் தொகுதி அமைப்பாளர் மற்றும் ஏனைய பதவிகளை வழங்கும் போது ரணில் அணி, சஜித் அணி எனப் பிரித்துப் பார்க்காது திறமைசாலிகளுக்கும், தகுதியானவர்களுக்கும் பதவிகள் வழங்க வேண்டும்" என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதனடிப்படையில், "நாடு முழுவதும் 116 தொகுதி அமைப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஏனையோர் அடுத்த சில தினங்களில் தெரிவு செய்யப்படுவர். மே தினம் முடிந்த பின்னர், அனைத்துத் தொகுதிகளுக்கும் அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவர்" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-10)

அமைச்சரவை மாற்றங்களால் வெளிநாட்டுப் பயணங்களை கைவிடும் அமைச்சர்கள்

கொழும்பு, ஏப். 24

அமைச்சரவையில் விரைவில் ஏற்படவுள்ள மாற்றங்கள் காரணமாக, அமைச்சர்கள் சிலர் வெளிநாட்டுப் பயணங்களைத் தவிர்த்து வருகின்றனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வெசாக் தினத்துக்கு முன்னதாக ஆளும் கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றம் செய்யப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் தெரிவித்திருந்தார்.

அரச தலைவரின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து சில அமைச்சர்கள் அடிக்கடி அரச தலைவர் செயலகத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி, தமது வெளிநாட்டுப் பயணங்களை பிற்போடவா? எனக் கேட்டு வருகின்றனர். புத்தாண்டு விடுமுறையில் வெளிநாடுகளுக்குச் சென்ற அமைச்சர்களும் அரச தலைவர் செயலகத்துடன் தொடர்பு கொண்டு தாம் அவசரமாக நாடு திரும்ப வேண்டுமா? எனக் கோரி வருகின்றனர். அமைச்சுப்பதவிகளில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் குறித்துகரிசனைகாட்டிவரும் அமைச்சர்களே, வெளிநாட்டுப்பயணங்களைகைவிடத் தீர்மானித்துள்ளனர் -என்றுள்ளது. (ஐ-10)

இலங்கையில் 100 வயது கடந்து ஆரோக்கியமாக வாழும் மூதாட்டி

கொழும்பு, ஏப். 24

இலங்கையில் 100 வயதைக் கடந்து ஆரோக்கியமாக வாழும் வயோதிபப் பெண் ஒருவர் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மாவனெல்ல, கெஹேல்பன்னல பிரதேசத்தில் ஜாமுனி கொல பிஞ்சி என்ற மூதாட்டியே நூறு வயதைத் தாண்டியும் ஆரோக்கியமாக வாழ்ந்து வருகிறார். அவரது அடையாள அட்டையில் 1917ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி பிறந்துள்ளார் என்றுள்ளது எனினும் அவருக்கு நூறுக்கும் அதிகமாக வயது இருக்கும் என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.

உக்கு என்பவரை திருமணம் செய்து கொண்ட அவருக்கு 10 பிள்ளைகள் உள்ளனர். அவர்களில் ஏழு பேர் ஆண் பிள்ளைகள். தற்போது அவர் தனது கடைசி மகனின் வீட்டில் வசிக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

மகிந்தவை முடக்குவதற்குச் சதி

சனத் நிசாந்த எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 24

"முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவை அடக்குவதன் மூலம் மகிந்த ராஜபக்சவின் செயற்பாடுகளை முடக்குவதற்குசிலர்முற்படுகின்றனர்" இவ்வாறு புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்த தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிடும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது அணியின் சார்பில் பசில் ராஜபக்சதான் அடுத்த அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவார் என்று சொல்லப்படுகின்றது. உண்மையில், அரச தலைவராகும் கனவில் அவர் இல்லை. இப்போதைய அரசமைப்பின் படி, மகிந்தவால் அடுத்த அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாது. மகிந்தவால் போட்டியிட முடியாத நிலை வரும் போது பஸிலால் இந்த நாட்டில் இருக்க முடியாது. அவர் மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார். அதனால் அவர் நாட்டை விட்டுச் சென்று விடுவார். பசில் ஊழல்வாதியல்ல. அவர் எந்தவொரு ஊழலிலும் ஈடுபடவில்லை. அவர் சிறந்த அரசியல் செயற்பாட்டாளர்.

மகிந்தவுக்குப் பக்கபலமாக பசில் ராஜபக்சவே உள்ளார். அதனால்தான் அவர் மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. அவரை அடக்குவதன் மூலம் மகிந்தவின் செயற்பாட்டை முடக்கு வதற்கு முற்படு கின்றனர்' என்றார். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்குண்டு மீட்பு

வவுனியா, ஏப். 24

வவுனியாவில் நேற்று கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சாந்தசோலை, 50 ஆவது வீட்டுத் திட்டத்தில் தனது காணியைத் துப்புரவு செய்த ஒருவர் பொலித்தீன் பையில் சுற்றப்பட்ட நிலையில் கைக்குண்டு இருந்ததை அவதானித்தார். அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். நீதிமன்ற அனுமதியைப் பெற்று சிறப்பு அதிரடிப் படையினர் மூலம் கைக்குண்டு செயலிழக்கச் செய்யப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

மார்ச் மாதம் அதிகமான நோயாளர்கள்

முல்லைத்தீவு, ஏப்.24

ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் கடந்த மாதங்களை விட மார்ச் மாதம் அதிக நோயாளிகள் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று வைத்தியசாலை மருத்துவர் திருமதி பி.நிரேகா தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் வெளிநோயாளர் பிரிவில் 2 ஆயிரத்து 745 பேரும் பெப்ரவரி மாதத்தில் 2 ஆயிரத்து 638 பேரும் மார்ச் மாதத்தில் 3 ஆயிரத்து 317 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களை விட 202 பேர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுள்ளனர். தற்போது கடும் வெப்பம் நிலவுவதால் வயது முதிர்ந்தோர் மற்றும் குழந்தைகள் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். (ற-500)

நடமாடும் சேவை

முல்லைத்தீவு, ஏப்.24

முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பொலிஸ் ஒழுங்குபடுத்தலில் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கற்சிலைமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது என்று ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மு.ப. 9 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது. அதில் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. முல்லைத்தீவு மாங்குளம், புதுக்குடியிருப்பு பொலிஸ் பொறுப்பதிகாரிகள் நிகழ்வில் கலந்துகொள்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ற-500)

சிறுவர் பூங்காக்களில் நுளம்புகள் அதிகம்!

நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறுவர் பூங்காக்களில் நுளம்புத் தொல்லை அதிகமான உள்ளன என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தற்போது பாடசாலை விடுமுறை என்பதால் யாழ். நகரப் பகுதியில் உள்ள சிறுவர் பூங்காக்களுக்குப் பெற்றோர் சிறார்களை அழைத்து வருவது அதிகரித்துள்ளது. அவற்றில் நுளம்புத் தொல்லை அதிகமாக உள்ளதால் சிறார்களுக்கு ஏதேனும் நோய்த் தொற்று ஏற்படக் கூடுமோ என அவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

"சிறார்களுக்குரிய இடங்களை அதற்கேற்றவாறு வைத்திருக்க வேண்டும். நாம் அனைத்திலும் குற்றம் காண்கின்றோம் என்று எண்ணக் கூடாது. பூங்காக்களில் சிறார்கள் பொழுதை மகிழ்ச்சியுடன் கழிப்பதற்கான ஏற்பாடுகள் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளன. அழகாகப் பூங்காக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அவற்றை மகிழ்ச்சியான மன நிலையுடன் அனுபவிக்க முடியவில்லை. அங்கு நுளம்புகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. சிறு சிறு புதர்களும், அகற்றப்படாதுள்ள குப்பை

கோப்புப்படம்

களுமே அதற்குக் காரணமாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. தற்போது பல்வேறு விதமான நோய்த் தொற்றுக்கள் இனங்காணப்படும் நிலையில் நாம் எமது பிள்ளைகளை பூங்காக்களுக்கு அழைத்துச் செல்வதில் தயக்கம் காட்டும் நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர்கள் தெரிவித்தனர்.

"சிறுவர் பூங்காக்களில் நுளம்புப் பெருக்கம் உள்ளது என்று இதுவரை எமக்கு எவரும் முறைப்பாடு செய்யவில்லை. முறைப்பாடுகள் கிடைத்தால் உடனடியாக நடவடிக்கை எடுப்போம்" என்று யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (ற-21,12)

செட்டிக்குளத்தில் நடமாடும் சேவை 1,000க்கும் மேற்பட்ட மக்கள் பயன்

வவுனியா, ஏப்.24

அரச தலைவர் மக்கள் சேவை தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான நடமாடும் சேவை செட்டிக்குளம் மகாவித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலில் வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் வெங்கலசெட்டிக்குளம் பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாளஅட்டை, ஓய்வூதிய, சம்பள பிணக்குகள், சாரதி அனுமதிப்பத்திரம், மூக்குக்கண்ணாடி, ஆலோசனை சேவைகள், காணிப் பிணக்குகள், முதியோர் அடையாளஅட்டைவழங்கல், அழகுக்கலை பயிற்சி, கடன்சேவைகள், தொழில் வாய்ப்பு, இடர்முகாமைத்துவ சேவைகள், மருத்துவ சேவைகள் சுயதொழில் பயிற்சி உள்ளிட்ட சேவைகள் நடமாடும் சேவையில் வழங்கப்பட்டன. ஆயிரத்து 200ற்கு மேற்பட்ட பொது மக்கள் நடமாடும் சேவையின் மூலம் பயன்களை பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அபயக்கோன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.காதர்மஸ்தான், ந.சிவசக்திஆனந்தன் வவுனியா மாவட்ட செயலர் றோகண புஸ்பகுமார, வட மாகாண சபை உறுப்பினர்களான இ.இந்திரராஜா, ஜெயதிலக, வெங்கலசெட்டிக்குள பிரதேச செயலாளர் திணைக்களத் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் அதில் கலந்து கொண்டனர்.

(ற-402)

இளைஞர்கள் போராட்டங்களை கையிலெடுத்தால் வெற்றி கிட்டும்

வட மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு

வவுனியா, ஏப்.24

எந்தவொரு விடயத்தையும் இளைஞர்கள் கையில் எடுக்கும்போது அது பிரமாண்டமடையும். போராட்டங்களை இளைஞர்கள் தமது கையில் எடுத்து நடத்திய போது முழு நாடும் உற்றுப் பார்க்கும் நிலை இருந்தது.

இவ்வாறு வடமாகாண சபை உறுப்பினர் செந்தில் நாதன் மயூரன் தெரிவித்தார்.

வவுனியா, இளைஞர் சேவைகள் மன்றத்தில் இளைஞர் கழக சம்மேளனக் காரியாலய திறப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இளைஞர்கள் ஒரு விடயத்தைக் கையிலெடுக்கும் போது அது பிரமாண்டமடைந்து வெளிக்கெணரப்பட்டு வெற்றியடையும் சாத்தியம் அதிகரிக்கின்றது.

இளைஞர்கள் இன்று அரசியலிலே வருவது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. அனைவரும் கருத்தலவிலே அல்லது பேச்சு வழக்கில் அரசியல் மேடைகளிலே சொல்லுவார்கள் இளைஞர்கள் அரசியலுக்கு வர வேண்டும். நாட்டினுடைய முதுகெலும்பாக அவர்கள் இருக்க வேண்டும். நீங்கள் விழுந்து போகின்ற இந்த சமூகத்தை கட்டிக் காக்க வேண்டும் என்றும் கூறுவார்கள். ஆனால் இந்த பேச்சுக்கள் வெறுமனையே மேடையளவிலேயே இருக்கும் இளைஞர்களுக்கு அதற்கான களத்தை உருவாக்கி கொடுப்பதற்கு யாரும் முனை வதில்லை. நான் என்னுடைய இருபத்தியெட்டு வயதிலே தேர்தலிலே களமிறங்கினேன். என்னால் முடிந்தளவுக்கு சில நன்மைகளை செய்துள்ளேன்.

இளைஞர்கள் இல்லாமல் இந்த நாட்டினுடைய அபிவிருத்தியும், நாட்டினுடைய வளர்ச்சியும் மென்மேலும் உயர்வடையாது. இளைஞர்கள் நீங்கள் கட்டாயம் அரசியலுக்கு வர வேண்டும். உங்களுக்காக உறுதுணையாக மேடை பேச்சுக்காக அல்ல உங்களுக்கு உறுதுணையாக இருப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். உங்களை கைபிடித்து உங்களோடு பயணிப்பதற்கு நாங்கள் இருக்கின்றோம் என்பதனை இந்த சந்தர்பத்தில் கூறிக் கொள்கின்றேன்- என்றார். (ற-21)

குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்க கரிசனை கொள்ளவேண்டும் அரசு

சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கோரிக்கை

வவுனியா, ஏப்.24

வவுனியாவில் குடி தண்ணீர்ப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அது தொடர்பில் அரசு கரிசனை காட்ட வேண்டும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ந.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

அரசதலைவர் மக்கள் சேவை வேலைத் திட்டத்தின் கீழ் நடமாடும் சேவை வவுனியா வெங்கலச் செட்டிக்குளத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வவுனியாவில் பல வாய்க்கால்கள் மூடப்பட்டுள்ளன. மழை காலத்தில் நீர் நிலைகளில் நீரைக் சேகரிக்க முடியாதுள்ளது. தற்போதைய வறட்சியான காலநிலையால் வவுனியா மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் குடி தண்ணீர் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. கிணறுகள் வற்றியுள்ளன. விவசாயிகளும் விவசாயம் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். அவர்களின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அனைத்து மக்களுக்கும் வறட்சி நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

வவுனியாவில் மக்கள் பயன்படுத்துகின்ற நீரில் அதிக கல்சியம் காணப்படுகின்றது. பலர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். நீரைச் சுத்திகரித்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

காணி தொடர்பான பிரச்சினைகளும் இங்கு உள்ளன. பல காணிகள் இராணுவத்தினரிடம் உள்ளன. பல காணிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை. இவ்வாறான பல பிரச்சினைகள் உள்ளன.

அவற்றை ஓரளவுக்குக் குறைத்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தை இவ்வாறான நடமாடும் சேவைகள் ஏற்படுத்துகின்றன என்றார். (ற-402)

நீண்ட நேரம் தரிக்கும் பேருந்துகளால் சிரமம்

கிளிநொச்சி, ஏப்.24

வடமாகாணத்தில் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பேருந்துகள் தரிப்பிடங்களில் நீண்ட நேரம் நிறுத்தப்படுவதால் போதிய காற்றோட்டமின்றி பயணிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். கொளுத்தும் வெயிலுக்கு மத்தியில் பஸ்கள் தரிப்பிடங்களில் நீண்ட நேரம் நிறுத்தப்படுவதால் பயணிகள் பெரும் அவதிப்படுகின்றனர். கர்ப்பிணிகளும், சிறு குழந்தைகளும் பாதிக்கப்படுகின்றனர்.

நீண்ட நேரம் நிறுத்தப்படும் பஸ்கள் பின்னர் அதிகவேகத்தில் பயணித்து போட்டிபோட்டுமுன்னே செல்லும் பஸ்ஸை முந்திச் செல்வதற்கு எத்தனிக்கின்றன. பயணிகள் தொடர்பாக சாரதியோ நடத்துனரோ கிஞ்சித்தும் கவலைப்படுவதில்லை. வடமாகாண போக்குவரத்து அமைச்சர் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும்என்று அவர்கள்கோரிக்கை விடுத்தனர். (ற-ய6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட வரலாற்றைக் கொண்ட நாம் வீதியில் அகதிகளாக அலைகிறோம்

முள்ளிக்குளம் கிராம மக்கள் வேதனை

மன்னார், ஏப்.24

"16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வரலாறை எழுத ஆரம்பித்த கிராமம் முள்ளிக்குளம். இப்போது அந்தக்கிராமத்தைச்சேர்ந்த நாம் அங்கிருந்து விரட்டப் பட்டு அகதிகளாக வீதியில் அலைகின்றோம்"

இவ்வாறு முள்ளிக்குளம் மக்கள் விரக்தியோடு தெரி வித்தனர்.

தமது பூர்வீகக் காணிகளில் நிலைகொண்டுள்ள கடற்ப டையினர் வெளியேற வேண்டும் என்று வலியு றுத்தி முள்ளிக்குளம் கிராம மக்கள் தொடர் போராட்டத் தில் ஈடுபடுட்டுள்ளனர். அவர்களின் போராட்டம் நேற்று 32 நாளாகத் தொடர்ந்தது.

"நாம்போராட்டத்தை ஆரம் பித்து 32 நாள்களாகின் றன. எமக்கு இதுவரைதீர்வு வழங்கப்படவில்லை.

எமது தலைமைகளும் எம்மை கண்டு கொள்கின் றார்கள் இல்லை. நாம் யாரி டம்போய் முறையிடுவது?.

எமது காணிகளை தூர நின்று ஏக்கத்துடன் பார்த் துக் கொண்டிருக்கின்

றோம். எங்கள் காணிகள் கிடைக்கும் வரை போராட் டத்தைக் கைவிடப் போவ தில்லை.

16ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலேயே 26 குடும்பங்களோடுதனதுவர லாற்றை எழுத ஆரம்பித்த கிராமம் இது. சிறிது சிறிதாக வளர்ந்து 21ஆம்நூற்றாண் டின் ஆரம்பத்தில் இங்கு 162 குடும்பங்கள் இருந்தன. அவர்கள் அங்கிருந்து விரட் டப்பட்டு அகதிகளாக அனா தைகளாக வீதிகளில் நிற்க விடப்பட்டுள்ளனர்." என்று போராட்டத்தில் ஈடுபடும் மக் கள் வேதனையுடன் தெரி வித்தனர்.

முள்ளிக்குளம் மக்களின் போராட்டத்துக்கு பல தரப்பி னரும் ஆதரவு வழங்குகின் றனர். அரசியல் தலைவர் கள், மதத் தலைவர்கள், மக் கள் என நாளாந்தம் போராட்டகளம்சென்று ஆத ரவுதெரிவிக்கின்றனர்.

அதேவேளை, முசலி பிர தேச செயலாளர் பிரிவி லுள்ளமறுச்சுக்கட்டிக்கிராம மக்கள் நடத்திவரும் தொடர் போராட்டம்நேற்று28ஆவது நாளாகத்தொடர்ந்தது.

தமது காணிகளை வன எல் லைப் பகுதிகளாக அறிவிக் கும் வர்த்தமானி அறிவித் தலைஅரசதலைவர்உடன் நீக்கம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தியே அவர் கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விரைவில் போராட்டத்தின் வடிவத்தை மாற்றிய மைத்து அரசுக்கு அழுத்தம் கொடுக்க திட்ட மிட்டுள் ளோம் என்று போராட்டத் தில் ஈடுபடும் முஸ்லிம் மக் கள் தெரிவித்தனர். (ற21,12)

கிளிநொச்சி மாவட்டத்தில்

1,525 ஏக்கர் காணிகள் இராணுவத்தினர் வசம்

கிளிநொச்சி, ஏப்.24

கிளிநொச்சி மாவட்டத்தின் 4 பிரதேச செயலக பிரிவுக ளில் படையினர் வசம் ஆயிரத்து 525.7 ஏக்கர் காணிகள் உள்ளன என்று மாவட்ட செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

அண்மையில் மாவட்ட செயலகத்தில் படையின ரின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களின் காணி களை விடுவிப்பது தொடர் பான கூட்டத்திலேயே இந் தத் தகவல்கள் வெளியிடப் பட்டன.

அதில் தெரிவிக்கப்பட்டதா வது:

தனியார் காணி அனுமதிப் பத்திரக் காணிகள் 374 ஏக் கரும், தனியார் உறுதிக் காணிகள் 168.2 ஏக்கரும், அரச திணைக்களங்க ளுக்குச் சொந்தமான 973.5 ஏக்கர் காணியும் படையி னரின் கட்டுப்பாட்டில் உள் ளன.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் தனியார் அனும திப் பத்திரக் காணிகள் 218 ஏக்கரும், தனியார் உறுதிக் காணிகள் 4 ஏக்கரும், அரச திணைக்களங்களுக்குச் சொந்தமானகாணிகள் 445 ஏக்கரும் இராணுவத்தின் வசமுள்ளன.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் தனியார் காணி அனுமதிப் பத்திரக் காணிகள் 128 ஏக்கரும், தனியார் உறுதிக் காணி கள் 8 க்கரும், அரச திணைக்களங்களுக்குச் சொந்தமான 49 ஏக்கர் காணிகளும் இராணுவத் தின் வசமுள்ளன.

பூநகரி பிரதேச செயலர் பிரி வுக்குட்பட்ட தனியார் காணி அனுமதிப் பத்திரக் காணிகள் 28 ஏக்கரும், தனியார் உறுதிக் காணி கள் 85.7 ஏக்கரும், அரச திணைக்களங்களுக்குச் சொந்தமான 479 ஏக்கர் காணிகளும் இராணுவத் தின் வசமுள்ளன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் தனியார் உறுதிக் காணிகள் 70.5 ஏக்கரும், அரச திணைக்க ளங்களுக்குச் சொந்தமான 0.5 ஏக்கர் காணியும் இரா ணுவத்தின் வசமுள்ளன என்று தெரிவிக்கப்பட் டது. (ற-35)

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்துக

வணிகர் கழகத்தினர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப். 24

புதுக்குடியிருப்பு நகரத் துக்கு வரும் பொதுமக்கள் நகரப் பகுதியில் குடி தண் ணீரைப் பெற்றுக்கொள்ள முடியாது சிரமப்படு கின்ற னர்.

பொதுமக்கள் இலகுவாக குடிதண்ணீரைப் பெற்றுப் பயன்படக்கூடிய வகை யில் நீர்த்தாங்கி ஒன்று அமைக்கவேண்டும்என்று புதுக்குடியிருப்பு வணிகர் கழகத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

சில வாரங்களாகக் கடும் வெப்பமான காலநிலை நில வுகின்றது. நகருக்கு வரும் மக்கள் குடி தண்ணீர் பெற முடியாது தவிக்கின்றனர். நகரின் பொருத்தமான இடத்தில் நீர்தாங்கி மூலம் குடிதண்ணீர் வழங்கி னால் பொதுமக்களுக்குப் பயனுள்ளதாக அமை யும்.

குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி களை பிரதேச சபை ஏற்ப டுத்தித் தர வேண்டும்" என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-7)

மேதின நிகழ்வு புதுக்குடியிருப்பில்

முல்லைத்தீவு, ஏப். 24

வடக்கு மாகாண கூட்டுறவாளர்களின் மேதின நிகழ்வு இந்த வருடம் புதுக்குடியிருப்பில் நடைபெற உள்ளது என்று ஏற்பாட்டளார்கள் தெரிவித்தனர்.

தொழிலாளர் தினமான மேதின நிகழ்வு கடந்த வருடங்களில் வடமாகாணத்தில் எழுச்சியாக கொண்டாடப்பட்டது . இந்த முறை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகரில் சிறப்பாக கொண்டாடப்பட வுள்ளது.

புதுக்குயிருப்பு சிவன் கோயில் முன்பாகப் பேரணி ஆரம்பமாகி அங்கிருந்து புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தை வந்தடையும். அங்கு கூட்டுறவாளர்கள் எழுச்சி மேதின கூட்டம் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்த னர். (ற-7)

அனிஞ்சியக்குள குழாய் கிணறுகளை சீரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை

துணுக்காய் பிரதேச செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 24

அனிஞ்சியன்குளம் பகுதியில் பழுத டைந்துள்ள குழாய்க் கிணறுகளை பிரதேச செயலகத்தோடு இணைந்து சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்ப டும்.

இதன்மூலம் வறட்சியான காலப்ப குதியில் குடி தண்ணீர் பிரச்சி னையை ஓரளவுக்கு சமாளிக்க முடி யும்என்றுதெரிவித்தார்துணுக்காய் பிரதேச சபைச் செயலர்.

துணுக்காய் பிரதேச செயலகத் துக்கு உட்பட்ட அனிஞ்சியன்குளம் பகுதியில் 1995ஆம் ஆண்டுயாழ்ப் பாணத்தில் இருந்த இடம்பெயர்ந்து வந்த மக்களின் குடிதண்ணீர் தேவையை பூர்த்திசெய்வதற்காக அமைக்கப்பட்ட பல குழாய்க் கிண றுகள் பாவிக்க முடியாதவாறு பழுத டைந்துள்ளன. அவற்றை திருத்தம் செய்தால்தற்போதுஏற்பட்டுள்ளவறட்சி யானகாலநிலையைசமாளிக்கூடி யதாகஅமையும்.

விரைவாக குழாய்க் கிணறுகளை திருத்தம் செய்து தர வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"தற்போது ஏற்பட்டுள்ள கடுமை யான வறட்சியால் சில தினங்களில் பல கிராமங்களில் நீரைப்பெற்றுக் கொள்வது சிரமமாக அமையும். அவற்றைச் சமாளிப்பதற்கு பவுசர் கள் மூலம் நீர் வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்கு தயாராகஉள்ளோம்.

தற்போது பழுதடைந்து குழாய்க் கிணறுகளை மீண்டும்பாவனைக்கு உரிய வகையில் சீர்செய்து கொடுக் கும் போது ஓரளவுக்கு நீர்பற்றாக் குறையை சமாளிக்க கூடியதாக அமையும். பிரதேசசெயலகத்துடன் இணைந்து நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்று துணுக்காய் பிரதேச சபை செயலர் தெரிவித் தார். (ற-7)

மரண அறிவித்தல்

திருமதி

யோகவதி செல்வரட்ணம்

(ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகவதி செல்வரட்ணம் 22.04.2017 சனிக்கிழமை இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதி களின் அன்பு மகளும் கதிரேசு - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மரு மகளும் செல்வரட்ணத்தின் (ஓய்வு பெற்ற அதிபர்) அன்பு மனைவியும் காயத்திரி (Teacher Gateway College, Colombo), கஜேந்திரன் (London), திவாகரன்(Engineer, Colombo) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லலிதகுமாரின் (Engineer, Colombo) பாசமிகு மாமியா ரும் கிருத்திக்கின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற தினைப்புனராணி கோபாலசிங்கம் மற்றும் புகழேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோத ரியும் நவரட்ணம், காலஞ்சென்றவர்களான ஈஸ்வரிஅம்மா கனக நாயகம் மற்றும் பத்மநாதன், செல்வராஜா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் தங்கமலர், காளிதர்சினி, ஜெயநாயகி, கௌசலாதேவி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2017) திங்கட் கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்துமயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

48/5, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 340 5484

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலாட்படைப் பிரிவு கட்டளை அதிகாரி பதவியும் சவேந்திர சில்வாவுக்கு!

கொழும்பு, ஏப். 24

இலங்கை இராணுவத் தலைமையகத்தில் பொது உதவி அதிகாரியாக பணியாற்றும் சர்ச்சைக்குரிய அதிகாரியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கஜபா காலாட்படைப் பிரிவின் தலைமைக் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்படவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கஜபா படைப்பிரிவின் தலைமை கட்டளை அதிகாரியாக பணியாற்றும் மேஜர் ஜெனரல் உதய பெரேரா இந்தவாரம் ஓய்வு பெறவுள்ளார். கஜபா படைப்பிரிவின் புதிய தலைமை கட்டளை அதிகாரி பதவிக்கு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போரில் 58 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக பணியாற்றிய மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர் என்று மனித உரிமை அமைப்புகளால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

அண்மையில் இலங்கை இராணுவத்தளபதியின் பொது உதவி அதிகாரியாக அவருக்கு நியமனம் வழங்கப்பட்டபோது, பன்னாட்டு மட்டத்தில் கடுமையான சர்ச்சைகளையும் கண்டனங்களையும் ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில் அவருக்கு மற்றொரு உயர்பதவிவழங்கப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற-10)

இந்திய மீனவர் படகுகள் விடுவிப்பு சந்திப்பின் பின்னரே இறுதி முடிவு

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.23

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பது தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அயலுறவுத் துறை அமைச்சர் மங்களசமரவீர, கொழும்பு மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர உள்ளடங்கிய குழுவினருடன் கலந்துரையாடல் மேற்கொண்ட பின்னரே தீர்க்கமானமுடிவைஎடுக்கமுடியும். இவ்வாறு வடக்கு மாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் செயலாளர் வி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

இந்திய தலைமை அமைச்சர் வருவதற்கு முன்னர் இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்க வேண்டும் எனில் அரச தலைவருடனும், அயலுறவுத் துறை அமைச்சருடனும் சந்தித்து கலந்துரையாட ஏற்பாடு செய்துதர வேண்டும் என்று கொழும்பு மீன்பிடி அமைச்சரிடம் கோரியுள்ளோம். அமைச்சரும் அதற்கு சம்மதம் தெரிவித்து சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று உறுதியளித்தார்.

அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்துக்காக இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பது என்றால் ஆய்வுக் குழு ஒன்றை நியமித்து ஆராய்ந்தே படகுகளை விடுவிக்க வேண்டும்.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்னர் விடுவிப்பது தொடர்பாக பலதரப்பட்ட கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

அண்மையில் கொழும்பு மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கும் வடக்கு கடற்தொழில்அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது. சில தரப்பினர் இந்திய படகுகளை விடுவிப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தியப்படகுகள் முழுவதையும் விடுவிப்பதை விடுத்து நிலைமைக்கு ஏற்றவகையில் எத்தனை படகுகளை எவ்வாறான நிபந்தனையுடன் விடுவிப்பது என்பது தொடர்பாக ஆராய ஆய்வுக் குழு அமைத்து ஆராயவேண்டும். அந்த குழுவில் கடற்தொழில் அமைப்புக்கள் சார்ந்த பிரதிநிதிகளையும் உள்ளடக்க வேண்டும்.

முதற்கட்டமாக 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ள 42 இந்திய மீனவர்களின் படகுகளை மட்டுமே விடுவிப்பது தொடர்பில் ஆராயவேண்டும். ஏனெனில் கடற்தொழில் கூட்டங்களில் கலந்துகொள்ளும் கடற்படையினர் அதிகளவான படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் புதிதாக படகுகளை அங்குதடுத்து வைக்க முடிய வில்லை. இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று கூறுகின்றனர்.

இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இலங்கை வருவதற்கு முன்னர் இந்தியப் படகுகளை விடுவிப்பதாயின் முன்னைய காலத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரு தொகை படகுகளை மட்டுமே விடுவிக்க வேண்டும். இதையே நாம் கூட்டங்களில் வலியுறுத்தி வருகின்றோம். என்றார். (ற-8)

ரெஜி ரணதுங்கவின் பொறுமையை மகிந்த புரிந்து கொண்டமை மகிழ்ச்சி

அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 24

முன்னாள் அமைச்சர் ரெஜி ரணதுங்கவின் பொறுமையை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தற்போதாவது புரிந்து கொண்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது என்று அமைச்சரும் ரெஜி ரணதுங்கவின் புதல்வருமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

ரெஜி ரணதுங்கவின் 80ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் கம்பஹா உடுகம்பள பிரதேசத்தில் உள்ள அவரது கல்லறையில் அஞ்சலிசெலுத்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

எங்களது தந்தை இறக்கும் போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். மகிந்த ராஜபக்ச எமது தந்தைக்கு அமைச்சர் பதவியை வழங்கவில்லை. எனது தந்தை என்னுடன் இறுதி வரிசையில் நாடாளுமன்றத்தில் இருந்தார். இவ்வாறு ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தநிலையிலேயே எமது தந்தை இறந்தார். ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வந்தவர்களுக்கு மகிந்த ராஜபக்ச அமைச்சு பதவிகளை வழங்கினார். மகிந்த ராஜபக்ச எமது தந்தையை எப்படி உபசரித்தார் என்பது எனக்கு தெரியாது.

இறந்து போன ரெஜி ரணதுங்கவை மகிந்த ராஜபக்ச தற்போது புரிந்து கொண்டிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

பிரசன்ன ரணதுங்க அண்மையில் கூறிய கதையை கேட்டுக்கும் போது நாங்கள் தனியாக வந்து தந்தைக்கு மரியாதை செலுத்துவது நல்லது. நாங்கள் அவர்களுடன் வந்தால், நாமும் அவர்களின் நிலைக்கு தள்ளப்படுவோம். இதனால், தனியாக வந்து தந்தைக்கு மரியாதை செலுத்துவது சிறந்தது. பிரசன்ன ரணதுங்க அண்மையில் நடந்து கொண்டவிதம் குறித்து நாம் அனைவரும் கவலை யடைகிறோம். என்றார். (ற-10)

31ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி கனகம்மா (மல்லிகா ரீச்சர்)
இரத்தினசிங்கம்

அன்னை மடியில் 30.07.1942
இறைவன் அடியில் 26.03.2017

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே! ஆருயிர் அம்மா
உயிரின் உயிரே எங்கள் அம்மா!
கரித்துக் கொட்டும் கண்ணீர்த்துளிகள்
இருபுறமும் கரை தேடி அலைய
தவிக்கின்றோம் உங்கள் முகம் தேடி அம்மா!
உடல் தந்தாய், உயிர் தந்தாய்
மதி சொன்னாய் அரவணைப்பும் தந்தாய்
எம் பாசவிளக்கு பறிபோனது என்று
பாரெல்லாம் சொல்லி அழுகின்றோம்
எங்கள் அம்மா அன்பான அம்மா
நாள்கள் முப்பத்தொன்று ஆகியும்
ஆறவில்லை எங்கள் மனம் பாசமுகம் யுகங்கள் தோறும்
பாசத்தின் பிறப்பிடமே! நேசத்தின் இருப்பிடமே
இவ்வுலகம் உள்ளவரை மறவாது உங்கள் நினைவு
எங்களது நெஞ்சமதில் உங்கள் நினைவுகளை
சுமந்து வாழும் அன்பான பிள்ளைகள்

கடந்த 26.03.2017 இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் 23.04.2017 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (25.04.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் இந்த நிகழ்வினும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப்பெறாதவர்கள் இந்த அழைப்பை
தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் மறைவுச்செய்தி கேட்டு நேரடியாகவும், தொலைபேசி ஊடாகவும், தந்தி வழியாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும், பதாகைகள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் தமது அனுதாபங்களைத் தெரிவிதோருக்கும், மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

73, கொழும்புத் துறை வீதி,
வாழைப்பழம்.

(சி.எஸ்.3463) (13.17)

பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விவசாயிகளைச் சந்தித்தார் தமிழக முதல்வர் எடப்பாடி

மோடியிடம் பேச்சு நடத்துவதாக உறுதி

புதுடெல்லி, ஏப். 24

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தியத் தலைநகர் டெல்லியில் கடந்த 41 நாள்களாகப் போராடிவரும் தமிழக விவசாயிகளை தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி நேற்றுச் சந்தித்தார். இந்தச் சந்திப்பை அடுத்து போராட்டம் கைவிடப்பட அதிக சாத்தியமுள்ளது என்று இந்திய ஊடகங்கள் நேற்று மாலை குறிப்பிட்டன.

தேசிய, தனியார் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்வது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழக விவசாயிகள் டெல்லியில் கடந்த மாதம் 14 ஆம் திகதி முதல் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டத்தை மோடி கண்டுகொள்ளவில்லை. இதனால் அவர்மீது கடும் விமர்சனம் முன்வைக்கப்பட்டது. இந்த நிலையில் கடந்த புதன்கிழமை 19 ஆம் திகதி பொன்.இராதாகிருஷ்ணன் விவசாயிகளைச் சந்தித்து அவர்களின் கோரிக்கை தொடர்பில் பரிசீலிப்பதாக வாய்மொழி வாக்குறுதி வழங்கினார். இரண்டு நாள்களுக்குள் எழுத்து மூலம் வாக்குறுதி தரப்படாவிட்டால் போராட்டம் தொடரும் என்று விவசாயிகள் கெடு விதித்தனர். அது நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தது. எழுத்து மூல வாக்குறுதி வழங்கப்படாததை அடுத்து அவர்கள் தாம் ஏற்கனவே தெரிவித்ததைப் போன்று நேற்று முன்தினம் தமது சிறுநீரைக் குடித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். விவசாயிகளின் அறிவிப்பின் படி அவர்கள் நேற்று மனித மலம் உண்ணும் போராட்டத்தில் ஈடுபட வேண்டும். ஆனால் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களை நேரில் சென்று சந்தித்ததை அடுத்து மலம் உண்ணும் போராட்டம் கைவிடப்பட்டது. "போராட்டத்தை முழுமையாகக் கைவிடுவது தொடர்பில் மோடி - எடப்பாடி சந்திப்பின் பின்னர் முடிவு செய்யப்படும்" என்று போராட்டத்துக்கு தலைமை தாங்கிவரும் அய்யாக்கண்ணு தெரிவித்தார்.

"டெல்லியில் 41 ஆவது நாளாக போராட்டம் நடத்திவரும் தமிழக விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்க்கவேண்டும். அவர்கள் போராட்டத்தை கைவிட வேண்டும் என்பதற்காகவே இன்று (நேற்று) நேரில் சந்திக்க வந்துள்ளேன். காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கவேண்டும். தேசிய நதிகளை இணைக்க வேண்டும். விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். தமிழக அரசு இதுவரை விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டுதான் செயல்பட்டு வந்துள்ளது.

விவசாயிகளுக்கான அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்க்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். எனவே தமிழக விவசாயிகள் தங்களின் போராட்டத்தை கைவிட்டு தமிழகம் திரும்பவேண்டும்" என்று எடப்பாடி கேட்டுக் கொண்டார். (ம)

20 பள்ளிக்குழந்தைகள் உடல்கருகி உயிரிழப்பு

தென்னாபிரிக்காவில் பெரும் துயரம்

கேப்டவுன், ஏப். 24

லொறியும் பாடசாலைக் குழந்தைகளை ஏற்றிச் சென்ற பேருந்தும் நேருக்கு நேர் மோதிவிபத்துக்குள்ளானதில் பேருந்தில் இருந்த 20 குழந்தைகள் உடல் கருகி உயிரிழந்தனர். இந்தத் துயரச் சம்பவம் தென்னாபிரிக்காவின் முமாலங்கா மாகாணத்தில் நேற்று முன்தினம் இரவு (இலங்கை நேரப்படி) நடைபெற்றது.

மோதிய வேகத்தில் பேருந்து தீப்பற்றி எரிந்தது. பேருந்து கவிழ்ந்திருந்ததாலும் குழந்தைகளால் தப்பித்து வெளிவர முடியவில்லை. இதனால் அவர்கள் தப்பித்துக் கொள்ள இயலாமல் உடல் கருகி உயிரிழந்தனர் என்று பொலிஸார் தமது முதல்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவித்தனர்.

தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ம)

2 ஆயுததாரிகள் சுட்டுக் கொலை

ரஷ்யாவில் தீவிரவாதத் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் அந்த நாட்டின் தீவிரவாத தடுப்புக் குழுவால் நேற்று சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

ரஷ்யாவின் தெற்குஸ்டாவ்ரோபோல் மாகாணத்தில் நவீன ரகத் துப்பாக்கிகளுடன் நடமாடிய இருவரே அவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் நேரடித் தொடர்பிலிருந்து அந்த அமைப்பிடம் ஆயுதப் பயிற்சி பெற்றவர். மற்றவர் ஆயுதக் குழுக்கள் பலவுடன் நேரடித் தொடர்பில் உள்ளவர் என்று ரஷ்ய தீவிரவாதத் தடுப்புக் குழு தெரிவித்தது. (ம)

பாதுகாப்பு நேற்று மு

பாரிஸ், ஏப். 24

பிரான்சின் அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான முதல்கட்ட வாக்குப்பதிவு பலத்த பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியில் நேற்று இடம்பெற்றது.

இந்தத் தேர்தலில் 11 பேர் போட்டியிடுகின்றனர். இவர்களில் மெரைன் லிபென், இம்மானுவேல் மக்ரோன், பிராங்கோயிஸ் பிலான், ஜீன் மெலென் சோன் ஆகியோருக்கு இடையிலேயேகடும்போட்டி நிலவுகி
பாக
யோரி
தற்கு
என்று
வேட்ப
தமது
வாதத்
துக்க
னர். பெ
பர் ட்ர
யைப்
ரைை
ருந்தா
ரோதக்

அறிவியலில் அரசியல் தலையீடு; எதிர்த்து உலகளவில் பேரணிகள்

வொஷிங்டன், ஏப். 24

அறிவியலில் அரசியல் தலையீட்டை எதிர்த்து உலகளவில் நேற்றும் நேற்று முன்தினமும் பேணிகள் நடத்தப்பட்டன.

கடந்த சில ஆண்டுகளின் வரவுசெலவுத்திட்ட ஒப்பீட்டில் உலக நாடுகள் பலவும் தமது வரவு செலவுத் திட்டத்தில் அறிவியல் திட்டங்களுக்கு ஒதுக்கும் நிதியின் அளவைக் குறைத்துக் கொண்டு வருகின்றன. குறிப்பாக அமெரிக்கா மிகப்பெரும் தொகையைக் குறைத்துள்ளது. தவிர உலக அளவில் 2 செல்சியஸ் வெப்பநிலையைக் குறைக்கும் திட்டத்துக்கும் ட்ரம்ப் முட்டுக்கட்டையாக உள்ளார். இதனால் அவருக்கு எதிராகவும் பல பேரணிகள் நடத்தப்பட்டன.

உலகிலுள்ள 500 நகரங்களில் இந்தப் பேரணிகள் நடத்தப்பட்டன என்று பன்னாட்டு உடகங்கள் செய்திவெளியிட்டன. (ம)

அதிமுக இணைப்புத் தொ

சென்னை, ஏப். 24

அ.தி.மு. கழகத்தின் இணைப்புத் தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியின் தரப்பிலும், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தரப்பிலும் தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் அ.தி.மு. கழக தலைமையகத்தில் இன்று சந்தித்துப் பேசவுள்ளன என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைந்த பின்னர் அ.தி.மு. கழகத்தின் பொதுச்செயலாளராகச் செயற்பட்டார் சசிகலா. அவர், சிறைக்குச் செல்வதற்கு முன்னர் தனது அண்ணன் மகன் டி.டி.வி. தினகரனை துணைப் பொதுச்செயலாளராக நியமித்தார். தினகரன் ஜெயலலிதாவால் நீக்கப்பட்டவர். எனவே அவரது நியமனத்தைப் பல தரப்பும் ஏற்கவில்லை. ஜெயலலிதா போட்டியிட்டு வெற்றிபெற்ற ஆர்.கே. நகரில் வேட்பாளராகவும் தினகரன் நிறுத்தப்பட்டார். இடைத்தேர்தலில் வாக்குகளுக்குப் பணம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு தினகரனின் மீது உள்ளது. இரட்டை இலைச் சின்னத்தை மீட்பதற்காக அவர் இந்தியத் தேர்தல் ஆணையத்தக்கு லஞ்சம் கொடுத்தார் என்று டெல்லி பொலிஸார் ஆதாரத்துடன் வழக்குப் பதிவுசெய்துள்ளனர். இதனால் அ.தி.மு. கழகம் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

இதனையடுத்து எடப்பாடி பழனிச்சாமி, அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சசிகலா குடும்பத்தை அடியோடு நீக்கிவிட்டு கட்சியை நடத்துவது என்று முடிவெடுத்துள்ளனர். கட்சியில் இருந்து பிரிந்து சென்ற பன்னீர்செல்வம் அணியுடன் பேச்சு நடத்த தனிக்குழு அமைக்கப்படும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். இந்தப் பேச்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலகப் புவி தினமான நேற்றுமுன்தினம் உலகெங்கும் பரவலாக விழிப்புணர்வுப் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவின் உத்தர பிரதேசத்திலும் அவ்வாறு பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் பங்கேற்ற மாணவிகள் சிலரின் ஒளிப்படமே இது. (ம)

தலிபான் தாக்குதலில் 140 சிப்பாய்கள் சாவு

காபூல், ஏப். 23

ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பு நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 140 சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஆப்கானிஸ்தானின் மசர் இ ஷெரீப் பகுதியில் இராணுவச்சிப்பாய்கள் முகாமிட்டுள்ளனர். இந்தத் தகவலை அறிந்துகொண்ட தலிபான் அமைப்பினர் சிப்பாய்களைப் போன்று வேடமிட்டுச் சென்று இந்தத் தாக்குதலை நடத்தினர். சிலர் தற்கொலைத் தாரிகளாகவும் மாறினர்.

140 சிப்பாய்கள் தாக்குதலில் சாவடைந்தனர். மேலும் பலர் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

இராணுவத்தினர் நடத்திய பதில் தாக்குதலில் 10 ஆயுததாரிகள் உயிரிழந்தனர் என்றும் பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

புக்கு மத்தியில் பிரான்சில் தல்கட்ட வாக்குப் பதிவு

லவுகிறது. அதிலும் குறிப்பாக பெண் மக்ரோன் ஆகியோரில் ஒருவர் அதிபராவதற்கு வாய்ப்பு அதிகம் என்று கருதப்படுகிறது.

வேட்பாளர் அனைவரும் மது பரப்புரையில் தீவிரவாதத்துக்கு எதிரான கருத்துக்களைமுன்வைத்துள்ளார். பென், அமெரிக்க அதிர் ட்ரம்பின் பரப்புரையப்போல் தனது பரப்புரையையும் கட்டமைத்திந்தார். இதன்படி, சட்டவிரோதக் குடியேறிகள் வெளியேற்றப்படுவார்கள். மேலும் ஆண்டிற்கு 10 ஆயிரம் குடியேறிகள்தான் சட்டரீதியாக அனுமதிக்கப்படுவார்கள். பிரான்சில் தேவையற்ற மசூதிகள் இடிக்கப்படும். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்களுக்குச் சமூக நலத்திட்டங்களின் கீழ், வீடுகள் பெறுவதில் முன்னுரிமை அளிக்கப்படும் என்ற வாக்குறுதிகளை வழங்கினார். அவற்றுக்கு அங்கு பெரும் வரவேற்பு உள்ளதாகக் கருத்துக் கணிப்புக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

பிரான்ஸில் வேலையில்லாதவர்களின் சதவீதத்தை 9.7 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகக் குறைப்பது, மற்றும் 15 வயதுக்குட்பட்ட மாணவர்கள் அலைபேசிகளை பயன்படுத்துவதற்கு தடை விதிப்பது என்பன மக்ரோனின் முக்கிய திட்டம். நேற்று ஆரம்பமான வாக்குப் பதிவுகள் எதிர்வரும் 7 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளன. (ம)

400 ஆயுததாரிகள் பாகிஸ்தானில் சரண்

இஸ்லாமபாத், ஏப். 24

பாகிஸ்தான் பலுசிஸ்தான் மாகாணத்தில் கிட்டத்தட்ட 400 ஆயுதாரிகள் தமது ஆயுதங்களை அரசிடம்ஒப்படைத்துநேற்றுமுன்தினம் சரணடைந்துள்ளனர்.

பலுசிஸ்தானில் அல் குவைதா, தலீபான் அமைப்பைத்தவிர வேறு பல ஆயுதக் குழுக்களும் செயற்பட்டு வந்தன. ஆயுததாரிகள் சரணடைவதற்கு என்று தற்போது அங்கு கெடு விதிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் மட்டும் 400 ஆயுததாரிகள் சரணடைந்தனர் என்று பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

அய்மான் அல் ஜவாஹிரியை பாதுகாக்கிறது பாகிஸ்தான்

அல்குவைதா அமைப்பின் தலைவர் அய்மான் அல்ஜவாஹிரி பாகிஸ்தான் கராச்சி நகரில் பதுங்கி உள்ளார் என்றும் அவரைப் பாகிஸ்தான் உளவுத்துறை பாதுகாத்து வருகிறது என்றும் அமெரிக்க உளவுத்துறையின் முன்னாள் அதிகாரி புரூஸ் ரிடல் தெரிவித்தார்.

அல்குவைதாவின் முன்னாள் தலைவர் ஒசாமா பின்லேடனுக்குப் பிறகு இவர் பொறுப்பேற்ற பிறகு இவரது மறைவிடம் குறித்து முதன் முதலாகத் தகவல் வெளியாகியுள்ளது. பின்லேடன் கொல்லப்பட்ட அபோத்தாபாத்தில் கிடைத்த ஆதாரங்கள் அல்ஜவாஹிரியின் தற்போதைய இருப்பிடத்தை நோக்கி எம்மைத் திருப்பியுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

15 அப்பாவிகள் ஐ.எஸ்ஸால் சுட்டுக்கொலை

ஈராக்கின் மோசூல் நகரில் 15 பொதுமக்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று ஈராக் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

மோசூலின் கிழக்குப் பகுதி மீட்கப்பட்டுவிட்டது. மேற்குப் பகுதிக்கான போர் தற்போது நடைபெற்று வருகிறது. அந்த அமைப்பின் பிடியில் உள்ள மக்கள் பலர் அவர்களிடம் இருந்து தப்பித்து அரச படைகளுக்குள் நுழைகின்றனர். அவ்வாறு தப்பிக்க முயன்ற 15 பேரே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று ஈராக் ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)

தொடர்பில் இன்று முக்கிய பேச்சு

சுக்கு ஓ. பன்னீர்செல்வம் தரப்பும் இணங்கியது. இரு அணிகளும்தமது தரப்பில் இருந்து பேச்சுக்கு செல்லவுள்ள அணிகளை அறிவித்துள்ளன. எடப்பாடி பழனிச்சாமி தரப்பில்சட்டமன்ற உறுப்பினர் வைத்திலிங்கம் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. குழுவில் அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், டி.ஜெயக்குமார், சி.வி.சண்முகம், செங்கோட்டையன், வீரமணி, தங்கமணி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். ஓ.பி.எஸ். அணிக்கு முனுசாமி தலைமையில்குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் நத்தம் விஸ்வநாதன், மாபா. பாண்டியராஜன், ஜே.சி.டி.பிரபாகர், பொன்னையன், மனோஜ் பாண்டியன், மைத்ரேயன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இந்தக் குழுக்கள் அ.தி.மு. கழகத்தின் தலைமையகத்தில் இன்று சந்தித்துப் பேசவுள்ளன என்று எதிர் பார்க்கப்படுகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச வருமானம் கடந்த ஆண்டில் 23 சதவிகித அதிகரிப்பை பதிவுசெய்துள்ளது

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க கருத்துரைப்பு

கடந்த ஆண்டில் பதிவான அரச வருமானங்களின் உள்வருகையானது ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துக் காணப்படுவதான தகவல் நிதிய மைச்சர் ரவி கருணாநாயக்கவால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி முதல் 9 மாத காலப்பகுதிக்குரித்தான வருமானத்தை அதற்கு முந்தைய வருடத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது 23 சதவீகிதத்தால் அதிகரித்துள்ளதான கணிப்பீடுகள் பதிவாகியுள்ளது.

மேற்படி வருமானமானது 1180 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. அத்துடன் 2015 ஆம் ஆண்டு இதேகாலப்பகுதியில் அரச வருமானம் 959 பில்லியன் ரூபாவாக அமைந்திருந்தமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் அரச வருமான உள்ளீடு தொடர்பில் கருத்துரைத்துள்ள நிதியமைச்சர்,

" அரச செலவுகள் மூலம் நாணயமாற்றுச் செலவீனத்தை உள்வாங்குவதற்கு நாட்டின் அபிவிருத்தியின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பயனளித்துள்ளது. இதன்மூலமான பயன்களை பொதுமக்கள் தற்போது அனுபவித்து வருவது சிறந்த எடுத்துக்காட்டாகும்." என்றார்

அரச வருமானத்தில் பெரும்பகுதியை திரட்டும் இலங்கை சுங்கப்பகுதி, உள்நாட்டு இறைவரித்திணைக்களம் மற்றும் கலால் திணைக்களம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட சிறந்த முகாமைத்துவத்தின் காரணமாகவே வருமானத்தை அதிகரிக்கமுடிந்துள்ளது. அத்துடன் அரசுக்குக் கூடுதலான வருமானம் என்பது வரி வருமானத்தின் மூலமே கிடைக்கிறது.

தவிர வருடத்தின் முதல் 9 மாத காலப்பகுதியில் வரிமூலமான வருமானம் 1067 பில்லியன் ரூபாவாக காணப்படுவதாகவும் இதற்கமைவாக வரிமூலமான வருமானம் என்பதும் 22 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், கடந்த சில வருடங்களில் மொத்த அரச கடன் அதிகரித்ததினால் அரச வருமானம் வெளிநாட்டுநாணய மாற்று செலவை உள்வாங்குவதற்கு கூட போதுமானதாக அமையவில்லையெனவும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

சீனாவின் பொருளாதார வளர்ச்சி வீதம் இலக்கை அடைந்துள்ளது

சீனாவின் தேசிய புள்ளியியல் அமைப்பு தெரிவிப்பு

சீனாவின் முதல் காலாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி வீதம் நிர்ணய இலக்கை விட அதிகரித்துள்ளதாகவும் சீனாவின் உட்கட்டமைப்புத் திட்டங்களில் மேற்கொள்ளப்படுவதான முதலீடுகள் அதிகரித்து ஏற்றுமதியும் குறிப்பிடத்தக்களவு உயர்வடைந்துள்ளதாகவும் சீனாவின் தேசிய புள்ளியியல் அமைப்புகருத்துத் தெரிவித்துள்ளது.

குறிப்பாக நடப்பாண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் மாதம் வரையிலான முதல் காலாண்டுப் பகுதியல் சீனப்பொருளாதாரம் 6.9 சதவீதம் என்ற உறுதியான வளர்ச்சி நிலையை அடைந்துள்ளது.

இதன்படி, முதல் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது 2.63 லட்சம் கோடி டொலராகப் பதிவாகியுள்ளது.

இந்தப் பொருளாதார வளர்ச்சி என்பது, முழு ஆண்டுக்கு நிர்ண யிக்கப்பட்டதான 6.5 சதவீதத்தைக் காட்டிலும் அதிகமாகக் காணப்படுகிறது. அதேபோன்று கடந்த 2016 ஆம் ஆண்டின் ஒக்ரோபர் தொடக்கம் டிசெம்பர் வரையான இறுதிக் காலாண்டில் ஈட்டிக்கொள்ளப்பட்ட பொருளாதார வளர்ச்சியான 6.8 சதவீதத்துடன் ஒப்பிடும்போதும் இது அதிகம் எனக் கூறப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக சீனாவின் ஏற்றுமதிச் செயற்பாடுகள் வீழ்ச்சி கண்டு வந்த நிலையில்,

> "கடந்த சில ஆண்டுகளாக சீனாவின் ஏற்றுமதி வீழ்ச்சி கண்டு வந்த நிலையில், நடப்பாண்டின் முதல் காலாண்டில் யுவான் கரன்ஸி மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி அண்ணளவான உயர்வைப் பதிவு செய்துள்ளது.

நடப்பாண்டின் முதற் காலாண்டில் யுவான் கரன்ஸி மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி அண்ணளவான உயர்வைப் பதிவு செய்துள்ளது. இரண்டாவது காலாண்டை நோக்கும்போது சீனப்பொருளாதாரத்தின் வளர்ச்சி என்பது நிலையானதாகவும் உறுதித் தன்மை வாய்ந்ததாகவும் இருக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றுமதியை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய தன்மைகளை மாற்றியமைக்க சீனா தீர்மானித்துள்ளது. உள்நாட்டு நுகர்வு சார்ந்து அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்து வருகிறது. இதற்காக வென சீனா உட்கட்டமைப்புத் திட்டங்களில் முதலீட்டை கணிசமான அளவில் அதிகரித்து வருகின்றமை நோக்கத்தக்கது.

ஹற்றன் நஷனல் வங்கி 'கப்றுக' உடன் இணைவு

வாடிக்கையாளர்களுக்கு வியத்தகு வரவேற்பு சேவைகளை வழங்க தீர்மானம்

ஹற்றன் நஷனல் வங்கியானது தனது உயர் தரம் வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு 12 இற்கு 7 அணுகுதலை அளிக்கும் வகையிலான 'கிளப்' அல்லது 'பிரையோரிட்டி சேக்கிள்' மூலமான தனிப்பட்ட உதவியாளர் ஒருவரை வைத்திருப்பது போன்ற எண்ணவெளிப்பாட்டைத்தரும் வியத்தகு வரவேற்பு சேவைகளை வழங்க உள்ளது.

இதன்படி இலங்கையின் மிகப்பெரிய இலத்திரனியல் வர்த்தக மற்றும் ஒன்லைன் பரிசுப் பொருள்கள் வரை பரந்த அளவிலான வர்த்தகத்தை மேற்கொள்ளும் 'கப்றுக' உடன் ஹற்றன் நஷனல் வங்கி இணைந்து செயலாற்றவுள்ளது.

ஹற்றன் நஷனல் வங்கியின் 'கிளப்' அல்லது 'பிரையோரிட்டி சேக்கிள்' வாடிக்கையாளர்கள் (www.hnshop.lk) என்ற இணையத்தளம் மூலமாகவே இந்தச் சலுகைகளை பெற்றுக்கொள்ள முடிகிறது.

ஹற்றன் நஷனல் வங்கியினால் வழங்கப்படுவதான இந்தத் தனிப்பட்ட வரவேற்புச் சேவையானது வாடிக்கையாளர்களுடைய குடும்பத்தார் மற்றும் நண்பர்களின் தனிப்பட்ட தேவைகள் தொடர்பான விபரங்களில் கூடுதல் கவனம் செலுத்துவதுடன் குறித்த இணையத்தில் உள்ள ஒரு செயலியை அழுத்துவதன் மூலம் அவர்களது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தவிர இந்தச் சேவை வழங்கலில் சேவைத் தேர்ச்சி பெற்றதான குழுவொன்று இயங்குநிலை பெறுவதுடன் இணையத்தளத்தில் வரிசைப்படுத்தப்பட்டிருப்பதான சிறந்த பொருள்களை உரிய முறையில் விநி யோகிப்பதையும் அவர்கள் உறுதி செய்துள்ளமை நோக்கத்தக்கது.

விலங்கு நோயைக் கண்டறியும் 'சிப்' செயலி அறிமுகம்

விலங்குகளுக்கு ஏற்படுவதான நோய்களைக் கண்டறியும் வகையில் சிறியரக 'சிப்' செயலி ஒன்றினை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளன தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி குறித்த சிறிய அளவுடையதான சிப்பினை விலங்குகளில் பொருத்தி அவைகளுக்கு ஏற்படும் மாற்றங்களை அவதானிப்பதன் ஊடே அவற்றில் ஏற்படும் நோய்களை அறிந்துகொள்ள முடியும் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் பெருவிரலின் நுனிப் பகுதி அளவே உடையதான குறித்த சிப் ஆனது தனித்தனியாக ஒவ்வொரு உடல் அங்கங்களிலும் பொருத்தமுறக்கூடியதாகவும், வினைத்திறனோடு இயங்குநிலை பெறக்கூடியதாகவும் இருக்கின்றது. தேவை ஏற்படின் இவற்றை மனிதர்களிலும் பயன்படுத்த முடியும் என்பது இதன் விசேட அம்சமாகச் சொல்லப்படுகிறது.

நீண்டகால ஆய்வுச் செயற்பாடுகளின் பின்பு வடிவமைக்கப்பட்டுள்ளதான குறித்த சிப் செயலியினை பயன்படுத்துவதற்கான அனுமதியை பூட் அன்ட் ட்றக் அட்மினிஸ்ரேசன் Food&Administration நிறுவனம் வழங்கியுள்ளமை நோக்கத்தக்கது.

மாணிக்கக்கல் வர்த்தகத்தில் ஈடுபடும் வெளிநாட்டவர்களை கைது செய்ய விசேட செயற்றிட்டம்

சுற்றுலா விசா மூலம் நாட்டுக்குள் வருகைதந்து மாணிக்கக் கல் வர்த்தகத்தில் ஈடுபடும் வெளிநாட்டவர்களை கைது செய்வதற்கு பாதுகாப்புத் தரப்பினருடன் இணைந்ததான விசேட திட்டமொன்றை தாம் ஆரம்பித்துள்ளதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபை தெரிவித்துள்ளது.

தவிர இது குறித்து கருத்துரைத்துள்ள தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க பரண அதிகார சபையின் தலைவர் அசங்க வெலகெதர,

"மாணிக்கக்கல் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்ற இடங்களில் இடம்பெறுகின்ற அனர்த்தங்களை கட்டுப்படுத்துவதற்கு புதிய தொழில்நுட்ப வழிமுறைகளைப் பயன்படுத்த திட்ட மிட்டுள்ளோம். அத்துடன் சுற்றுலா விசா மூலம் வருகைதந்து மாணிக்கக்கல் வர்த்தகத்தில் ஈடுபடும் வெளிநாட்டவர்கள் தொடர்பிலும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு அறிவித்துள்ளளோம்." - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் பங்கு

திருமதி மலர்விழி கனகசபை

அன்றாட உலக வாழ்வில் பெற்றோர் பெறும் தலைசிறந்த பேறு "அறிவுடைய நன்மக்கட் பேறாகும்." அறிவைக் கற்பதால்தான் நாம் அதனைப் பெறலாம். பெற்றோரிடமும், குழந்தையிடமும் இயல்பாகவே அன்பு இருக்கின்றது. பிள்ளையைப் பாதுகாக்கவேண்டும்என்றபாதுகாப்புஉணர்வை இயற்கை பெற்றோரின் முனையில் இயல்பாகவே கிரகித்து வைத்துள்ளது. ஆனால் பெற்றோர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு சில பிள்ளைகளிடம் இல்லை. எனவேதான் *"பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு"* என பழமொழி பழைய காலத்தில் தோன்றியது எனலாம்.

இளமையில் கல்வி

கல்வி கற்பதற்கு உரிய பருவம் இளமைப் பருவமாகும். இதனால்தான் "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பர். இளமைப் பருவம் வாழ்க்கையின் ஆரம்பப் பருவமாகும். குடும்ப வளம் பெற்று சிறப்புடன் திகழவும், முதுமைப் பருவத்தை அஞ்சாது எதிர்கொள்ளவும் உறுதுணையாவது இளமைப் பருவத்தில் நாம் பெறும் கல்வியாகும். கற்பதை குறைகளின்றித் தெளிவாகக் கற்க வேண்டும் என்றார் வள்ளுவர்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (குறள் - 391)

கற்க வேண்டிய நூல்களை ஒருவன் குற்றம் அறக் கற்க வேண்டும். கற்ற பின்பு அந்தக் கல்விக்குத் தகுந்து ஒழுக வேண்டும் என திருக்குறளில் கல்வி அதிகாரத்தில் தன் ஈரடிகளால் மிகத் தெளிவாக வள்ளுவர் கூறியுள்ளார். ஒருவன் கல்வி அறிவுடையவன் என்பதன் சாட்சியாக அமைவது அவனது அடக்கமான பண்பாகும். இதனால்தான் அடக்கம் ஒரு மனிதனுக்குத் தரும் பரிசு தேவலோகத்தில் வாழும் பேற்றைத் தரும் என்றும் அடங்காமை வாழ்வில் ஒளிமயமற்ற, சிறப்பற்ற, துன்பமான வாழ்வையே தரும் என்றும் பொய்யாமொழிப்புலவர் கூறிஉள்ளார். எனவே இளம் தலைமுறையினரான மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய நற்பண்புகளில் அடக்கம் பணிவு, கீழ்படிதல் மிக முக்கியமானவை.

மானிட வாழ்வில் பெற்றோர் பெறும் மிகப்பெரிய செல்வம் "அறிவறிந்த மக்கட் பேறே" என வள்ளுவர் திருக்குறளில் மக்கட் பேறு அதிகாரத்தில் (குறள் - 61இல்) குறிப்பிட்டுள்ளார். பிள்ளை பெற்று விட்டால் மட்டும் போதாது. அவர்களைப் பேணி வளர்க்க வேண்டும். சொற் கேளாப் பிள்ளையால் குலத்துக்கு ஈனம்.

காலை எழுந்தவுடன் படிப்பு

"எல்லாக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்கிறது பாடல். தொட்டிலில் பழகிய பழக்கம் தான் சுடுகாடு மட்டும், ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. எனவே பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு, மாலை முழுதும் விளையாட்டு என்ற பழக்கத்தை வழக்கப்படுத்திக் கொண்டுவர வேண்டும். பிள்ளைகளை தண்டனை மூலம் திருத்த பெற்றோரோ, ஆசிரியர்களோ முற்பட க்கூடாது. அன்பினால் அறிவு கூறி, கனிவாகத் திருத்த முற்பட வேண்டும். மிரட்டுபவர்கள் மற்றும் தண்டனை கொடுப்போர் மீது பிள்ளைகள் அன்பு செலுத்தாது. கடந்த 30 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற போரால் எமது நாட்டில் கல்வியின் முன்னேற்றம் 50 வருடங்கள் பின்நோக்கிச் சென்று விட்டது என்று கூறலாம். இன்றைய பெற்றோரின் கடமை முந்தைய காலஎம் கல்வியின் தரத்தை மீண்டும் கட்டி, எழுப்புவதென சபதம் செய்ய வேண்டும்.

கல்விக்காகவே எமது பெற்றோர்கள் அன்றிலிருந்து இன்று வரை முதலீடு செய்து வருகின்றனர். இதனால் பெறும் வருமானங்களைக் கொண்டே தமது வாழ்க்கையை சீராக நடத்துகின்றனர். எனவே எமது வீழ்ச்சிகள் எழுச்சியின் முதற்படி. எனவே எமது எதிர்கால சந்ததியினரை, எதிர்காலத் தலைவர்களை உரிய முறையில் வழிப்படுத்தி நல்வழிக்கு கொண்டு செல்ல வேண்டியது பெற்றோர்களினதும், பாதுகாவலர்களினதும் காலத்தின் கட்டாயமான கடமையாகும். இன்று வீடுகளில் உள்ள இணைய த் தளங்களும், தொலைக் காட்சிகளும், அலை பேசியும், கமராக்களும் மற்றும் வெள்ளித் திரைகளும் அதில் காண்பிக்கப்படும் நிகழ்ச்சிகளும் சில பெற்றோர்களும் பிள்ளைகளும் வெளியில் சென்று கெடும் வாய்ப்பை நிறுத்தி வீட்டில் இருந்தே கெடும்படி செய்துள்ளன. எனவே சமூக சீர்கேடான நிகழ்ச்சிகளை பெற்றோரோ, பிள்ளைகளோ பார்க்கக் கூடாது. மாணவர்களுக்கு அலைபேசிப் பாவனையை முக்கியமான தேவைக்கன்றி மற்றைய தேவைகளுக்கு பாவிக்க பெற்றோர் அனுமதிக்கக்கூடாது.

தன் பிள்ளை அறிவில் விற்பன்னராகி, பெரியோரிடம் சான்றோன் என்ற பெயர் பெற வேண்டும் என்பதையே எந்தப் பெற்றோரும் விரும்புவர்.

"ஈன்ற பொழுதிற் பெரி(து)உவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் (குறள் - 69)

இதனையே வள்ளுவரும் மக்கட் பேறு என்ற அதிகாரத்தில் மிக அழகாகக் குறிப்பிடுகின்றார். பிள்ளைகளுக்கு தண்டனை வழங்காது, பிள்ளையைத் தாழ்த்திப் பேசாது நல்ல அறிவாளியாக வர பெற்றோர் வளர்க்க வேண்டும். பிழை கண்டு பிடிப்பதும், குற்றம் சொல்வதும் தமது சொந்த வழக்கமாகி விட்டார்கள் பெற்றோர். இந்த நிலை மாறவேண்டும்.

பிள்ளைகளின் திறமைகள்

நல்லவற்றையே பெற்றோர் செய்து நல்லவற்றையே பிள்ளைகளிடம் எதிர்பார்த்து நல்ல பழக்கத்தையே கற்றுக் கொடுக்க வேண்டும். பொதுவாகப் பார்க்குமிடத்து பிள்ளைகளின் திறமைகள் எல்லாம் முழுமையான மலர்ச்சி பெற்று வளர்வதற்கு பெற்றோரினது அன்பும் ஆதரவும் வழிகாட்டலும் மிகமிக அவசியம். அன்பும், ஆதரவும் எல்லை கடக்குமானால் அமிர்தம் நஞ்சாவது போன்று பிள்

> தொட்டிலில் பழகிய பழக்கம் தான் சுடுகாடு மட்டும், ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. எனவே பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு, மாலை முழுதும் விளையாட்டு என்ற பழக்கத்தை வழக்கத்தில் கொண்டுவர வேண்டும். பிள்ளைகளை தண்டனை மூலம் திருத்த பெற்றோரோ, ஆசிரியர்களோ முற்படக்கூடாது. அன்பினால் அறிவு கூறி, கனிவாகத் திருத்த முற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளையின் தன்னம்பிக்கையைக் குறைத்து பாதகமான விளைகளைப் பிள்ளையின் வாழ்வில் ஏற்படுத்தி விடும். அப்படிப் போகவிடாமல் தம்பிள்ளைகளை விருப்பம்போல நடமாடவும் எண்ணங்களை வெளியிடவும் சுதந்திரம் கொடுக்க வேண்டும். பெற்றோர்கள் முதலில் வாழ்க்கையை முன்மாதிரியாக்கி இலக்கியப் பற்றுடன் அமைதியாக, மகிழ்ச்சியாக நல்ல முறையில் அமைத்துக் கொண்டால் அதுவே குழந்தைக்கு எடுத்துக் காட்டாகக் கல்வியை சிறந்த முறையில் கற்க அமையும்.

பிள்ளைகளுக்கு மதிப்பு

பிள்ளைகள் அவர்களது வயதுக்கேற்ப சிந்தனை செய்யும் ஆற்றல் உண்டு. ஆனால் அதற்கு வேண்டிய வாய்ப்பையும் சுதந்திரத்தையும் பெற்றோர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பிள்ளைகளுடைய கருத்துகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். பிள்ளையின் மனப்போக்கு அதன் வளர்ச்சிக்கு ஏற்ற படியே மலர்ச்சி அடைய அனுமதித்தாலே பெரியவனாகின்றபோதும் எண்ணங்கள் சரியாக மலர்ச்சி அடையும்.

புதிய கல்வித் திட்டத்தால் பழைய பாடக் கல்வித் திட்டத்தில் படித்த பெற்றோரில் பலர் தங்கள் பிள்ளைகளுக்கு வீட்டில் பாடல் சொல்லிக் கொடுக்க முடியாமல் இருக்கின்றார்கள். இருந்தும் பிரத்தியேக வகுப்புக்களுக்கு இயலுமான வரை அனுப்பி தங்களுடைய உடம்பை உருக்கி படிக்க வைக்கின்றார்கள். நாட்டில் உயர்ந்தவராக வரவேண்டும்என்பதே எந்தப் பெற்றோரினதும் விருப்பம். எனவே நாட்டின் எதிர்காலத்தின் தலைவர்களாக வரவேண்டிய மாணவர்கள் ஆசியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பெரியோர்களுக்கும் மதிப்பளித்து கல்வி என்னும் பயிரில் முழுமையான இலக்கு அடைய கல்வித் தாயை மனதார வேண்டி வணங்குகிறேன்.

கட்டுரையாளர்:
உதவிக் கல்விப் பணிப்பாளர்(அழகியல்)
தீவக கல்வி வலயம், வேலணை.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

கழிவகற்றல் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனம்

வெறும் குப்பைதானே என்று அதிகாரிகள் அசமந்தமாக இருந்துவிட்டதால் அதன் எதிர்விளைவை இன்று முழுநாடுமே அனுபவிக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. மீதொட்ட முல்ல பகுதியில் கொழும்புநகரின் குப்பைகள் சரியான திட்டமிடல் இன்றி மலையாகக் குவிக்கப்பட்டதனால், அது சரிந்து அக்கம்பக்கத்திலிருந்த வீடுகளைத்தகர்த்துமூடியதன்காரணமாக30பேருக்குமேல்உயிர் இழந்தும் பலர் படுகாயமடைந்தனர். பலரின் சடலங்கள் இன்னமும்மீட்கப்படாமல்உள்ளன. இந்த இடர்நாட்டைப் பெரும் சோகத்தில் ஆழ்த்தியிருக்கின்றது.

குப்பைகள் அந்தப்பகுதியில் கொட்டி நிரப்பப்படுவதை அந்தப்பகுதி மக்கள் ஆரம்பத்திலிருந்தே எதிர்த்துவந்துள்ளார்கள். ஆனால் இப்போது இடர் ஏற்பட்டதன் பின்னர் அந்த மக்களையே குறை கூறுகிறார்கள் அதிகாரிகள். முன்கூட்டியே வெளியேறச்சொன்னோம். மக்கள்தான் அசையாமல்இருந்துவிட்டார்கள்என்றுஅவர்களின்நொண்டிச்சாட்டு உள்ளது. குப்பைகள் மேடாகக் குவிக்கப்பட்டமைக்கும் அதனால்விளைந்த கேடுகளுக்கும் அரசியல்வாதிகள்ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக்கொள்வது வேடிக்கையாக இருக்கிறது. இப்போதையவர்கள் அப்போதையவர்களையும் அப்போதையவர்கள்இப்போதையவர்களையும்குற்றஞ்சாட்டிக் கொண்டு மக்கள் கவனத்தை திசைதிருப்பப் பார்க்கி றார்கள். மக்கள் கண்களில் தங்களை நல்ல பிள்ளைகளாகக் காட்டிக் கொள்ள அவர்கள் பெரும் எத்தனம் செய்வது தெரிகின்றது.

இந்த நிலைமையில் தான் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன கழிவுகளை அழித்தொழிக்கும் செயற்பாட்டை அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் அத்தியாவசிய கடமையாகப் பிரகடனப்படுத்தும் மிக சிறப்பு வர்த்தமானி பிரகடனம் ஒன்றில் கடந்தவாரம் கையெழுத்திட்டிருக்கிறார். கழிவுகளை அகற்றுவது, சேகரிப்பது, கொண்டு செல்வது, ஒன்றாகவைப்பதுமற்றும்அவைகளைதரம்பிரிப்பதுபோன்ற செயற்பாடுகளின்போது எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை இந்த அறிவித்தல் விளக்குகின்றது. வீடுகளில் இருந்தும்வீதிகளிலிருந்தும்சேரிக்கப்படும்குப்பைகளையும்இது உள்ளடக்குகின்றது. இந்தக் கடமைகள் நிறைவேற்றப்படும் போது இடைஞ்சல்அல்லது இடையூறுவிளைவிப்பவர்கள்மீது கடும்நடவடிக்கைகள்எடுப்பதற்குவகைசெய்யப்பட்டுள்ளது.

குப்பைகள்,கழிவுகளைஅகற்றும்பணிகளைபெரும்பாலும் எல்லா உள்ளூராட்சி மன்றங்களுமே இப்போதும்தம்மால் இயன்றவரை செய்துதான் வருகின்றன. ஆகமீதொட்டமுல்லயில் குப்பைமேடு மலையாகக்குவிக்கப் பட்டமைக்கு நாட்டிலுள்ள எல்லா உள்ளூராட்சி மன்றங்களும் பொறுப்பாளியாக முடியாது. பெரும்பாலான மன்றங்களுக்குபோதிய வருமானம்இன்மையும், ஆளணி, வாகனம் மற்றும் இயந்திரக்குறைபாடுகளும் கழிவகற்றல் செயற்பாடுகளில் அசமந்தம் நிகழ வாய்ப்பாகின்றது. எனவே கழிவகற்றலைஎல்லாஉள்ளூராட்சிமன்றங்களுக்கும் அத்தியாவசியகடமையாகபிரகடனப்படுத்தியுள்ளஅரசதலைவர்அந்தவகையில்வருமானம்குறைந்தமன்றங்கள் என்று பாராமல் பொதுவில்எல்லாஉள்ளூராட்சிமன்றங்களுக்கும் அவைகளின் தேவைக்கும் அளவுகளுக்கும் ஏற்றவகையில் நிதி ஆதாரங்களையும்ஏற்பாடுசெய்வாரானால்அதுஅவர்களால் வரவேற்கப்படுவதாக இருக்கும்.

இந்தப்பிரகடனமானதுஅரசமைப்புக்குமாறானதுஎன்றும் சாதாரணபொதுமக்களைப்பாதிப்பதாகஇருக்கப்போகிறது என்றும் சில அரசியல் கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. இதில்காணப்படும்நியாயபூர்வமானவிடயங்கள் ஆராயப்பட்டுநிவர்த்திசெய்யப்படுவதும்அவசியம்.மீதொட்டமுல்ல சம்பவம்நாட்டிலுள்ள ஏனைய எல்லா உள்ளூ ராட்சி மன்றங்களும் விழிப்படையும்படி செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு புறநகர்ப் பகுதிகள் குப்பைக்கூழங்கள்குவிக்கப்படும்பகுதிகளாகஇருந்துவருகின்றனகுறிப்பாககல்லுண்டாய்பகுதி குப்பைகள்மற்றும் கழிவுகளைக் கொட்டும்பகுதியாக இருந்து வருகின்றது. குப்பைகள் மீள் உருவாக்கம் மற்றும் எரித்து அல்லது புதைத்து அழிப்பது போன்றவை முறையாக நெடுங்காலதிட்டமிடலாக செயற்படுத்தப்படுமானால், அந்தப்பகுதி மக்கள் செறிவாகக் குடியேறி வாழும் பகுதியாக அபிவிருத்தியடைய முடியும். மேலும் முன்னொரு காலத்தில் திட்டமிடப்பட்டது போல் இந்தப்பகுதி சிறந்த விளையாட்டுத்திடல்களை உருவாக்கவும் உதவியாக இருக்கும். இதற்கு பிரமுகர்கள் கவனம் எடுப்பார்களாக.

கட்டுரை

பிரச்சினைகளில் சிக்கித் தடுமாறும் முக்கிய மூன்று அரசியல் தரப்புக்கள்

பேராசிரியர் சுமணசிறி லியனகே விமர்சிக்கின்றார்

சிங்கள மூலம்- லங்காதீப
தமிழில் - வீ.எஸ்.ரீ

ஐ.தே.கவும்,சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தற்போதைய கூட்டரசை நிறுவியிருப்பினும், அடுத்து வரும் பொதுத் தேர்தலில் அவை பச்சை நீல வர்ணங்களில் தத்தமது தனித்துவத்தை வெளிப்படுத்தத் தனித்தே போட்டியிடவுள்ளதாக இந்த இரு கட்சிகளது செயற்பாட்டாளர்கள் மற்றும் பிரமுகர்கள் அடிக்கடி கருத்து வெளியிட்டு வருகின்றனர். சுதந்திரக் கட்சிஅமைச்சர்களில்குறிப்பிட்ட ஒரு சிலர், தாம் கலந்து கொள்ளும்செய்தியாளர்கள்சந்திப்புக்களில் மேற்குறித்த கருத்தை வலியுறுத்திக் கூறி வருகின்றனர். தவிர, இந்த இரு கட்சிகளின் உயர் மட்டத்தினர் அண்மைக் காலமாக தத்தமது கட்சிகளின் மீளமைப்புத் தொடர்பாக அக்கறை காட்டிச் செயற்பட்டு வருவதைக்காண முடிகிறது.

அந்த வகையில், அண்மைய நாள்களில் சுதந்திரக்கட்சியின் புதிய தொகுதி அமைப்பாளர்கள் ஒருபுறம் நியமிக்கப்பட்டு வருவதுடன், ஐ.தே.கட்சி சார்பான அமைச்சுப் பதவிகளில் மாற்றங்களைமேற்கொள்ளவுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது. ஐ.தே.கட்சி அமைச்சர்களை மாற்றியமைப்பதைப் பிற்போட்டுள்ளஅதேசமயம், சுதந்திரக் கட்சியோ கட்சி சார்பான தொகுதி அமைப்பாளர்களில் முன்னாள் அரசதலைவர் மகிந்தவுக்கு ஆதரவானவர்களை நீக்கிவிட்டு, இன்றைய அரசதலைவர் மைத்திரிபாலவுக்கு ஆதரவானவர்களையேதொகுதி அமைப்பாளர்களாக நியமித்து வருகிறது.

இந்த இரு முதன்மைக் கட்சிகளிலும் தற்போது ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மற்றும் எதிர்காலத்தில் இலங்கை அரசியலரங்கில் ஏற்படத்தக்கமாறுதல்கள்குறித்து அரசியற்துறைப் பேராசிரியர் சுமணசிறி லியனகே எத்தகையகருத்துக்களைக்கொண்டுள்ளார் என்பது குறித்துப் பார்ப்போமா?

ஐ.தே.க.மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்படுமென வெளிவரும் தகவல்களுக்கமைய மாற்றங்கள் ஏற்படுமானால், அதுஇலங்கைஅரசியலரங்கிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்களை ஏற்படுத்த இடமுண்டு. இந்த இரு கட்சிகளிடையே உள்ளகரீதியில் நிலவும் கருத்து வேறுபாடுகள் மொத்த

> இலங்கையின் அரசியல் அரங்கில், பரந்த சிக்கலொன்று உருவாகியுள்ளது. ஐ.தே.க., சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ மைத்திரிபால தரப்பு, மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணித் தரப்பு ஆகியவற்றில் வெளிப்படையாக மட்டுமன்றி உள்ளக ரீதியிலும் பலதரப்பட்ட சிக்கல்கள் நிலவியே வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையேஉள்ளகரீதியில்நிலவும்கருத்து வேறுபாடுகள்மொத்தஅரசியல்துறையில் பரந்த மாற்றங்களுக்குக் காரணமாகக் கூடுமென நான் நம்பவில்லை. ஆயினும் கட்சிகளது தலைவர்கள் தமதுஅரசியல்செயற்பாடுகளைச்சிறப்பாக முன்னெடுக்க வேண்டுமானால், கட்சிகளது உள்ளக ரீதியில் மாற்றங்களைமேற்கொள்ளவேண்டியதேவை அவர்களுக்கு ஏற்பட்டாகும் என்கிறார் பேராசிரியர்லியனகே.

அத்தகைய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் கட்சிகள் கடைக் கொள்ளும் கொள்கை நிலைப்பாடு மாற்றமடையும் எனக் கருத இயலாது. இதனை அடிப்படையாகக் கொண்டு இவ்விரு முதன்மைக் கட்சிகள் மேற்கொள்ளவுள்ளமாற்றங்கள் மற்றும் அவை காரணமாக கட்சிகளதுபயணமார்க்கத்தில்ஏற்படத்தக்க அழுத்தங்கள், பாதிப்புக்கள்குறித்துஅவதானிக்கக்கூடியதாகவிருக்கும்.

சுதந்திரக்கட்சி என்பது தலையற்ற வெறும் முண்டம் என முன்னரொருசந்தர்ப்பத்தில்கலாநிதிகுணதாச அமரசேகர விமர்சித்திருந்தார். பின்னர் பொரு சமயம் சுதந்திரக் கட்சி என்ற அந்த முண்டம் உயிரற்றதொன்று என்பதால், அதுபுதைக்கப்படவேண்டுமென அவர் விமர்சித்திருந்தார். அரசியலில் ஐ.தே.கட்சிக்கு ஒரு மாற்றீடான கட்சியாகவே சுதந்திரக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது. மைத்திரிபால சிறிசேன சுதந்திரக்கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றதையடுத்து, அந்தக் கட்சிஐ.தே.கட்சிக்குமாற்றிடானதொரு கட்சியாகசுதந்திரக்கட்சிஆதரவாளர்களால்கருதஇயலாதுபோயுள்ளது. சுதந்திரக் கட்சி, ஐ.தே.கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து அரசமைத்துள்ளமையே அதற்கான காரணம். சுதந்திரக் கட்சியின் மகிந்த தரப்பு ஆதரவாளர்களான தொகுதி அமைப்பாளர்கள் அவர்களது பதவிகளிலிருந்து நீக்கப்பட்டு, மைத்திரிபாலசிறிசேனவுக்குஆதரவானசுதந்திரக் கட்சியினர், குறித்த அந்தத் தொகுதிகளதுஅமைப்பாளர்களாகநியமிக்கப்பட்டுள்ள போதிலும், கிராமப்புற சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களில் மாற்றங்கள் ஏற்படக் கூடுமென நம்புவது சிரமமே.

இத்தகைய பின்னணியில் நடத்தப்படவுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும்மாகாணசபைகளுக்கானதேர்தல்களில்மைத்திரிபாலவின்தலைமையிலானஉத்தியோகபூர்வசுதந்திரக்கட்சி, ஐ.தே.கட்சி மற்றும் மகிந்த ராஜபக்சவின்தலைமையிலானகூட்டுஎதிரணி என்பவைதனித்தனியாகப்போட்டியிட நேருமானால், உத்தியோகபூர்வ சுதந்திரக் கட்சி மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட பெரும்பாலும் இடமுண்டு என்பது எனது கணிப்பு என்றும் கூறுகிறார் பேராசிரியர் லியானகே. ஏனெனில் அத்தகைய தேர்தல்களில் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் மீண்டும் தமதுதனித்துவத்தைநிலைநாட்டவே முயற்சிப்பர் என்பதனாலாகும். அத்தகைய நிலையில் கிராமப்புறங்களைச் சேர்ந்தசுதந்திரக்கட்சிஆதரவாளர்கள் மைத்திரிபாலசிறிசேனவின்தலைமையிலான உத்தியோக பூர்வ சுதந்திரக் கட்சித்தரப்பைப்புறக்கணிக்கவேசெய்வர்.

சுதந்திரக் கட்சியின் தனித்துவம் மகிந்தவிலோ அல்லது அவரது அதிகாரத்

> மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றதையடுத்து, அந்தக் கட்சி ஐ.தே.கட்சிக்கு மாற்றிடானதொரு கட்சியாக சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களால் கருதஇயலாது போயுள்ளது. சுதந்திரக் கட்சி ஐ.தே. கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து அரசமைத்துள்ளமையே அதற்கான காரணம். சுதந்திரக் கட்சியின் மகிந்த தரப்பு ஆதரவாளர்களான தொகுதி அமைப்பாளர்கள் அவர்களது பதவிகளிலிருந்து நீக்கப்பட்டு, மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவான சுதந்திரக் கட்சியினர் குறித்த அந்தத் தொகுதிகளது அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள போதிலும், கிராமப்புற சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களி மாற்றங்கள் ஏற்படக் கூடுமென நம்புவது சிரமமே.

தலோதான் தங்கியுள்ளது என்பது இதன் கருத்தல்ல. மகிந்த நீண்ட காலமாக சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்ததால், அவரைச் சூழ்ந்து சுதந்திரக் கட்சியின் பலத்தைக் கட்டமைக்க முயல்வது வழமையானதொன்றே. ஆனால்இங்குநிலைமைஅவ்வாறன ஒன்றல்ல. 60 ஆண்டுகள் காலமாக ஐ.தே.கட்சிக்கு ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்ட சுதந்திரக் கட்சியை மீண்டும்அத்தகையநிலைக்குஆக்கிவைப்பதுஎப்படி?என்பதேஇங்குள்ளசிக்கல். அதற்கு மகிந்தவைப் பயன்படுத்த முயல்வது கூட வழக்கமானதொரு உத்தியே. சுதந்திரக் கட்சியை மீண்டும் ஐ.தே. கட்சிக்கு சவாலாக, ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படவைப்பதற்கு சுதந்திரக்கட்சிக்கு பலமிக்கதலைமைத்துவமொன்றுஅவசியதேவையாகிறது. அந்த வகையில், சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களுக்கு மகிந்த மீது ஈர்ப்பு ஏற்படுவது நியாயமே.

மறுபுறத்தில் ஐ.தே.கட்சியின் உள்ளக ரீதியில் இடம்பெறவுள்ள பதவி மாற்றங்கள் குறித்து நோக்கினால், ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் ஐ.தே. கட்சியால் தேர்தலில் ஒருபோதும் அதிகாரத்தைக்கைப்பற்றஇயலாதென்றதொரு நம்பிக்கை கட்சியின் உள்ளக மட்டத்தில் நிலவி வந்துள்ளமை உண்மையே. ஆனால்2015ஆம்ஆண்டின் அரசதலைவர்தேர்தலுடன்அத்தகைய எண்ணம் மாற்றம் கண்டது.

தமது பதவி காப்பாற்றப்படும் விதத்தில் ஐ.தே.கட்சிக்குள் தாம் மேற்கொள்ள விரும்பும்பதவிமாற்றங்களைமேற்கொள்ளவேண்டியதேவைதலைமை அமைச்சர் ரணிலுக்கு ஏற்பட்டுள்ளது. கட்சியில்தமதுதலைமைத்துவத்துக்குச் சவால் விடுக்க முன்வராத பிரமுகர்களுக்கு கட்சியின் முக்கியபதவிகளைவழங்கவேண்டியநிலையும்ரணிலுக்கு ஏற்பட்டுள்ளது. அதனைத் தலைமை அமைச்சர் மிக அவதானத்துடன் மேற்கொள்ள வேண்டியுள்ளமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். முன்னரொரு சந்தர்ப்பத்தில், கரு ஜயசூரியாவுடன் முரண்பட்டுச் சிரமப்பட நேர்ந்த அனுபவத்தை ரணில் கவனத்தில் கொண்டே செயற்படுவார் என நம்பலாம்.

மொத்தத்தில் இன்று இலங்கையின் அரசியல் அரங்கில், பரந்த சிக்கலொன்று உருவாகியுள்ளது. ஐ.தே.க., சுதந்திரக் கட்சியின் உத்தியோக பூர்வ மைத்திரிபால தரப்பு, மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணித் தரப்பு ஆகியவற்றில் வெளிப்படையாக மட்டுமன்றி உள்ளக ரீதியிலும் பலதரப்பட்ட சிக்கல்கள் நிலவியே வருகின்றன.

அந்த வகையில் இன்று முன்னெப் போதையும்விட அரசியல்சிக்கல்கள் உச்சம் பெற்றுள்ளதாகவே கருத வேண்டியுள்ளது. இதில்காணப்படும் மற்றொரு முக்கிய அம்சம் என்னவென்றால், வெளிப்பார்வைக்கு இந்த அரசியல் சிக்கலுக்குத் தீர்வு காணத்தக்க தெளிவான பார்வை இந்த மூன்று அரசியல் தரப்புக்களில் எதுவொன்றிடம் தானும் இல்லாமையாகும். ஆயினும் இது நிரந்தரமான சிக்கலாக அமையும் என எண்ணஇயலாதுள்ளது. காலப்போக்கில் இத்தகைய தரப்புக்கள் மத்தியிலான சிக்கல்களுக்குத் தீர்வு சுலபமாக எட்டப்படக் கூடும். அரசியல் சிக்கல்களின் சுபாவமும் அதுவேதான்.

மேற்குறிப்பிட்ட மூன்று தரப்புக்களுடனும் தொடர்புபடாத தரப்பொன்றும் உள்ளதுடன், எதிர்காலத்தில்இடம்பெறும் தேர்தல்களில் குறித்த இந்த நான்காம் தரப்பே வெற்றியைத் தீர்மானிக்கும்தரப்பாக அமைவதற்கும் இடமுண்டு.

நாம் இங்கு குறிப்பிட்ட அரசியல் சிக்கல்கள்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்உள்ளகரீதியிலும்நிலவுகின்றன. அந்தவகையில் இது வடக்கு, தெற்கு என்ற பேதமெதுவும் இல்லாது, ஒட்டுமொத்த சமூகமட்டத்தில் நிலவும் பிரச்சினையாகக்கொள்ளத்தக்கதொன்றே.

வாசகர் திருமுகம்

குப்பைக் கழிவுகள் விடயத்தில் குப்பைத் தனமாக நடந்து கொள்ளாதீர்!

மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து வீழ்ந்ததால் ஏற்பட்ட இடரில் பலர் உயிரிழந்ததுடன் வீடுகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் மட்டுமல்லாது வேறுநாடுகளிலும் குப்பைக் கழிவுகளை அகற்றுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ்.குடாநாட்டிலுள்ள கிராமங்களில் குப்பைகளால சிரமங்கள் ஏற்படுவதில்லை. குப்பைக் கழிவுகளில் பயனுள்ளவை விவசாய நிலங்களில் பசளையாகப்பயன்படுத்தப்படுகின்றன. ஏனைய கழிவுகள் எரியூட்டப்பட்டு அழிக்கப்படுகின்றன. ஆனால் நகரப்பகுதிகளில் தான் குப்பைக் கழிவுகளைச் சேகரிப்பதிலும், கொட்டுவதிலும் சிரமங்கள் ஏற்பட்டு வருகின்றன. யாழ்.மாநகர சபைப் பகுதியிலும் குப்பைகளைச் சேகரிப்பதில் தாமதங்கள் ஏற்படுவதை அவதானிக்க முடிகின்றது. நாவலர் வீதியும், கஸ்தூரியார் வீதியும் சந்திக்கின்ற சந்திக்கு மேற்குப் புறமாகபொலித்தீன் பைகளுடன் போடப்பட்டிருக்கும் குப்பைகள் அகற்றப்படாத நிலையில் அலங்கோலமாகக் காட்சியளிக்கின்றன.

மாநகரசபையினரின் கண்களில் இது தெரியாமல் இருப்பதன் காரணம் தெரியவில்லை.

காக்கைதீவும் இன்னொரு மீதொட்டமுல்லவாக மாறுவதை அந்தப் பகுதி மக்கள் அறவே விரும்பமாட்டார்கள். ஆகவே யாழ். மாநகரசபையினர் குப்பைகளைக் கொட்டுவதில் இனிமேல் சிரமங்களை எதிர்கொள்ளப் போகின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்கள் குப்பைகளைச் சேகரிப்பதற்கு வசதியாக வெவ்வேறு குப்பை சேகரிக்கும் தொட்டிகளை அமைத்துள்ளன. ஆனால் பொது மக்கள் இவற்றைச் சரியாகப் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. அவர்கள் பொறுப்பற்ற வகையில் நடந்து கொள்வதால் உள்ளூராட்சி மன்றப் பணியாளர்கள் குப்பைகளைச் சேகரிப்பதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். மேலும் கண்ட கண்ட இடங்களிலும் கழிவுகளை மக்கள் வீசிவிடுவதால் அவற்றை அகற்றுவதில் சிரமம் ஏற்படுவது மட்டுமல்லாது சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன.

ஆகவே குப்பைவிடயத்தில் பொதுமக்கள் குப்பைத் தனமாக நடந்து கொள்ளாது பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும்.

பா.மகேந்திரன்
சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்ஷா-2வுக்கு ரஜினி சம்மதம்

'பாட்ஷா' இரண்டாம் பாகத்துக்கு ரஜினி சம்மதம் தெரிவித்துள்ளார் என்று சத்யா மூவிஸ் தங்கராஜ் தெரிவித்தார்.

ரஜினி நடித்த சூப்பர்ஹிட் படம் 'பாட்ஷா'. இந்தப் படத்தின் இரண்டாம் பாகத்தை உருவாக்குவதற்கு முதல் பாகத்தை இயக்கிய சுரேஷ் கிருஷ்ணா முயற்சித்தார். இது தொடர்பாக அவர் ரஜினியிடம் பேசினார். ஆனால் ரஜினி "பாட்ஷா என்றால் ஒரே பாட்ஷா தான். இனி அப்படி ஒரு படத்தில் என்னால் நடிக்க முடியாது, உங்களாலும் இயக்க முடியாது. அந்த முயற்சி வேண்டாம்" என்று கூறிவிட்டார். இந்த நிலையில் பாட்ஷா பட்த்தைத் தயாரித்த சத்யா மூவீஸ் நிறுவனம் பாட்ஷா படத்தை முப்பரிமாண வடிவத்துக்கு மாற்றி நவீன ஒலி அமைப்புடன் வெளியிட்டது. அதற்கும் நல்ல வரவேற்பு கிடைத்தது. இதையொட்டி தயாரிப்பாளர் ஆர்.எம்.வீரப்பன் சமீபத்தில் ரஜினியைச் சந்தித்துப் பேசினார்.

அப்போது பாட்ஷாவின் முப்பரிமாண வடிவத்துக்கு ரஜினி பாராட்டுத் தெரிவித்தார். அதோடு மூன்றுமுகம் படத்தையும் முப்பரிமாணத்துக்கு மாற்றி மீண்டும் வெளியிடுங்கள் என்று கூறினார். அதற்கு ஆர்.எம்.வீரப்பன் சம்மதம் கூறினார். இப்போது சத்யா மூவீஸ் ஏன் படம் எடுக்கவில்லை? என்று ரஜினி கேட்டதற்கு, "நாங்கள் இனி படம் எடுத்தால் பாட்ஷா இரண்டாம் பாகம்தான் எடுப்போம்" என்று கூறினார். அதற்கு சட்டென்று பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தார் ரஜினி... "சரி கதையைக் கேளுங்கள் நன்றாக அமைந்தால் சேர்ந்து பண்ணலாம்" என்று திடீரெனப் பதிலளித்தாராம்.



இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

மேடம்: திகைப்புத் தந்த பணியை, எளிதாக நிறைவேற்றுவீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். தொழிலில் ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர்.

இடபம்: கடந்தகால சிரமத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிபெற விடாமுயற்சி தேவை. லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

மிதுனம்: குடும்பப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். தொழிலில், உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், விண்ணப்பித்த கடனுதவியைப் பெறுவர்.

கடகம்: பேச்சில் வசீகரம் உண்டாகும். நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். இஷ்டதெய்வ வழிபாடு நிறைவேறும்.

சிங்கம்: மாறுபட்டகருத்துஉள்ளவர்களிடம் விலகியிருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேறத் தாமதம் ஆகலாம். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

கன்னி: பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். நல்லோரின் அறிமுகம்கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். பெண்களுக்கு, குடும்பத் தேவை தாராள செலவில் பூர்த்தியாகும்.

துலாம்: உற்சாக மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம்பன்மடங்குஉயரும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்துசேரும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

விருச்சிகம்: சமூகத்தில் உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள், சலுகை பெற்று மகிழ்வர்.

தனுசு: தொழில், வியாபாரத்தில் குளறுபடி உருவாகி மறையும். லாபம் சீராக இருக்கும். பெண்கள், சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வர். சகோதர வழியில் உதவி கிடைக்கும்.

மகரம்: திட்டமிட்டுச் செயற்பட்டு முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

கும்பம்: குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். உழைப்பின் மூலம் தொழிலில் ஆதாயம் காண்பீர்கள். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

மீனம்: உங்களின் நற்செயலைச் சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்று வது நல்லது. லாபம்சீராகஇருக்கும். பெண்கள், ஆடம்பர எண்ணத்துடன் செலவழிப்பர்.

சுடோக்கு
எண் விளையாட்டு

		7		5				6
9	2		6					7
6			9				3	1
		2	8		6			4
	9			1			6	
8					3	1		
4	3				9		1	
2					4		7	5
				2		6	4	

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது.. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக்கப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நேற்றைய சுடோக்கின் விடை

4	6	7	2	8	9	5	3	1
5	3	2	7	1	6	8	4	9
8	1	9	5	3	4	7	2	6
1	7	4	6	9	2	3	5	8
6	9	3	8	7	5	4	1	2
2	5	8	1	4	3	6	9	7
3	2	6	9	5	8	1	7	4
7	8	5	4	2	1	9	6	3
9	4	1	3	6	7	2	8	5

சித்திரை மாத பலன்

மிதுனம்

நிதானமாக எந்த முடிவையும் எடுக்கும் மிதுன ராசி அன்பர்களே, நீங்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக இருப்பவர்கள். இந்தக் காலகட்டத்தில் பணவரத்து மனமகிழ்ச்சியைத் தரும். நீண்ட நாள்களாக இருந்த பிரச்சினை குறையும். மறைமுக எதிர்ப்புக்கள் நீங்கும். எந்தவொரு காரியமும் சாதகமாக முடியும். விருப்பமானவர்களுடன் சந்திப்பு ஏற்படும். வாக்கு வன்மையால் நன்மை ஏற்படும். நோய்நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில், வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு, வீண் அலைச்சல் குறையும்.

எதிர்பார்த்த அதிகாரம் மற்றும் அந்தஸ்து கிடைக்கும். சாமர்த்தியமான பேச்சால் எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் அதிகரிக்கும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். பிள்ளைகள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். அதே நேரத்தில் அவர்களால் செலவும் ஏற்படும். பெண்களது முயற்சிகளில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். கையில் காசு புரளும். கலைத்துறையினருடன், உடன் பணிபுரிபவர்கள் வீண் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது. சாதுரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் தேடி வரலாம்.

மற்றவர்களைத் திருப்தியடையச் செய்யும் வகையில் உங்களது செயல்கள் இருக்கும். டெக்னிக்கல் துறையினருக்கு தொட்டதெல்லாம் துலங்கும். அரசியல் துறையினருக்கு முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். விடாமுயற்சியுடன் ஈடுபட்டு காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். விருப்பங்கள் கைகூடும். அடுத்தவரை அதிகாரம் செய்யும்போது கவனம் தேவை. வீண் பகை ஏற்படலாம். மற்றவர்களுக்காகப் பொறுப்புகளை ஏற்காமல் இருப்பது நல்லது. வீண் அலைச்சல் ஏற்படலாம். மாணவர்களுக்குக் கல்வி பற்றிய பயம் நீங்கும். எதிர்காலத் திட்டங்களில் ஈடுபடுவீர்கள். ஆசிரியர்களின் உதவி கிடைக்கும்.

பரிகாரம்:
ஸ்ரீநரசிம்மரைத் தீபம் ஏற்றி தரிசித்து வர, கடன் பிரச்சினை குறையும். வீண் அலைச்சல் மனோபயம் குறையும்.

கடகம்

உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கடக ராசி அன்பர்களே, நீங்கள் தலைமை தாங்குவதில் வல்லவர்கள். இந்தக் காலகட்டத்தில் கோபம், வேகம் இருக்கலாம். வாக்குவாதம் ஏற்படும். மற்றவர்களிடம் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். நண்பர்களிடம் பகை ஏற்படலாம். பிடிவாதத்தை விட்டு விடுவது, காரிய வெற்றிக்கு உதவும். வீண் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக நேரிடலாம். எதிலும் திருப்தி இல்லாத மனநிலை இருக்கும். பயணங்களால் சாதகங்கள் உண்டு. கடிதப் போக்குவரத்து நன்மை தரும். தொழில், வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிவரும். அதேசமயம் அந்த நெருக்கடிகளைச் சமாளிக்கும் தெம்பும் வரும். புதுவியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக முடியும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புக்கள் வரும்; நிதானம் தேவை. சக ஊழியர்களுடன் சாமர்த்தியமாகப் பழகி காரிய அனுகூலம் அடைவீர்கள்.

குடும்ப விவகாரங்களில் சாமர்த்தியமாக நடந்து கொண்டு எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள். கணவன், மனைவிக்கிடையே மனம்விட்டுப்பேசுவது கருத்து வேற்றுமை ஏற்படாமல் தடுக்கும். பிள்ளைகளிடம் கோபமாகப் பேசாமல் அன்பாகப் பேசுவது நல்லது. வாகன வசதி உண்டாகும். பெண்கள் அடுத்தவர்களிடம் வாக்கு

வாதத்தைத் தவிர்ப்பது நன்மை தரும். நீண்ட தூரத் தகவல்கள் நல்லவையாக இருக்கும். எதிலும் நிதானம் தேவை. கலைத்துறையினருக்கு முன்னேற்றம் சீரான பாதையில் இருக்கும். எடுத்த பணிகளில் சாதகமான போக்குக் காணப்படும்.

எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பொறுப்புக்கள் கூடும். திறமை வெளிப்படும். வெளிநாட்டுப் பயண வாய்ப்பு உண்டு. அரசியல் துறையில் பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேருவார்கள். மேலிடத்தில் நெருக்கம் அதிகரிக்கும். மேலிட விருப்பத்தை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஒப்பந்தங்கள் நல்ல முறையில் அமையும். மரியாதையும் அந்தஸ்தும் கூடும். மாணவர்கள் பதற்றம் கொள்ளாமல் நிதானமாக பாடங்களை படிப்பது நல்லது. சகமாணவர்களால் அனுகூலம் உண்டாகும்.

பரிகாரம்:
ஸ்ரீகாளியம்மனை வணங்க அடுத்தவர்களால் ஏற்படும் கெடுதல்கள் நீங்கும். மனதில் அமைதி பிறக்கும்.

நோய் எதிர்ப்பு சக்தி தரும் நெல்லிக்காய்

அன்றாடம் அல்லது அடிக்கடி நெல்லிக்காய் பயன்படுத்துபவர்களுக்கு காலப்போக்கில் மிக நல்ல ஆரோக்கியத்தையும், நோய் எதிர்ப்பு சக்தியையும் அது அளிக்கின்றது.

ஔவையார் காலத்தில் இருந்து இந்த நெல்லிக்காய்க்கு தனி மரியாதைதான். விஞ்ஞானம் மூலம் கண்டறிவதற்கு முன்பே பல உண்மைகளை நம் முன்னோர் என்றோ நெல்லிக்காயைப் பற்றி அறிந்து வைத்துள்ளனர். இன்று மருத்துவ விஞ்ஞானம் நெல்லிக்காயில் அதிக விற்றமின் 'சி' சத்து இருப்பதை அறிந்து நெல்லிக்காயைப் பொக்கிசமாகக் கருதுகின்றது.

* திசுக்களின் அழிவைத் தடுப்பதால் இளமை தோற்றம் பெறுகின்றனர்.
* புற்றுநோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கின்றது.
* நெல்லிக்காய் நெஞ்செரிச்சல், வயிறு வீக்கம் இவற்றைத் தவிர்க்கும்.
* கல்லீரலில் உள்ள நச்சுக்களை நீக்கி கல்லீரலை ஆரோக்கியமாக வைக்கும்.
* சிறுநீரக நச்சுக்களை நீக்கும்.
* தொண்டை கிருமி பாதிப்பைத் தவிர்க்கின்றது.
* எலும்பு ஆரோக்கியம் காக்கப்படுகின்றது.
* ஒவ்வாமை, ஆஸ்துமா, தொடர் இருமல், சுவாசக் குழாய் வீக்கம் இவற்றிலிருந்து காக்கின்றது.
* நரம்புகளுக்கு வலுவூட்டி பக்க வாத நோயிலிருந்து காக்கின்றது.
* தூக்கமின்மை, மன உளைச்சல் நீக்குகின்றது.
* ஞாபக சக்தி கூடுகின்றது.
* கெட்ட கொழுப்பை நீக்குகின்றது.
* இருதய நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கின்றது.
* இருதய சதைகள் வலுப்பெறுகின்றன.
* சீனியின் அளவு குருதியில் சீராய் இருக்க உதவுகின்றது

வரலாற்றில் இன்றைய தினம்

1800- அமெரிக்க அரச தலைவர் ஜோன் அடம்ஸ் 5000 அமெரிக்க டொலர்களில் காங்கிரஸ் பயன்பாட்டுக்கு அவசியமான புத்தகங்களை வாங்கும் சட்ட வரைவில் ஒப்பமிட்டதன் மூலம் காங்கிரஸ் நூலகம் நிறுவப்பட்டது.

1915 -இஸ்தான் புல்லில் 250 ஆர்மீனிய கற்றறிந்தோரும் சமூகத் தலைவர்களும் கைது செய்யப்பட்டதையடுத்து ஆர்மீனிய இனப்படுகொலை தொடங்கியது.

1922-கம்பியில்லாத் தந்தித் தொடர்பு இங்கிலாந்தின் லீபீல்ட்க்கும் எகிப்தின் கெய்ரோசுவுக்குமிடையே செயற்படத் தொடங்கியது.

1923-சிக்மன்ட்புரொய்ட்டின் இப்ஈகோ சுப்பர்ஈகோ உளப்பகுப்பாய்வு கொள்கைக் கட்டுரை வியன்னாவில் வெளியிடப்பட்டது.

1970- காம்பியா குடியரசானது டாவ்டா ஜவாரா முதல் அரச தலைவரானார்.

1980 -ஈரான் பணயக் கைதிகள் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவரும் ஒப்பரேஷக் ஈகிள் குளோ நடவடிக்கையின் போது 8 அமெரிக்க வீரர்கள் உயிரிழந்தனர்.

1990 -ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி டிஸ்கவரி மீள் விண் ஓடத்திலிருந்து செலுத்தப்பட்டது.

1993-லண்டன் பிஷப்கேற் பகுதியில் ஜரிஷ்புரட்சி இராணுவத்தின் குண்டுத் தாக்குதலால் பேரழிவு ஏற்பட்டது.

2013- பங்களாதேஷ் டாக்கா அருகே கட்டடம் ஒன்று சரிந்ததில் 1129 பேர் உயிரிழந்தனர்; 2500 பேர் படுகாயமடைந்தனர்.

1993 -லலித் கொலையை யடுத்து கொழும்பில் பதற்ற நிலை.

நாளை

சித்திரை-12
செவ்வாய்க்கிழமை -25.04.2017
திதி: சதுர்த்தசி மு.இ.08.23
நட்சத்திரம்: ரேவதி மு.இ.09.13
சுபநேரம்:10.30-12.00 வரை
ராகுகாலம்:03.00-04.30 வரை
போதாயன அமாவாசை

பெண்கள் அணிகலன் அணிந்து கொள்வதில் அலாதிப் பிரியமுடன் இருப்பார்கள். இவர்களுக்கென்றே வெள்ளியிலான மோதிரங்கள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை 350 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

திருநாவுக்கரசு செல்வநாதன்
(C.T. செல்வநாதன்)
(முன்னாள் பசறை தேயிலைத் தொழிற்சாலை களஞ்சியப் பொறுப்பாளர்)

பண்ணாகம், சுழிபுரத்தைப் பிறப்பிடமாக கொண்ட திருநாவுக்கரசு செல்வநாதன் நேற்று (23.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் திருமதி செ. அல்லிராணி (ஓய்வு பெற்ற கணித ஆசிரியர், வேம்படி மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் செ. பிரவீன் (உயர்தொழில்நுட்ப கல்லூரி மாணவன், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற செல்லப்பா திருநாவுக்கரசு (ஓய்வு பெற்ற பொறியிலாளர்) - மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் திரு. திருமதி ஆசைமுத்து - கனகமணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான தி. சிவநாதன், தி. சேதுநாதன், தி.திருமகள் மற்றும் கு. தவயோகவள்ளி, தி. வாசுகி, தி. ஜெகநாதன், தி. தில்லைநாதன் (ஜேர்மனி), தி. தயாபரநாதன் (நோர்வே), பா. காயத்திரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆ. மாரிமுத்து (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்), ஆ.கனகாம்பிகை, ஆ. சுதாகரன் (ஜேர்மனி), அ.பிரபாகரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.
021 300 6949

தகவல்:
குடும்பத்தினர்.

தோற்றம்		மறைவு
10		23
.		.
03		04
.		.
1924		2017

திருமதி செல்லம்மா கந்தையா

சிவன் வீதி, ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா கந்தையா நேற்று (23.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் இளையபுத்திரியும், காலஞ்சென்றவர்களான புத்தூர் அருணாச்சலம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்புமருமகளும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசதுரை (இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்), மீனலோசனி, இராதாகிருஷ்ணன் (ஓய்வுபெற்ற பாதுகாப்பு முகாமையாளர் - இ.போ.ச. மட்டக்களப்பு), குணபூசணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலைவாணி, குமாரலிங்கம் (ஓய்வுபெற்ற முகாமையாளர் - இலங்கை வங்கி), புஷ்பபதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்றசண்முகநாதன் (ஓய்வுபெற்ற மின்சாரசபை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புமாமியாரும், சிவகணேசன் (சுவிஸ் - முன்னாள் விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி), சிவப்பிரியா (கனடா), சிவசங்கர், சிவகாமி (உதவிப் பிரதேசசெயலாளர், கரைச்சிபிரதேசசெயலகம்), நித்தியகலா (அரசாங்க மொழிபெயர்ப்பாளர், யாழ்ப்பாணம் - பிரதேச செயலகம்), Dr. குமரன் (Senior Surgical Registrar - தேசிய வைத்தியசாலை, கொழும்பு), சஹீவன் (மதுவரி உத்தியோகத்தர் - கிளிநொச்சி), கிந்துஷன், கிறிஷ்திகா (உயர்தொழில்நுட்பக் கல்லூரி மாணவி), செல்வரூபா, சிவதீபா, கௌதமி (சுவிஸ்), கோகுலன் (பாதுகாப்பு உத்தியோகத்தர் - இலங்கை வங்கி), கிருஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.04.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால்
(aja/cs/ 3468)

தகவல்:
குடும்பத்தினர்.

021 205 8101

அந்தாட்டிக்கா.!

தென்கோடியின் பனி உலகையும் அற்புதமான ஆய்வகம்

கொஞ்சம் சாய்ந்து வெளி நீட்டிக் கொண்டிருப்பது போன்ற உலகின் தென்கோடியை நீங்கள் பார்த்த துண்டா. அதுதான் அந்தாட்டிக்கா என்ற பனிக்கண்டம். இது தென்பகுதி உலகின் அந்தாட்டிக்க வட்டத்தையே தன் வசமாக வைத்துள்ளது. இதனைச் சுற்றியதாய் தென் பெருங்கடல் உள்ளது. 1.4 கோடி சதுரக் கிலோ மீற்றர் பரப்புக் கொண்டதான அந்தாட்டிக்காப் பகுதி உலகின் ஐந்தாவது பெரிய கண்டமாக விளங்குகிறது. இது ஆஸ்திரேலியாவை விடவும் இரண்டு மடங்கு பெரியது. அந்தாட்டிக்காவின் 98 வீதமான பகுதி பனியால் மூடப்பட்டுள்ளது. தரையின் மேலாக அண்ணளவாக 1.6 மீற்றர் உயரத்துக்கு பனிப்பாளம் உள்ளது.

அந்தாட்டிக்காவின் குணமும் நிறமும்

அந்தாட்டிக்கா பொதுவாக உலகிலேயே மிகவும் குளிர்ந்த, உலர்ந்த, காற்று அதிகம் உள்ள கண்டம். அது மட்டுமல்லாது அனைத்துக் கண்டங்களை விடவும் மிக உயரத்தில் இருப்பதும் அந்தாட்டிக்கா மட்டுமே. இங்கு அதிகமான தாவரங்கள் எவையும் இல்லாதிருப்பதால் பனிப் பாலைவனம் என்றே இவை அழைக்கப்படுகிறது. வருடத்தில் அண்ணளவாக 200 மில்லி மீற்றர் அளவுடையதான மழைப் பொழிவு இருக்கும். ஆனால் இங்குள்ளதான குளிர் உடலை வெப்பமின்றிய உறைநிலையுள் தாக்கமுறச் செய்து விடும். இதன் வெப்பநிலை என்பது- 89 பாகை செல்சியஸ் ஆகக் காணப்படும். இங்கு மனித வாழ்க்கை என்பதே கிடையாது.

ஆனாலும் கூட அந்தாட்டிக்கா பற்றி ஆராயவென தொடர்ந்தும் அண்ணளவாக 1000 தொடக்கம் 5000 வரையிலான மக்கள் தொகையினர் அங்கு சென்று வருகின்றனர். இங்கு குளிரைத் தாக்குப் பிடிக்கும் உயிரினங்கள் மட்டுமே வாழ்கின்றன. ஆல்காக்கள், பக்டீரியா, பூஞ்சைகள், விலங்குகளின் உண்ணிகள், தட்டைப் புழுக்கள், சீல் மற்றும் இராணுவ வீரர்கள் போலவே அணிவகுப்பு நடத்தும் பென்குவின்கள் என இந்தக் குளிர்ப் பரப்பில் பனிப்பாளத்தை ரசித்த வண்ணம் மகிழ்ந்து வாழ்ந்து கொண்டிருகின்றன இந்த உயிரினங்கள். இங்கு பனிக் கரடிகளோ, எஸ்கிமோக்களோ இல்லை என்கின்றனர் ஆய்வாளர்கள்.

சூரியக் கதிரை விரட்டும் பனிப்பாறை

அந்தாட்டிக்கா கண்டம் பற்றியதான தகவல்களை கிரேக்கர்களும் சொல்லி இருக்கின்றனர். ஆனால் 1820 ஆம் ஆண்டு வரை அந்தப் பனிக்கண்டத்தை யாரும் பார்த்ததில்லை. பார்த்திருக்கவில்லை. முதன் முதல் 1821 ஆம் ஆண்டு தான் அந்தாட்டிக்காவுக்கான பய ணத்தை இவர் கள் மேற் கொண்டுள்ள னர். அந்தாட்டிக் காவின் பனிப் பாறைகள் 5 கிலோ மீற்றர் உயரம் வரை இருக்கும். உலகின் 70 வீதமான நல்ல நீரை இதிலிருந்து பெற்று விட முடியும். இவை கரைந்தால் கடல் மட்டத்திலிருந்து 50 தொடக்கம் 60 மீற்றர் உயரம் வரை மேலெழும். உண்மையில் அந்தாட்டிக்காவின் பனிப்பாறைகள் மிகப் பெரிய பனியாறுகள் தான். இவை மிக மிக மெதுவாகவே கடலை நோக்கிச் செல்கின்றன. இந்தக் கண்டம் கடல் மட்டத்திலிருந்து அண்ணளவாக 2 ஆயிரத்து 300 மீற்றர் உயரமாக உள்ளது. மேலும் அந்தாட்டிக்கா மிகவும் குளிராக இருப்பதற்கான காரணம் சூரியனிலி ருந்து வருவ தான கதிர்களை பனிப்பாறைகள் அண்ணளவாக 80 வீதம் திருப்பி அனுப்பி விடுவதே. மீதமுள்ளதான 20 வீதக் சூரிய வெப்பம் என்பதோ வளிமண்டலம் மற்றும் மேகங்களால் உட்கிரகித்துக்கொள்ளப்படுகின்றன.

(23ஆம் பக்கம் பார்க்க)

கண்ணீர் அஞ்சலி

வண்ணை விசுவேச விநாயகர் ஆலயத்தில் நீண்டகாலமாக பரிபாலன சபையின் உறுப்பினராகவும் உபதலைவராகவும் தொண்டாற்றி 22.04.2017 அன்று அமரத்துவம் எய்திய

சி.மா.பொன்னம்பலம்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விசுவேச விநாயகனை பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை
வண்- வடமேற்கு
விசுவேச விநாயகர் ஆலயம்
வண்ணார்பண்ணை.
C 29454

12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



இவ்வுலகில் 15.03.1952 — இறையுலகில் 07.05.2005

அமரர்
சரவணமுத்து விநாயகமூர்த்தி
(மீசாலை விநாயகமூர்த்தி மருக்குறி வாணிய உரிமையாளர்)

பாசத்தை ஊட்டி விட்டு பாரை விட்டு
சென்றதேன்?
நனைந்த விழிகளின் ஈரம் காயும்
முன்னே
பன்னிரண்டாண்டு ஓடி வந்து
விட்டதே ! அப்பா.

மீசாலை மேற்கு,
மீசாலை.

உங்கள் நினைவுகளுடன்.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மரண அறிவித்தல்கள்

கந்தர் மீனாட்சி

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் மீனாட்சி நேற்று (23.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் - நாகம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற பத்மினி சின்னத்தம்பியின் அன்புச் சகோதரியும், சிவசுப்பிரமணியத்தின் அன்புத் தாயும், தவமலரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற தங்கவேல் மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மட்டுவிலில் அவரது இல்லத்தில் இன்று (24.04.2017) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு மட்டுவில் சின்னத்தூவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(ஓ.கே.ஏ) 3467) (13.17)

தகவல்:
க.வாமதேவன், (மருமகன்)
(ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர்)

இராசதுரை தேவராசா



நீர்வேலி வடக்கினை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை தேவராசா 23.04.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தசாமி அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் தனலட்சுமியின் அன்புக்கணவரும் பிரகாஷ்சின் அன்புத் தந்தையும் சங்கீதாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
AJA 3472

077 829 4927, 021 790 2623

வேலைவாய்ப்பு (3465)
30 வயதிற்கு மேற்பட்ட பெண் ஊழியர்கள் எமது அலுவலகத்திற்கு தேவை. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்பு- 076 941 6424, 076 642 7915

பணிப்பெண் தேவை (3466)
வீட்டில் தங்கிநின்று வீட்டுவேலை செய்யவும் வயதான பெண்ணை பராமரிக்கவும் பணிப்பெண் தேவை. **தொடர்பு-077 627 7332**

வேப்பம் பூ தேவை
சுத்தமான பூ சிறந்த விலைக்கு கொள்வனவு செய்யப்படும். (3469)
தொடர்பு- 077 967 5599, 077 545 4460

கூலியாள்கள் தேவை
மேசன், கூலி ஆள்கள் தேவை.
தொடர்புகளுக்கு, 076 6601600
(யாழ்ப்பாணம்)
AJA CS 003470

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாவரங்களின் இனப்பெருக்கம்!

அறிவியலோடு மலர்ந்த காரணம் கூறல்

செ.தமிழ்நம்பி

மலர்கள் மலர்வதும் அதன் பின் பிஞ்சாகி, காயாகி, கனியாகி, விதையாகி, மீண்டும் விதை முளைத்தல் என்ற செயல்நிலைகள் உருவகம் பெறுவதும் நாம் அறிந்துகொண்டதான விடயங்களே. ஆனாலும் ஆண் செடி அல்லது மரத்தின் மகரந்தமும் (ஆண் பூவிலுள்ள மகரந்தப் பொடி), பெண் செடி அல்லது மரத்தின் சூலகமும் (பெண் பூவின் நடுவிலுள்ளதான குச்சி) வெவ்வேறு இடங்களிலேயே இருக்கின்றன. காற்று, பூச்சிகள், தேனீ மற்றும் பிற விலங்குகள் மூலமாக இவை தம் இனத்தை பெருக்குவதற்கான மகரந்தச் சேர்க்கையை செய்து கொள்கின்றன. காய் கனியை உருவாக்கிக்கொள்கின்றன. சில சந்தர்ப்பங்களில் ஒரே பூவில்கூட மகரந்தமும், சூலகமும் இருக்கிறன. இதன் பின்னணியிலுள்ளதான அறிவியலையும் ஆய்வாளர்கள் தொடர் ஆராய்ச்சிகள் மூலமாகக் கண்டறிந்துள்ளனர்.

கடந்த பல ஆண்டுகளாக போர்ச்சுகலின் நிபுணர் குழு ஒன்று மகரந்தத் தாள்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்துவது யார் என்ற தேடலில் ஈடு பட்டிருந்தது. மகரந்தத் தண்டு வளர்வதை தீர்மானம் செய்வது நீரில் உள்ள புரோட்டான் அயனிகளா அல்லது கல்சிய அயனிகளா என்ற கேள்விகளுள் மூழ்கியிருந்தனர். செயலுவகையுள் தவித்துப் போயிருந்தனர். அதன் செயற்பாட்டு மூலக்கூறுகள் கால்வாய் என்றும் அதன் ஆட்டம், செயற்பாடு போன்றவை எது என அறுதியிட்டுச் சொல்ல முடி யாததிலும் குழப்பமான சூழ்நிலைகள் இருந்தன. ஆனாலும் போர்ச்சுகலின் லிஸ்பான் பல்கலையின் சர்வதேச ஆராய்ச்சிக் குழு இதனைப் பற்றி ஜோஸ் பெயஜோ (Jose Feijo) என்பவரின் தலைமையில் ஆராய்ந்தது. முடிவில் மகரந்தத் தாள்களின் வளர்ச்சிக்கு கல்சியம் தான் காரணம் என அறிந்தனர். இவை 'குளூட்டமேட் வாங்கிகள்' என்ற வேதிப் பொருள் வாயிலாக தூண்டப்படுவதுடன் அரிதான அமினோ அமிலமாகச் சொல்லப்படும் 'னு சீரின்' என்பதன் மூலமாக உள்ளே நுழைகின்றன என்பதும் தெரிய வந்தள்ளது.

'குளூட்டமேட் வாங்கிகள்' மற்றும் அமினோ அமிலம் 'னு சீரின்' என்ற இரண்டு வேதிப் பொருள்களும்தான் விலங்குகளின் மைய நரம்பு மண்டலத்தில் பல்வேறு அளவில் இரு செல்களுக்கான தொடர்புகளை உருவாக்க மூலக்கூற்று அளவில் செயற்படுகின்றன. அது மட்டுமல்லாது இவையே மூளையின் கற்றல் திறன், நினைவகம், பல வகையான நரம்பியல் சம்பந்தமான நோய்களான Multiple sclerosis,Alzheimer, Huntington's disease என்பவற்றுடனும் தொடர்பு உள்ளவையாகக் கூறப்படுகிறது. அதே 'குளூட்டமேட் வாங்கிகளும்', 'னு சீரினு' உம் தான் தாவரங்களின் இனப்பெருக்கத்துக்கும் உதவுகின்றன என்ற ஆச்சரியமான தகவலை போர்ச்சுகலின் ஆய்வகக் குழு கண்டுபிடித்துள்ளது. இதனால் கடந்த 20 ஆண்டு காலமாக தாவரவியலில் தேடிக் கொண்டிருந்த இரண்டு புதிர்களுக்கான விடை காணலும் அறிந்துகொள்ளப் பட்டுள்ளது.

செல்லின் வெளிச் சவ்வில் கல்சியம் கால்வாய்களின் மூலக் கூற்றுப் பணி என்ன என்பதும், தாவரங்களில் குளூட்டமேட் வாங்கி மரபணுக்களின் வேலை என்ன என்பதும்தான் அவை. இதன் மூலமாக மாதிரித் தாவரமான Arabidopsis இல் முதல் மரபணு பட்டியலும் அமைக்கப்பட்டுள்ளது.

நகராத தாவரத்தின் இனப்பெருக்கம் கொஞ்சம் சிக்கலானது. இதன் மகரந்தத் துகள்கள்தான் ஆண் விந்த
ணுக்களுக்கு சமமானவை. இவற்றை பெண் உறுப்பான சூலக முடிக்குக் கொண்டு சென்றால்தான் மகரந்த சேர்க்கை நடந்து இனப்பெருக்கம் என்பது இடம்பெற முடியும். இப்போதைய கண்டுபிடிப்பின் மூலம் குளூட்டமேட் வாங்கிகள் சரியாக செயற்படாவிட்டால் மகரந்தத் துகள்களின் பகுதி மலட்டுத் தன்மைக்கு காரணமாகிவிடும் என்பதும் அறியப்பட்டுள்ளது. மேலும் 'னு சீரின்' தான் குளூட்டமேட் வாங்கிகளை தூண்டிக் கல்சியம் அயனிக் கால்வாயை மகரந்தத் தாள்களின் மேல் ஓட வைக்கிறது. 'னு சீரின்' சரியாகச் செயற்படவில்லையெனில் மகரந்தத் தாள் உருவாக்கத்தில் குறைபாடுகள் உண்டாகும்.

இந்தக் கண்டுபிடிப்புகளின் மூலமாக எமக்கு ஒரு உண்மை தெரியவந்துள்ளது. தாவர மற்றும் விலங்குகளின் வளர்ச்சியில் மரபணுக்களின் செயற்பாடு என்பது அண்ணளவாக ஒரே மாதிரியாகத்தான் பணி புரிகின்றன என்பதே அந்த உண்மை. அதனைவிடவும் இன்றியமையாததான பரிணாமத்தின் வெளிப்பாடான அறிவியல் சாவியும் கண்டுகொள்ளல்களை அருமருந்தாக்கித் தந்துள்ளது எனலாம்.

அந்தாட்டிக்கா.!

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகின் மிக நுணுக்கமான ஆய்வகம்

அந்தாட்டிக்காவில் ஏராளமான கனிமங்கள் உள்ளன. அங்கே எண்ணெய் வளமும் ஆழ்ந்து அகன்று கிடக்கிறது. உலகின் அற்புதமான ஆய்வகம் என்பது அந்தாட்டிக்காதான். உலகின் பல பகுதிகளிலிருந்தும் விஞ்ஞானிகள் தொடர்ந்தும் இங்கு வந்த வண்ணம் இருக்கின்றனர். இங்கு அறியப்படாமல் இருக்கும் வளங்கள், உயிரிகள் போன்றவற்றை ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்.

இதன் மாசுபடாத சூழலைக் கருத்தில் கொண்டு ஆய்வாளர்கள் இன்னமும் வெப்ப நிலை மாற்றத்துக்கும் பிரபஞ்ச உருவாக்கத்துக்குமான காரணங்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.சிந்தனை யோடு அறிவியலை ஆழமாகத் திட்டினால் இந்தத் தேடல்களுக்கான விடையும் ஒரு சமயம் கிடைத்துவிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 127
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 23.04.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 83,755,424/-
X 05 23 68 76
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 23.04.2017
வெற்றிவாரம் 2123
வர்ணம் ஊதா
13 20 23 57
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 3, 503, 612/=
2017.04.25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

Galaxy Star
வெற்றி வாரம் 154
திகதி 23.04.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
05 07 13 38 58
அடுத்த புதன்கிழமை
கப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,267,692/-
2017.04.26 ஆம் திகதி புதன்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

மரண அறிவித்தல்கள்

திருமதி அன்னாள் யோகமலர் செல்லத்துரை

யாழ். பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னாள் யோகமலர் செல்லத்துரை (16.04.2017) பிரான்ஸில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பீற்றர் செல்லத்துரையின் அன்புமனைவியும் குணநாயகம், குணசீலி, பேர்னாட் குணசிங்கம், றொபெட் குணசீலன், சத்தியா, குலேந்திரன், குமுதினி, குமைற்றா ஆகியோரின் அன்புத்தாயும் தேவதாஸ் அலிஸ் காலஞ் சென்றவர்களான பரிமளம், பேரின்பம், மில்றோய் ஆகியோரின் அன்புச்சகோதரியும் பூவதி, ஞானசேகரம், இமெல்டா, ஜோலி, போல், இந்திரா, ரவி ஆகியோரின் அன்புமாமியும் சுபாஷினி, ஜெபானந்தன், கிறிஷாந்தினி, நிஷாந்தினி, தக்ஷாயினி, ஜீவித், ஜினத், நதின், அக்ஸ்சல், டெல்பின், எப்ரோன், ஆரோன், ஜெமி ஆகியோரின் அன்புப்போத்தியும் ஆசியா, அபி, ஆன், ஆபேல், ஏஞ்சல், லிதியா, ஜேரேமியா, இம்மானுவேல், ஜெய்சியல், ஜெயசன் ஆகியோரின் அன்புப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (24.04.2017) திங்கட் கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ரவி (பிரான்ஸ் +33 669259419)
குலேந்திரன் (பிரான்ஸ் +33 651880592)
இமெல்டா (பிரான்ஸ் +33 624447882)
போல் (077 42 81 273)

தகவல்: குடும்பத்தினர்

திருமதி கனகரத்தினம் கனகரட்னம்

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம் யாழ்ப்பாணம். தற்போது வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் கனகரட்னம் நேற்று (23.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான் சுந்தரம்-அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும் மயில்வாகனம் - கண்மணியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இலட்சுமியம்மா மற்றும் புவனேஸ்வரன். தங்கமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் புவனேஸ்வரிஅம்மாளின் அன்பு மைத்துனியும் மகேன், மைதிலி ஆகியோரின் பாசமிகு தாயாரும் அனித்தா. ராகுலன் ஆகியோரின் அன்பு மாமியும் அபிராமின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2017) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்வெட்டித்துறை, ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
மகேன், மைதிலி

வடக்கு...

பாரா முகமாக இருப்பதால் அழுத்தம் கொடுக்கும் வகையில் வடக்குக் கிழக்கு முழுவதும் கடையடைப்புப் போராட்டம் நடத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் போர் இடம்பெற்ற காலத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள் மற்றும் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுக் காணாமற்போனவர்களின் தெளிவான வெளிப்படுத்தலையும் அரசியல் கைதிகளின் விடுதலையையும் வலியுறுத்தி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் இரவு பகலாக தொடர் போராட்டத்தில் உறவினர்கள் ஈடுபட்டுள்ளனர். கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டத்துக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையில் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் வரும் வியாழக்கிழமை கடையடைப்புப் போராட்டத்துக்குக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அழைப்பு விடுத்திருந்தனர்.

"வியாழக்கிழமை நடைபெறும் கடையடைப்புப் போராட்டத்துக்கு அரசு, தனியார் போக்குவரத்துத் துறையினர், பாடசாலைகள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் வர்த்தக துறையினர் தமது முழு ஆதரவை எமக்குத் தரவேண்டும். அத்தோடு காணாமற்போனவர்களின் உறவினர்கள் போராட்டம் நடத்தும் அனைத்து மாவட்டங்களிலும் அன்றைய தினம் முழு அடைப்புப் போராட்டத்தை நடத்த அனைவரும் முன்வர வேண்டும்" என்று கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கங்களின் இணைப்பாளர் தெரிவித்தார். (வ-6)

குழப்பங்களின்...

துறைப்பற்று பிரதேச செயலாளரால் உள்ளூர் மீனவர்களுக்கு வாடி அமைப்பதற்காக வழங்கப்பட்ட நிலம் தென்னிலங்கை மீனவர்களுக்கான கரை வலைப்பாட்டுப் பகுதிக்குள் உள் அடங்குகின்றது. எனவே உள்ளூர் மீனவர்களின் வாடிகளைத் தடை செய்ய வேண்டும் என்று கோரி தென்னிலங்கை மீனவர்கள் மூவரின் சார்பில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் கடந்த ஆண்டு வழக்குத் தாக்கல் செய்தது.

வழக்கை விசாரணைக்கு எடுத்த நீதிமன்று, உள்ளூர் மீனவர்கள் அந்தப் பகுதியில் மீன் பிடியில் ஈடுபட இடைக்காலத் தடை விதித்தது. வழக்கு விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்றன. கடந்த மாதம் 14ஆம் திகதி இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது கரை துறைப்பற்றுப் பிரதேச செயலாளரால் மன்றில் அறிக்கை முன்வைக்கப்பட்டது.

உள்ளூர் மீனவர்களுக்கு வாடி அமைப்பதற்காக வழங்கப்பட்ட பிரதேசம் தென்னிலங்கை மீனவர்களின் கரைவலைப் பாட்டுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிக்குள் அடங்கவில்லை என்று அரச நில அளவையாளரின் அளவீட்டு ஆவணத்தின் சான்றுடன் பிரதேச செயலாளரால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இவற்றின் அடிப்படையில் இந்த வழக்கு கடந்த 4ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நீதிபதி சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

உள்ளூர் மீனவ அமைப்புக்களின் சார்பில் சட்டத்தரணிகளான அன்ரன் புனிதநாயகம் பரஞ்சோதி, ரனேஸ்வரன், ராதிகா உள்ளிட்டோர் முன்னிலையாகினர்.

"வாடி அமைந்துள்ள பகுதி தென்னிலங்கை மீனவர்களுக்கு வழங்கப்பட்ட பகுதியில் இருந்து 375 மீற்றருக்கும் அப்பாலேயே உள்ளது என்று பிரதேச செயலாளரால் அரச நில அளவையாளர் மூலம் மேற்கொண்ட அளவீட்டின் ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. நில அளவை ஆவணத்தில் மாகாண நில அளவைத் திணைக்களப் பிரதிநிதி உறுதி செய்துள்ளார்" என்று உள்ளூர் மீனவ அமைப்புக்களின் சட்டத்தரணிகள் மன்றில் எடுத்துரைத்தனர்.

"நில அளவை அதிகாரியின் அறிக்கையின் பிரகாரம் தென்னிலங்கை மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரதேசத்துக்கும் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட இடத்துக்கும் இடையே 375 மீற்றர் இடைவெளி உள்ளது. அதனால் கரைவலைப்பாட்டுக்கு தடை ஏற்படும் எனக் கூறமுடியாதே?" என்று நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் மன்று கேள்வியெழுப்பியது.

பிரதேச செயலாளரால் மன்றில் முன்வைக்கப்பட்ட நில அளவை வரைபடத்தை நீக்கிவிட்டு அந்தப் பகுதியை கரைவலைப்பாடு தொழில் புரிபவர்களிடமே வழங்கப்பட வேண்டும் என்று நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் சார்பில் மன்றில் கோரப்பட்டது.

இதனை ஆட்சேபித்த உள்ளூர் மீனவ அமைப்புக்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், பிரதேச செயலாளரின் வரைபடம் நில அளவைத் திணைக்களத்தால் உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. நீண்டகாலமாக உள்ளூர் மீனவர்களுக்கு தொழிற்தடை விதிக்கப்பட்டுள்ளதனால் அதனை நீக்கம் செய்து அவர்கள் அந்தப் பகுதியின் ஊடாக படகு இறக்கும் அனுமதியை வழங்க வேண்டும் என்று மன்றில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இவற்றை ஆராய்ந்த நீதிபதி, "பிரதேச செயலாளரால் முன்வைக்கப்பட்ட நில அளவை வரைபடத்தை நீக்கிவிட முடியாது. ஆனால் அந்தப் பகுதியில் கரைவலைத் தொழிலில் ஈடுபடுபவர்கள், கிராம அலுவலர் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் மீண்டும் அளவீடு செய்து மன்றுக்கு ஆவணத்தைச் சமர்ப்பிக்க பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கட்டளையிட்டார். இதன் பிரகாரம் சகல தரப்பினரின் பிரசன்னத்துடன் கடந்த 18ஆம் திகதி கொக்கிளாய்ப் பகுதியில், நில அளவீடு இடம் பெற்றது. எனினும் தென்னிலங்கை மீனவர்கள் ஒன்றுகூடி குழப்பம் விளைவித்தனர். கிராம அலுவலர்கள் உள்ளிட்ட அதிகாரிகளை அவர்கள் கடுமையாக எச்சரித்தனர்.

"பிரதேச செயலாளரால் இனங்காணப்பட்ட பிரதேசத்தில் இருந்து அளவீட்டை மேற்கொள்ள விடாது, தாம் தீர்மானித்த பகுதியில் இருந்தே அளவீட்டை மேற்கொள்ள வேண்டும் என்று தென்னிலங்கை மீனவர்கள் நிர்ப்பந்தித்தனர். இதனையடுத்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் அளவீட்டுப்பணியில் இருந்து வெளியேறியிருந்தனர். நீரியல் வளத் திணைக்கள உத்தியோகத்தர்கள் முன்னிலையில் அளவீடு இடம் பெற்றது.

இந்த நிலையிலேயே இந்த வழக்கு முல்லைத்தீவு நீதிமன்றில் இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (வ-101)

பதறுகிறார்...

கம்பஹா தெல்கொட பகுதியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது படையினர் உயிரைப் பணயம் வைத்து போரை முடிவுக்குக் கொண்டுவந்து இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் முழுமையான சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தனர். அந்தப் படையினரையும் அவர்களுக்கு அரசியல் தலைமைத்துவம் வழங்கியவர்களையும் தண்டிப்பதற்கு புலி ஆதரவாளர்கள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தனர். எனது ஆட்சி கவிழ்க்கப்பட்டதன் மூலம் அந்தச் சந்தர்ப்பம் இப்போது அவர்களுக்குக் கிட்டியுள்ளது.

புதிய அரசு புலி ஆதரவாளர்களின் விருப்பத்துக்கு ஏற்பவே செயற்படுகின்றது. சிறப்பு நீதிமன்றத்தை நிறுவிப் போரில் தலைமைத்துவம் வழங்கிய அத்தனை பேரையும் தண்டிப்பதற்கு திட்டமிட்டுள்ளது. ஒருவர் போர்க்குற்றம் புரிந்தார் என்று குற்றஞ்சாட்டி அந்த நீதிமன்றத்தில் ஏதாவது ஒரு நாடு வழக்குத் தொடர்ந்தால் குற்றஞ்சாட்டப்பட்டவரை அந்த நாட்டுக்கு அனுப்ப முடியும்.

அந்த நாடு ரோம் பிரகடனத்தில் கைச்சாத்திட்டிருந்தால் குற்றஞ்சாட்டப்பட்டவரை அந்த நாட்டால் பன்னாட்டு போர்க்குற்ற நீதிமன்றத்தின்முன் நிறுத்த முடியும். "ஆனால், நாம் யாரையும் அப்படி அனுப்பமாட்டோம். நாம் ரோம் பிரகடனத்தில் கைச்சாத்திடவில்லை" என்று தலைமை அமைச்சர் கூறுகின்றார்.

ரோம் பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ள நாடு ஒன்றுக்கு எம்மை அனுப்பி அந்த நாட்டின் ஊடாக எம்மை பன்னாட்டு போர்க்குற்ற நீதிமன்றத்தின் முன் நிறுத்தக்கூடிய சட்டவரைவை அரசு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளது.

போரை முடித்து இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் அமைதியைப் பெற்றுக்கொடுத்த தன் விளைவு இன்று எம் அனைவரையும் போர்க்குற்ற நீதிமன்றம் முன் நிறுத்த அரசு முயற்சிக்கின்றது - என்றார். (வ-5,3)

மேலும்...

மாகாண சபையின் செலவு அறிக்கை போது நிறைவேற்றப்பட்ட 71ஆவது தீர்மானத்தில் பலாலி வானூர்தித் தளம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் என்பன சீரமைக்க வேண்டும் எனக் கோரப்பட்டது.

பலாலி வானூர்தித் தளத்தை காணிகள் சுவீகரிக்கப்பட்டாது ஒரு பிராந்திய சிவில் வானூர்தித் தளமாக விரிவாக்கம் செய்ய துரித நடவடிக்கை எடுக்கவேண்டும். காங்கேசன்துறை துறைமுகத்தை துரிதமாக சீரமைக்க வேண்டும் என இலங்கை அரசையும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதுவர் மற்றும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் ஊடாக இந்திய அரசையும் இந்தச் சபை கோருகின்றது" என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் பிரேரணையில் கேட்டுள்ளார்.

பின்னணி

2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையின் 6ஆவது அமர்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் "பலாலி வானூர்தி நிலையத்தை விரிவாக்கும்போது காணிகள் எவையும் சுவீகரிக்கப்படக் கூடாது. பலாலி வானூர்தித் தளத்தில் பாவனையில் உள்ள ஓடு தளத்தின் அளவு போதுமானதாகவே காணப்படுகின்றது. ஆகவே முன்னைய காலங்களில் பலாலியிலிருந்து திருச்சி நோக்கி வழங்கப்பட்டு வந்த வானூர்தி சேவையை மீள ஆரம்பிக்க முடியும். அத்துடன் காங்கேசன்துறை துறைமுகத்தைச் சீரமைத்து காங்கேசன்துறைக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையே கப்பல் சேவையை நடத்த வேண்டும்" என்று வலியுறுத்தப்பட்டிருந்தது. (வ-8)

வடக்கிலிருந்து...

கால்நடையான் மாடுகள் அண்மைக்காலமாக வெளிமாவட்டங்களுக்கு கடத்திச் செல்லும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன என்று அறியப்படுகின்றது.

எமது மாகாணத்தின் தேவைகளுக்கு ஏற்ப அதனை பயன்படுத்துவதை விடுத்து, வடக்கு மாகாணம் தவிர்ந்த வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்படுவதாகவும் அறிய முடிகின்றது. மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் ஆகியோரின் அனுமதியுடன் வெளிமாவட்டங்களுக்கு கால்நடைகள் கொண்டுசெல்வதற்காக நடைமுறையில் உள்ள அனுமதியை உடனடியாக நீக்க வேண்டும்" என்று பிரேரணையில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கேட்டுள்ளார். (வ-8)

பாலியல்...

பாலியல் துர்நடத்தைகளில் ஈடுபட்டனர். சம்பவம் தொடர்பில் முறைப்பாடு கிடைத்ததும் இராணுவத் தலைமை உடனடியாக அந்த படைப்பிரிவை இலங்கைக்கு மீள அழைத்தது. இதன் பின்னர் பாலியல் துர்நடத்தைக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக இராணுவ நீதிமன்றம் அமைக்கப்பட்டது. விசாரணையின் போது மேஜர் தர அதிகாரியும் நான்கு படையினரும் ஹெய்ட்டியில் பெண்களுடன் அவர்களின் சம்மதத்துடன் பாலியல் உறவில் ஈடுபட்டமை தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து அந்தப் படைப்பிரிவின் தளபதி கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டார். தனது படையணியில் ஒழுக்க கட்டுப்பாட்டை பேணத் தவறியமைக்காகவே அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏனைய படையினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டது" என்று பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது. (வ-5)

அமெரிக்காவுக்கு...

போர்ப் பயிற்சியை நடத்தின. இது வடகொரியாவுக்கு நடுக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகையில் அந்த நாடு இவ்வாறான ஓர் தகவலை வெளியிட்டது.

அமெரிக்கா - வடகொரியா இடையே ஏற்பட்டுள்ள இந்த முறுகல் மூன்றாம் உலகப் போருக்கு வித்திட்டாலும் என்று ஐ.நா. எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது.

(ம)

வடக்குக் கூட்டுறவு...

பட்டிருந்தது. இந்த நிலையில் திடீரென, அந்த நியமனம் நீக்கப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநரின் கையொப்பத்துடன் கடிதம் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நியமனம் நீக்கப்படுவதற்கான காரணம் அதில் குறிப்பிடப்படவில்லை. இதேவேளை, கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக கே.சிவகரன் நியமிக்கப்பட்டுள் ளதாக அறிய முடிகின்றது. (வ-5,101)

ஜி.எஸ்.பி. பிளஸ்...

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை கிடைக்கக் கூடிய சாத்தியம் குறைவாகவே காணப்படுவதாக, இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்குவது தொடர்பில், தற்போது ஜரோப்பிய நாடாளுமன்றம் மற்றும் ஜரோப்பிய ஒன்றியப் பேரவை ஆகியன ஆராய்ந்து வருகின்றன.

தற்போதைய சூழலில் இலங்கைக்கு இந்த ஆண்டு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைக்காது என்று குறிப்பிட்டுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் இதன் காரணமாக இலங்கை மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியிருக்கும் என்று தெரிவித்துள்ளன.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை பெறுவதற்கு இலங்கை மே 14 திகதிக்குள் தனக்குரிய நிபந்தனைகளை நிறைவு செய்ய வேண்டியுள்ளது. இலங்கை அரசு அந்தக் காலப் பகுதிக்குள் நிபந்தனைகளை நிறைவேற்றக் கூடிய சாத்தியங்களை காண்பிக்காமையால். வரிச் சலுகை இந்த ஆண்டு கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் மிக அரிது என்று இராஜதந்திர வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (வ-5)

வாக்குறுதிகளை...

ஜேர்மனியத் தூதுவர் ஜோன் ரோட் கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தான் அறிவித்த மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலை முன்னோக்கி நகர்த்துவதற்கு அரசியல் விருப்புடன், இலங்கை அரசு இன்னும் கவனம் செலுத்த வேண்டும். காணாமற்போனோருக்கான பணியகம், தகவல் உரிமைச் சட்டம், அரசியல் நிர்ணய சபை என்பன வெற்றிகரமான நகர்வுகளாக இருக்கின்றன.

அதேவேளை, அதிகாரங்களைப் பகிரும் வகையில் அரசமைப்பு மறுசீரமைப்பு, போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காணிகளை மீளளித்தல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மாற்றியமைத்தல், ஊழலுக்கு எதிரான காத்திரமான நடவடிக்கை, தண்டனையில் இருந்து தப்பிக்கும் நிலை என்பன இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினைகளாக இருக்கின்றன" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-5)

இளம் பெண்...

எதிர்வரும் 5ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டார்" என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஊர்காவற்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 11 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

"மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடியைச் சேர்ந்த 35 வயதான சந்தேகநபர் பொலிஸ் சேவையிலிருந்து நீக்கப்பட்டவர். தற்போது, சம்பவம் நடைபெற்ற பகுதியில் உள்ள பாடசாலையின் கட்டட நிர்மாண வேலைக்காக அவர் இங்கு வந்து தங்கியுள்ளார். அந்தப் பகுதியில் ஆள்கள் நடமாட்டம் குறைவு. இரவு 11 மணிக்கு, வீட்டின் பின்பக்கம் வழியாக சந்தேநபர் உள்ளே நுழைந்துள்ளார். அங்கே இருந்த 18 வயதுப் பெண்ணின் வாயை அவர் பொத்தியுள்ளார். பெண்ணின் மூக்குப் பகுதியில் அவர் ஸ்பிறே விசிறியுள்ளார். அதற்குள் திமிறி எழுந்த பெண், கூச்சலிட்டுள்ளார். அவரது கூச்சலைக் கேட்டு சிறிது நேரத்தில் அங்கு மக்கள் திரண்டனர்' என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபரை, நீண்ட நேரம் மின்கம்பத்தில் கட்டி முறையாகக் கவனித்த மக்கள் அதன் பின்னர் ஊர்காவற்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். பொலிஸார் நீதிவானின் முன்னிலையில் சந்தேநபரை நேற்று முற்படுத்தினர். அவரை எதிர்வரும் 5ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (வ-5,26)

இலங்கைப்...

கூறப்படுகின் றது. எதற்காக இந்தப் பணம் கடற்கரையில் பொதி செய்யப்பட்ட நிலையில் போடப்பட்டிருந்தது என்பது தொடர்பில் தமிழகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (வ-5)

மே நடுப்பகுதிவரை...

மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாக வுள் ளன என்று வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட் டுள்ளது. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் தெரிந்திருந்தால்...

ப்....ஸ்டமார் என்ற வெடிச் சத்தத்தோடு கார் வீதியில் இருந்து விலகி தெருவோரத்திலிருந்த வீட்டு எல்லைச் சுவருடன் மோதாத குறையாக நின்றது. உள்ளே இருந்த அனிதா அதிர்ந்து போனாள். கார்ச் சாரதி அவளை அமைதிப் படுத்தினார். "ஒன்றும் இல்லையம்மா. கார் சில்லின் டயர் காத்துப் போய் விட்டது. பின்னால் டிக்கியில் இருக்கும் ரயரை மாற்றி விட்டால் சரி" என்றவர் மெக்கானிக் ஒருவருக்கு போன் செய்வதற்காக தனது கைத் தொலைபேசியைத் தேடினார். அது கிடைக்கவில்லை. "அம்மா நான் செல்போனை எடுத்து வர மறந்து விட்டேன். இதோ அருகில் போன் பேசும் இடம் சென்று மெக்கானிக்கிற்கு போன் செய்து விட்டு வருகிறேன். இங்கே நில்லடா" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார். "நீங்கள் கெதியா வாங்கோ. பாடசாலை மணி அடிச்சிடும். பின்பு கேற்றைப் பூட்டி விடுவார்கள்" என்றாள் அனிதா. சற்றுத் தயங்கியபடி. நேரமாயிற்று. சாரதி வரவேயில்லை. அவர் போன திசையையே பார்த்துக் கொண்டு நின்றவளுக்கு சற்று பயமேற்பட மிரள மிரள விழித்த படி விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

அப்பொழுது காவல்துறை வண்டி ஒன்று அவளைக் கடந்து சென்றது. பின்னர் அவ்வண்டி திரும்பி வந்து அவளருகே நின்றது. அதிலிருந்து இறங்கிய காவல் துறை அதிகாரி அனிதாவையும் காரையும் மாறி மாறிப் பார்த்து நிலைமையை விளங்கிக் கொண்டார்.

அனிதா அருகே சென்ற அவர், அவளை அழ வேண்டாமென அமைதிப்படுத்திய பின் அவளிடம் விவரங்கள் கேட்டறிய முற்பட்டார். அவளும் நடந்த வற்றை அவரிடம் கூறினாள். சாரதியை சற்று நேரம் எதிர்பார்த்த அதிகாரி "அனிதா உங்கள் வீடு எங்கே இருக்கிறது? வீட்டில் போன் உள்ளதா? வீட்டுக்கு நான் போன் செய்கிறேன். உன் பெற்றோர் வந்து உன்னை அழைத்துச் செல்வார் கள் தானே! என்றார். "இல்லை எனக்கு வீடு இருக்குமிடம் தெரியாது. வீட்டில் போன் இருக்கிறது. போன் இலக்க மும்தெரியாது. அப்படிபோன் செய்தாலும் வீட்டில் யாரும் இல்லை. யாரும் எடுத்துப் பேச மாட்டார்கள்.

"அம்மாவும் அப்பாவும் வேலைக்கு போய் விட்டார்கள்." என்றாள். "சரி அவர்களின் செல்போன் இலக்கமாவது தெரியுமா?" "தெரியாது" என்று மீண்டும் அழ ஆரம்பித் தாள். "சரி அழாதே, பாடசாலை போன் நம்பரா வது தெரியுமா?" என்றார். இல்லை என்று தலை யாட்டினாள். "சரி நாங்கள் இப்போது நீ படிக்கும் பாட சாலைக்குப் போவோமென" அவளை ஏற்றிக் கொண்டு புறப்பட்டார் அதிகாரி.

அதிகாரி பாடசாலையை அடைந்து அதிபரிடம் நடந்தவை பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில் அனிதாவின் தந்தையும் கார் சாரதியும் அதிபர் கொடுத்த தகவல் படி பாடசாலைக்கு வந்து சேர்ந்தனர். அதிகாரி முதலில் பாடசாலை அதிபரிடம் "உங்கள் பாடசாலையில் 3ஆம் வகுப்புப் படிக்கும். ஒரு மாணவிக்கு உங்கள் பாடசாலை போன் நம்பர் தெரியவில்லை. தனது வீட்டு நம்பரோ அல்லது பெற்றோரது தனிப்பட்ட நம்பரோ கூட தெரியவில்லை. வருகிற வழியில் ஒரு ஆபத்து என்றால், இந்தச் சின்னப் பெண் யாரிடம் எப்படித் தொடர்பு கொண்டு பேசுவாள்" பின்னர் அனிதாவின் தந்தையிடம் "உங்கள் வீட்டுக்கு போன் வசதி கிடைத்து எத்தனை வருடங்கள் ஆகின்றன?" என்றார். "17 வருடம்" என்றார் தந்தை. "17 வருடமாக போன் பயன்படுத்தும் நீங்கள், எட்டு வயதாகும் உங்கள் மகளுக்கு வீட்டு விலாசத்தையோ போன் நம்பரையோ அறியச் செய்யாதது உங்கள் பிழை. பிரத்தியேக போனும் கூட வைத்துள்ளீர்கள். ஏன் இப்படி பிள்ளைகள் விடயத்தில் அசட்டையாக உள்ளீர்கள். மேலும் ஒரு டிரைவரோடு தனியே பிள்ளையை நம்பி அனுப்பியுள்ளீர்கள். டிரைவரின் அசண்டையீ னத்தை இன்று பார்த்தீர்களா? ஆள் கடத்தல், கொலை, கொள்ளை, சிறுவர் துஸ்பிரயோ கம் என்று பல செய்திகளை நீங்கள் பத்திரிகைகளில் பார்ப்பதில்லையா? விபத்தோ அன்றேல் வீபரீதமோ வருமுன்பே காத்துக் கொள்ள வேண்டும். புரிகிறதா?" என்றார் அதி காரி. தந்தை அதிகாரியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அதிகாரி அதிபரி டம், கடமை வேளை கொடுத்த சிரமத்துக்கு மன்னிப்பு கோரி அனிதாவைத் தட்டிக் கொடுத்து புறப்பட்டுப் போனார்.

வெள்ளம் வரு முன்பே அணை கட்ட வேண்டும்.

அறுபது வயதா?....

உங்களுக்கு 60 வயது ஆகி விட்டதா? இந்த வயதுக்குள் பெரிய சாதனைகள் எதையுமே செய்யவில்லையே என்று கவலைப் படுகிறீர்களா? கவலையை விடுங்கள். நீங்கள் சாதனை புரிய இன்னும் பல ஆண்டுகள் இருக்கின்றன. அமெரிக்காவில் ஒரு ஆய்வு நிகழ்த்தப்பட்டது. பெரும் புகழ் வாய்ந்த 400 பேர் இந்த ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டனர். பெரிய அரசியல் வாதிகள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், போர் வீரர்கள் கூட இவர்களில் அடங்குவர். இவர்களில் 35 வீதமானோர் தமது பெரும் சாதனைகளை 60 -70 வயது காலத்திலும், 23 வீதமானோர் 70 - 80 வயது காலத்திலும், 8 வீதமானோர் 80 வயதுக்குப் பின்னரும் தங்களுடைய பெரிய சாதனைகளை நிறுவி புகழ் பெற்றவர்கள். எனவே அறுபது வயதாகி ஓய்வு பெற்று விட்டவர்கள் ஓய்ந்து விடாதீர்கள். உங்களுக்கு இன்னும் நிறைய எதிர்காலம் காத்திருக்கிறது.

ஒலிம்பிக் விளையாட்டு

1. ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடம் – கிரேக்கம்.
2. நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிக் கப்பட்ட ஆண்டு – 1896
3. நவீன ஒலிம்பிக் போட்டியைத் தோற்று வித்தவர் – பிரபு பியஸ்டி குயேற்றின்
4. ஒலிம்பிக் போட்டிகள் 4 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும்.
5. ஒலிம்பிக் போட்டிகளின் குறிக்கோள், விரைக, உயர்க, வலிமை பெறுக.
6. ஒலிம்பிக் கொடியின் நிறம் வெள்ளை.
7. ஒலிம்பிக் கொடியில் உள்ள 5 வளையங் கள் குறிப்பது ஐந்து கண்டங்களை.
8. ஒலிம்பிக் கொடியிலுள்ள வளையங்க ளின் நிறங்கள் கறுப்பு, நீலம், மஞ்சள் பச்சை சிவப்பு.
9. ஒலிம்பிக் கொடி அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு – 1920
10. ஒலிம்பிக் போட்டியின் போது வழங்கப் படும் பதக்கங்கள்
    முதலாம் இடம் – தங்கம்
    இரண்டாம் இடம் – வெள்ளி
    மூன்றாம் இடம் – வெண்கலம்
11. இலங்கைக்கு முதன் முதல் ஒலிம்பிக் பதக்கம் பெற்றுக் கொடுத்தவர் டங்கன் வைற்.
12. இலங்கைக்கு முதன்முதல் ஒலிம்பிக் பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்த வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க

வார்த்தைகள்... கவனம்

★ "ராமு... தீ பரீட்சையில் ஐந்து பத்தென்று புள் ளிகள் எடுத்திருக்கிறாய்... உனக்கும் படிப்புக் கும் வெகு தூரம். உன்ர தம்பியைப் பார்.வகுப் பில அவன்தான் முதலாம் பிள்ளை. இனி நீ வகுப்புக் கூட்டத்தான் சரி."

★ "ராமு... உனக்கு எல்லாத்திலும் அவசரம்தான். கொஞ்சமும் பொறுப்பில்லை... அக்கறையும் இல்லை. மேசையில தேநீர்க் கோப்பையை வைக்கிறன் எண்டு, மேசையில் இருந்த புத் தகமெல்லாத்தையும் நனைச்சு நாசப்படுத் திப் போட்டாய்... உன்னை என்ன செய்யிற தெண்டுதான் தெரியேல்ல..."

★ "ராமு, அவன் தம்பி போல கெட்டிக் காறனில்ல. அவனிட்ட கனக்க எதிர் பார்க்கக் கூடாது."

★ "ராமு .... என்ன விசர் வேலை செய்து வைச்சி ருக்கிறாய். உன்ர தம்பி எண்டா உப்பிடிச் செய்வானே?"

★ "ராமு.... நீ ஒழுங்காய்ப் படிக்காட்டி உன்ர வகுப்புப் பெடியங்கள் உன்னை 'மொக்கன்' எண்டெல்லோ பட்டம் சொல்லப் போறாங் கள். உன்ர தம்பியையும்மெல்லே உன்னைச் சொல்லி கேலி பண்ணுவாங்கள்."

ராமுவின் பெற்றோர் அவனை விமர்சிக்கும் வார்த்தைப் பிரயோகங்களே இவைகள். இவற்றைக் கேட்கும் ராமுவின் மனோநிலை எப்படித் தொழிற்படும்.

1. அவன் தன்னிரக்கத்துக்கு ஆளாவான்.
2. தாழ்வுச் சிக்கலுக்கு உட்படுவான்.
3. தன்னால் எதையுமே எப்போதும் செய்து முடிக்க இயலாது என்று எண்ணுவான்.
4. வாழ்க்கையில் ஒதுங்கிப் போக எண்ணுவான்.
5. தான் குறைகளாலேயே உருவாக்கப்பட்டவன் என்று உணரத் தலைப்படுவான்.
6. தன்னை ஈன்ற பெற்றோரையும், தன் உடன் பிறப்புக்களையும் வெறுக்கத் தொடங்குவான்.
7. தனிமையில் ஒதுங்கி இருப்பான்; அழுவான். தன்னைத் தானே வெறுக்கவும் தலைப்படு வான்.

இந்த ராமு வாலிபனாகி எப்படியோ ஒரு வேலையில் அமர்ந்ததும் அவன் செயற்பாடு கள் எப்படி இருக்கும்?

1. இந்தச் செயற்றிட்டம் சற்று சூழ்ப்பமாக உள்ளது. இன்னும் கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.
2. நான் எதையும் சிக்கலாக்கும் ஒரு மடையன். தயாரித்த முக்கிய அறிக்கையைக் கூட எங் கேயோ தவற விட்டு விட்டேனே!
3. குறித்த நாளுக்குள் என்னால் இந்தக் காரி யத்தை முடித்துக் கொடுக்க முடியாதே!
4. நான் எப்போதுதான் திருந்துவேனோ தெரியாது.
5. இந்தக் காரியத்தில் எனக்கு நிச்சயம் தோல் விதான் கிடைக்கும்.

பெற்றோர்களே! அடுத்தவருடன் சிறுபிள்ளை களை ஒப்பிட்டுப் பேசாதீர்கள். கொஞ் சம் அன்புடன் பிள்ளைகளை அணுகி வழி நடத்துங்கள்.

அன்னாசி

அன்னாசிப் பழத்தின் தாயகம் தென்ன மெரிக்காவின் பேரு நாடாகும். பழத்தினுள்ளே கெட்டியான சதையும் வெளியே சொர சொரப்பான தோலும் கொண்ட அன்னாசி சுவையான இனிய பழமாகும். அன்னாசிச் செடி கிளையில்லாத ஒரு தண்டாகும். கற்றாழைக்கு இருப்பது போன்ற இலைகள் உள்ளன. தண்டின் நடுவில் வளரும் பூங்கொத்தே காயாக மாறுகிறது. தென்னமெரிக்காவில் இருந்து ஸ்பானீயரால் அன்னாசி ஐரோப்பாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அறிமுகமாகியது. அன்னாசியில் சுமார் 90 வகைகள் உள்ளன. அன்னாசித் தோட்டம் ஒரு தடவை செய்தால் 10 ஆண்டுகள் வரை பலனளிக்கும். செங்காயாக அன்னாசியைப் பறித்தால் பழம் ஒரு மாதம் வரை பழுதடை யாதிருக்கும். அன்னாசி இலை களின் நாரிலிருந்து பிலிப்பைன் தீவில் பிஞா என்ற துணி செய்கி றார்கள். பழத்தின் கழிவுகள் கால்நடைகளுக்கு தீனியாக வும், காகிதம் செய்வதற்கான காகிதக் கூழாகவும் பயன்படுகி றது.

ஆப்பிளின் மேல் நிற்கும் இந்தக் குட்டிப் பாம்பு கீழே வர வழி காட்டுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடுப்பாட்டம் வலைப்பந்து

யாழ்ப்பாணம், ஏப். 24
கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டம், வலைப்பந்தாட்டம் என்பன இன்று காலை 8 மணி முதல் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

(ம-422)

கோப்பாய் எல்லேயில் சம்பியன்

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு உட்பட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான எல்லேயில் பெண்கள் பிரிவில் கோப்பாய் பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கோப்பாய் பிரதேசசெயலகஅணியை எதிர்த்து சங்கானை பிரதேச செயலக அணி மோதியது.

இரண்டு இன்னிங்ஸ்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்துது. முதலில் துடுப் பெடுத்தாடிய கோப்பாய் பிரதேச செயலக அணி 10 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய சங்கானை பிரதேச செயலக அணி 3 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக தொடர்ந்தும் விளையாடிய சங்கானை பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட பந்துகளில் ஒரு ஓட்டத்தை மாத்திரம் பெற்றதை அடுத்து 6 ஓட்டங்களால் கோப்பாய் பிரதேச செயலக அணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

(ம-422-108-23)

கோப்புப் படம்

அனித்தா மீண்டும் சாதனைப் பாய்ச்சல்

யாழ்ப்பாணம், ஏப். 24
இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்ட கோலூன்றி பாய்தலில் 23 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் மகாஜனக் கல்லூரி மாணவி ஜெ.அனித்தா புதிய சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் நேற்று முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. நேற்றுக் காலை நடைபெற்ற 23 வயதுக்குட்பட்டபெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில்தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த ஜெ.அனித்தா 3.40 மீற்றர் உயரத்துக்குப்பாய்ந்து புதிய சாதனையை பதிவு செய்து தங்கப் பதக்கத்தைக்கைப்பற்றினார். இவர் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற போட்டியொன்றில் 3.45 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்தமையே தேசியச் சாதனையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-422)

சென். அன்ரனிஸுக்கு இரண்டு பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 24
இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்ட சம்மட்டி எறிதலில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் பாசையூர் சென். அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை மாணவிகள் இருவர் வெள்ளிப் பதக்கத்தையும் வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் நேற்று நடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு சம்மட்டி எறிதலில் யாழ்ப்பாணம் பாசையூர் சென். அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த ஜே. சுகன்யா 19.44 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், அதே பாடசாலையைப்பிரதிநிதித்துவம் செய்த ஜே.மேரிலக்சனா 18.69 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். இதே பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த பி.மேரி ரதீனா 15.74 மீற்றர் தூரத்துக்கு எறிந்து ஐந்தாமிடத்தைகைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம-422-108)

மேரிலக்சனா 2091

சுகன்யா 2090

சாவகச்சேரி இந்து வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், ஏப். 24
இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்ட ஈட்டி எறிதலில் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி எஸ்.சங்கவி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் நேற்று நடைபெற்ற 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான ஈட்டி எறிதலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சங்கவி 33.05 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

(ம-422)

சங்கவி

கோலூன்றிப் பாய்தல் போட்டி; சாதித்தது சாவகச்சேரி இந்து

யாழ்ப்பாணம், ஏப். 24
இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தலில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி பி.கிரிஜா வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றினார்.

இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் தியகம ராஜபக்ச மைதானத்தில் நேற்று முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த பி.கிரிஜா 2.90 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-422)

கிரிஜா

ஞானவைரவர் அணி வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஏப். 24
அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழகமும், அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகமும் மோதிய ஆட்டத்தில் ஞானவைரவர் அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்று இந்த ஆட்டம் இடம் பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானவைரவர்அணிநிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சாரங்கன் 18 ஓட்டங்களையும், சயந்தன் 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அஜித் அதிகபட்சமாக 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

110 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக அணி 82 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்து 27 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக ரகீம் 20 ஓட்டங்களையும் அஜித் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கணாதீபன் 9 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

சிறந்த பந்து வீச்சாளராகவும் ஆட்டநாயகனாகவும் ஞானவைரவர் அணியின் கணாதீபன் தெரிவுசெய்யப்பட்டார். சிறந்த துடுப்பாட்ட வீரராக அளவெட்டி மத்தியைச் சேர்ந்த ரகீம், சகலதுறை வீரராக அஜித் ஆகியோர் தெரிவாகினர். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டத்தில் இருந்து பாதியில் வெளியேறியது யாழ். ஸ்ரார்

ஜொனியன்ஸுக்கு மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஏப். 24

நடுவரால் வழங்கப்பட்ட தீர்ப்பு தவறு என்று தெரிவித்து ஆட்டத்தின் பாதியில் இருந்து யாழ். ஸ்ரார் அணி வெளியேறியதை அடுத்து யாழ்ப்பாண மாவட்ட ஹொக்கித் தொடரின் மூன்றாவது இடத்தை பிடித்தது ஜொனியன்ஸ்.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். ஸ்ரார் அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணி மோதியது. யாழ். ஸ்ரார் அணி முதல் கோலைப் பதிவுசெய்தது. ஜொனியன்ஸ் அணி பதில் கோலைப் பதிவுசெய்த போது முறையற்ற நகர்வுகளாலேயே ஜொனியன்ஸின் கோல் பதிவானது என்று வாக்குவாதம் செய்து நடுவரின் தீர்ப்பை ஏற்க மறுத்து ஆட்டத்தில் இருந்து வெளியேறியது யாழ். ஸ்ரார் அணி. இதனால் சென். ஜொனியன்ஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (ம-23)

ஓல்ட் கோல்ட்ஸ் மகுடம் சூடியது

யாழ்ப்பாண மாவட்ட ஹொக்கிச் சங்கம் நடத்திய தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் அணி கிண்ணம் வென்றது.

சென். ஜேன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் ஓல்ட் கோல்ட்ஸ் அணி கிண்ணம்வென்றது. (ம-23)

குஜராத் மீண்டும் தோல்வி

ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப்பிடம் தோல்வியடைந்தது குஜராத் லயன்ஸ். இதுவரை 7 ஆட்டங்களில் விளையாடியுள்ள குஜராத் 2 வெற்றி, 5 தோல்வியுடன் கடைசி இடத்தில் உள்ளது. இதனால் அந்த அணி பிளே ஓவ் சுற்றிலிருந்து கிட்டத்தட்ட வெளியேறிவிட்டது என்றே கருதப்படுகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத், முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் அம்லாவின் அரைச்சதத்தின் உதவியுடன் 7 இலக்குகள் இழப்புக்கு 188 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக அம்லா 65 ஓட்டங்களையும், அக்சர் பட்டேல் 34 ஓட்டங்களையும், மக்ஸ்வெல் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரை 2 இலக்குகளையும், அகர்வால், நது சிங், ஜடேயா, சிமித் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய குஜராத் 7 இலக்குகள் இழப்புக்கு 162 ஓட்டங்களை மட்டுமே பெற்று 26 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் அக்சர் பட்டேல், கரிப்பா, சன்டீப் மூவரும் தலா ஓர் இலக்கையும், மொகித் சர்மா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

அருணோதயவுக்கு கிடைத்தது வெள்ளி

யாழ்ப்பாணம், ஏப். 24

இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தலில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் அருணோதயக் கல்லூரி மாணவி வ.சாத்வீகா வெள்ளி பதக்கத்தைக் கைப்பற்றினார்.

தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த வ.சாத்வீகா 2.90 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-422)

சர்ச்சை!

அமெரிக்காவின் பிரபல ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தற்போது கர்ப்பமாக உள்ளார். "செரீனாவுக்குப் பிறக்கப்போகும் குழந்தை வெள்ளை நிறத்தில் இருக்குமா அல்லது கறுப்பு நிறத்தில் இருக்குமா" என்று ருமேனியாவின் முன்னாள் வீரர் நாஸ்டாஸ் தெரிவித்து சர்ச்சையில் சிக்கியுள்ளார். செரீனா கறுப்பினத்தவர். அவரது கணவர் வெள்ளை இனத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

சகிப் அல் ஹசனிடம் தலைமை ஒப்படைப்பு

பங்களாதேஷ் ரி-20 அணியின் தலைவராக அந்த அணியின் சகலதுறை வீரர் சகிப் அல் ஹசன் நியமிக்கப்பட்டார்.

பங்களாதேஷ் அணி அண்மையில் இலங்கைக்கு எதிராகச் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. அந்த அணிக்குத் தலைவராக இருந்த மோர்ரசா அந்தத் தொடருடன் ஓய்வு முடிவை அறிவித்தார். புதிய தலைவராக எவர் நியமிக்கப்படுவார் என்ற எதிர்பார்ப்பு பரவலாக நிலவியது. சகிப் அல் ஹசனுக்கு அந்த இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

"மோர்ரசா ஓய்வின் பின்னர் தலைமைப் பதவியை சகிப் அல் ஹசனுக்கு கொடுப்பது என்று நாங்கள் முடிவெடுத்துள்ளோம். ஏனைய சில வீரர்களைப் பற்றியும் விவாதித்தோம். இறுதியில் நாங்கள் சகிப் அல் ஹசனை தெரிவுசெய்ய ஒப்புக்கொண்டோம்" என பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவர் நஸ்முல் ஹசன் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை சகிப் அல் ஹசன் மூன்று வகை ஆட்டங்களுக்கும் தலைவராகச் செயற்பட்டார். குறிப்பாக, இவரது தலைமையில் நான்கு ரி-20 ஆட்டங்களில் பங்களாதேஷ் விளையாடியுள்ளது. நான்கிலும் தோல்வியடைந்தது. இதையடுத்தே தலைமைத்துவம் இவரிடம் இருந்து முன்னர் எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

யங்கம்பன்ஸ் அணி சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 24

கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் இளைஞர் கழகம் சம்பியனானது.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் இளைஞர் கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி இளைஞர் கழகம் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யங்கம்பன்ஸ் அணி களத்தடுப்பை தெரிவுசெய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நவசக்தி அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டெஸ்மன் 15 ஓட்டங்களையும், அஜந்தன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தர்சன் 2 இலக்குகளையும் உதயசாந், மைந்தன் மற்றும் ரதன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். 44 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய யங்கம்பன்ஸ் அணி 4 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக உதயசாந் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும், மைந்தன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெல்லியை மடக்கியது மும்பை

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் தனது பந்துவீச்சுப் பலத்தால் டெல்லியை மடக்கியது மும்பை அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகள் இழப்புக்கு 142 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாகபட்லர் 28ஓட்டங்களையும், பொலார்ட் 26 ஓட்டங்களையும், பாண்டியா 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மிஸ்ரா, கும்மின்ஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும், ரபாடா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லியின் முன்வரிசை மும்பையின் பந்துவீச்சால் தகர்க்கப்பட்டது. 24 ஓட்டங்களுக்கு முதல் 6 இலக்குகளும் வீழ்த்தப்பட்டன. எனினும் மொறிஸ், ரபாடா துடுப்பாட்டத்திலும் ஆதிக்கம் செலுத்தினர் மொறிஸ் அரைச்சதத்தைப் பதிவுசெய்தார். 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும் டெல்லி அணியால் முடிவில் 128 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. 3 இலக்குகளைக் கைப்பற்றிய மக்கலிநகன் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)

வேலையாள்கள் தேவை
- மேசன், கூலி ஆள்கள் தேவை.
தொடர்புகளுக்கு.
0767806942 AJA 003473

பெங்களூர் மிகமிக மோசமான தோல்வி கொல்கத்தாவின் வேகப்பந்தில் மடிந்தது

கோக்லி, கெயில், வில்லியர்ஸ் உள்ளிட்ட எவரும் ஒற்றையிலக்கத்தைத் தாண்டவில்லை

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தாவின் வேகப்பந்துவீச்சைத் தாக்குப்பிடிக்க இயலாமல் 49 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து படுமோசமான தோல்வியைச் சந்தித்தது பெங்களூர்.

நாணயச் சுழற்சியில் வென்ற கோக்லிமுதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தார். கொல்கத்தாவின் ஆரம்ப வீரர்களாக கம்பீர் மற்றும் நரைன். முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே மிகையாக அடித்தாடினார் நரைன். அணி 48 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 14 ஓட்டங்களுடன் கம்பீர் ஆட்டமிழந்தார். நான்கு பந்துப்பரிமாற்றங்களில் கொல்கத்தா 50 ஓட்டங்களைத் தொட்டது. 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் நரைன். அவரின் ஆட்டமிழப்புடன் கொல்கத்தாவின் சராசரி அப்படியே படுத்துக்கொண்டது. உத்தப்பா, பாண்டே, யூசொப் பதான், வோக்ஸ் ஆகியோர் பதின்ம ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 19.3 பந்துப்பரிமாற்றங்களில் 131 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது கொல்கத்தா.

கோக்லி, கெயில், வில்லியர்ஸ் என்று அதிரடிப் பட்டாளத்தை வைத்திருக்கும் பெங்களூருக்கு இந்த இலக்கு பெரிய விடயமல்ல. ஆனால் இவர்களில் ஒருவர்கூட நிலைக்கவில்லை என்பதுதான் வருத்தத்துக்கு உரியது. ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்து தடுமாற்றத்தை ஆரம்பித்து வைத்தார் கோக்லி. அவரைத் தொடர்ந்து மன்டீப் சிங் ஒரு ஓட்டத்துடனும், கெயில் 7 ஓட்டங்களுடனும், வில்லியர்ஸ் 8 ஓட்டங்களுடனும் பவிலியனுக்குப் புறப்பட்டனர். மாற்றத்தை ஏற்படுத்த எவரும் எத்தனிக்கவில்லை. தடுமாற்றமே நீண்டு சென்றது. ஒருவர் கூட இரட்டை இலக்கத்தில் ஓட்டங்களைப் பெறவில்லை. பின்வரிசை வீரர்களும் அணியைக் காப்பாற்றத் தவற முடிவில் 49 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 82 ஓட்டங்களால் மிகவும் மோசமான தோல்வியைச் சந்தித்தது பெங்களூர்.

பந்துவீச்சில் கட்டர் நைல், வோக்ஸ், கிராண்ட்ஹோம், மூவரும் தலா ஓர் இலக்கையும், யாதவ் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (ம)

hp Special Promotion
NALIN Information Technologies Pvt Ltd.
மாணவர்கள் மற்றும் அரச பணியாளர்களுக்காக
hp யுடன் இணைந்து நளின் வழங்கும்
விசேட சலுகை
இச்சலுகை 29.04.2017 வரை மட்டுமே
hp Free Scratch Card
for HP 15-AY103TX

HP 15-AY103TX
Processor 7th Gen Intel® Core™ i5-7200U 2.5Ghz
Hari disk 1TB
Ram 4GB DDR4
VGA AMD Radeon 2GB Graphic
Drive DVD+/-RW Optical Drive
OS Windows 10
Dimensions 15.6"
DTS Studio Sound
Wlan & Bluetooth
Rs.82,900/=

HP 250 G5
Processor 6th Generation Intel® Core™ i3 -6006U (2.0 GHz, 3 MB cache, 2 cores)
Hari disk 500 GB SATA
Ram 4 GB DDR3L-1600 SDRAM
Drive DVD+/-RW SuperMulti DL
OS Free DOS
Dimensions 15.6" LED HD Display
Wifi + Bluetooth
Intel® HD Graphics
Rs.52,900/=

HP 15-BA010AU
Processor AMD Quad-Core E2-7110 1.8 GHz Processor
Hari disk 500 GB
Ram 4 GB DDR3L-1600 SDRAM
VGA AMD Graphic
Drive DVD+/-RW Optical Drive
Dimensions 15.6"
OS Free DOS
DTS Studio Sound
Wlan & Bluetooth
Rs.41,900/=

Nalin Free
Hp Laptop Bag,
Mouse
Screen Protective Sticker
மேலும் மேலதிக பொருட்களைக் கொள்வனவு செய்திட நளினுக்கு நேரடியாக விஜயம் செய்யுங்கள்.
மேலும் பல சேவைகளைப் பெற்றிடுங்கள்

நிபந்தனை அடிப்படையில் 3 வருட உத்தரவாதம் வழங்கப்படும்
* நிபந்தனைக்கு உட்பட்டது.
HP Authorized Business Partner in Northern Province
NALIN Information Technologies Pvt Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
No. 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121
077 766 7975

பாக். கிரிக்கெட் சபை கேட்டுக்கொண்டால் ஓய்வு முடிவு மறு பரிசீலனை

யுனிஸ்கான் கருத்து

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கேட்டுக் கொண்டால் தனது ஓய்வு முடிவு தொடர்பில் மீண்டும் பரிசீலனை செய்வேன் என்று அந்த அணியின் நட்சத்திர வீரர் யுனிஸ்கான் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடருடன் அந்த அணியின் தலைவர் மிஸ்பா, நட்சத்திர வீரர் யுனிஸ்கான் இருவரும் ஓய்வை அறிவித்துள்ளனர். இரு அனுபவ வீரர்களும் ஒரே நேரத்தில் ஓய்வு பெறுவதால் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் தளம்பல் ஏற்படும் என்று கருதப்படும் நிலையில் யுனிஸ்கான் இவ்வாறு தெரிவித்தார்.

"என்னால் இன்னும் அதிகமான ஆட்டங்களில் விளையாட முடியும். ரசிகர்கள் இவர் ஓய்வு பெற வேண்டும் என்று நினைப்பதை விட, நான் தொடர்ந்து விளையாட வேண்டும் என்று அவர்கள் தற்போது விரும்புகின்றனர். எனவே ஓய்வு பெறுவதற்கும் சரியான நேரம் இதுவே. அதேநேரம் அணிக்கு தேவை என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விரும்பினால், என்னுடைய ஓய்வு முடிவு குறித்து பரிசீலனை செய்வேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.